www.padippakam.com

JUDE

Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20 ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් ஏப்.25-மே.01,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 306

## துரையப்பா அரங்கு சூத்திரதாரிகள் யார்? தோண்டலும் – மறைப்பும்

## குடாநாட்டில் இரும்புப் பிடி!

## கண்டி நகரில் குண்டு மர்மம்




கூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## புதிய கூட்டு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

மாகாணசபைத்தேர்தலில்
பேரினவாத கட்சிகள்
உயிர் பெற்றுள்ளன!

கடந்த பொதுத் தேர்தலில்
படு தோல்வி கண்ட
எம். ஈ. பி. எனப்படும்
மக்கள் ஐக்கிய முன்னணி
ஆசனங்களைப் பிடித்திருக்கிறது!

யுத்தம் தொடர்பான
பெருமிதமான பிரசாரங்கள்
பேரினவாதத்தையும்
உசுப்பிவிட்டுள்ளன!

இனவாதிகளை எதிர்த்து
வெற்றிவாகை சூடியதாக
ஜனாதிபதி சந்திரிக்காவை
ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு
பலரும் பாராட்டினார்கள்!

ஆனால் இன்று
அதற்கு நேர்மாறான
நிலவரமே தோன்றியுள்ளது!

மேல் மாகாணசபையில்
மக்கள் ஐக்கிய முன்னணியின்
ஆதரவை நாடியுள்ளது
பொதுஜன முன்னணி!

அதுமட்டுமன்றி
10.04.1999 அன்று
அரச பிரசார சாதனங்கள்
பெருமையுடன் கூறிய
செய்தியும்
ஆழ்ந்து நோக்கத்தக்கது!

சிறீலங்கா முற்போக்கு முன்னணி
பொது ஜன முன்னணியுடன்
இணைந்து செயற்பட
முன்வந்துள்ளது என்று
செய்திகளில் தெரிவிக்கப்பட்டது!

சிறீலங்கா
முற்போக்கு முன்னணி என்பது
கடைந்தெடுத்த
பேரினவாதக் கட்சியாகும்!

'தமிழ் பேசும் மக்களுக்கு
இங்கு எப்பிரச்சனையும் இல்லை'
என்று அக்கட்சி
கூறிவருகிறது!

இன்றைய அரைகுறை
பொதியைக்கூட
அக்கட்சி ஏற்கவில்லை!

இவ்வாறான கட்சியுடன்
பொதுஜன முன்னணி
கூட்டுச் சேர்ந்திருக்கிறது!

சிறீலங்கா சுதந்திரக்கட்சியில்
'ஹெல உறுமய' என்னும்
இனவாதப்பிரிவு
முன்னர் செயற்பட்டது!

இப்பிரிவினரில் சிலர்
ஐ.தே. கட்சிக்குள்
அநுராவோடு போனார்கள்!

பொதுஜன முன்னணியின்
தற்போதைய பொதுச்செயலாளரும்
'ஹெல உறுமய'
முன்னாள் உறுப்பினர்தான்!

ஐக்கிய தேசியக் கட்சிக்குள்
ஹெல உறுமயக்காரர்கள் தான்
தற்போதும்
இனவாதம் பேசி வருகின்றனர்!

பொதுஜன முன்னணிக்குள்ளும்
இனவாத சக்திகளது
கைகள் ஓங்கிவருகின்றனவா?
என்ற கேள்வியே
இன்று எழுந்திருக்கிறது!

ஜனாதிபதித் தேர்தலை
மனதில் கொண்டே
இந்தக் கூட்டு
உருவாகியுள்ளது!

சிறீலங்கா முற்போக்கு
முன்னணியின்
வாக்கு வங்கி
எப்படிப்பட்டது?

முற்று முழுதான
கலப்படமில்லாத
பேரினவாதிகளைக் கொண்டது!

1994ம் ஆண்டில்
பேரினவாதத்தை சாடியவர்கள்
தற்போது பேரினவாதத்தை
நாடிப் போயிருக்கிறார்கள்!

தமது வெற்றிக்காக
பேரினவாதத்தை நாடிய
முன்னைய ஆட்சியாளர் போன்றே
இன்றைய ஆளும்தரப்பும்
தன்பாதையை
அமைத்துக்கொள்ள
ஆரம்பித்துள்ளது!

இந்நிலையில்
தமிழ் பேசும் மக்களை
திருப்தி செய்யக்கூடிய
தீர்வொன்றை
முன்வைக்கும் ஆற்றலை
ஆளும் தரப்பு
இழந்து வருகிறது!

சிறீலங்கா
முற்போக்கு முன்னணி
போன்ற கட்சிகள்
மாகாணசபை அதிகாரமே
தமிழ் மக்களுக்கு அதிகம்
என்று கூறுகின்றன!

பேரினவாதச் சக்திகளின்
தயவில் தேர்தலை
எதிர்கொள்ளத் தயாராகும்
ஆளும் தரப்பால்
இந்த ஜென்மத்தில்
தீர்வை முன்வைக்கமுடியாது!

எனவே இனிமேலும்
இங்கு பிரச்சனைகளை
தீர்க்கலாம் என்று
காத்திருப்பது
பேரினவாதப் பூதம்
நம்மை விழுங்க நாமே
கொடுக்கும் கால அவகாசமேயாகும்!

வெறுமனே மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் என்று
கோரிக்கை விட்டால் போதாது!

அதற்குரிய
அழுத்தங்களைக் கொடுப்பதே
இன்றைய தேவை!

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை* — *என்றென்றும் அன்புடன், ஆசிரியர்*

# ஆன்மீகம்

## அருளுரை

“விதையும், அதிலிருந்து கிளம்பி வரும் முளையும் மெல்லியவை. ஆயினும் கடினமான பூமியைத் துளைத்துக்கொண்டு செல்கின்ற ஆற்றல் அதற்குண்டு. அதுபோன்று இறைவனது திருநாமம் கல்நெஞ்சத்தையும் பண்படுத்துகிறது.

வெந்து அவிந்த நெல் மறுபடியும் முளைக்காது. அவிந்த நெல் போன்றவன் ஞானி. அவனுக்கு மறுபிறப்பில்லை. பறவைகளும், துறவிகளும் நாளைக்கென்று எதையும் தேடிவைப்பதில்லை. ஆனால் இல்லறத்தார் பொருள் சேர்த்தேயாகவேண்டும்.

பட்டாணிக் கடலை ஒன்று சாணக்குழியில் முளைத்தாலும், பட்டாணியின் இயல்பை அது இழப்பதில்லை. அதேபோன்று சான்றோர் கீழ் குடியில் பிறந்தாலும் அவர்களின் மேலான இயல்புகள் அழிவதில்லை.

ஒட்டகம் ஒன்று முள்செடியைத் தின்று வாயினின்று இரத்தம் சொட்டினாலும், முட்செடியை தின்பதை அது நிறுத்துவதில்லை. மனிதர்கள் பல துன்பங்களை அனுபவித்தபோதிலும் உலகப் பற்றை அவர்கள் விடுவதில்லை. ஒரு சிறுமேகம் சூரியனையே மறைத்துவிடுகிறது. அதைப்போல மாயையானது இறைவனை நம் பார்வையிலிருந்து மறைத்து விடுகிறது.

கங்கைக்கு அருகில் வர வர குளிர்ச்சியுண்டாகிறது. அதைப்போல, கடவுளுக்கு அருகில் வர வர அமைதியுண்டாகிறது.

தொகுப்பு: கொஸ்லாந்தை எஸ்.என். ராஜரட்ணம்.



## சிறந்தவர் யார்?

இமாம் ஜஃபர் சாதிக் (ரலி) அவர்களிடம், ஹஜ்ஜுக்குப் போய் திரும்பிய அவரது நண்பர்கள் சிலர் வந்து தமது பிரயாண அனுபவங்களைச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் அவர்களோடு வந்த ஒரு மனிதரைப் பற்றி வணக்கவாளி, இறையச்சமுள்ளவர் என்று புகழ்ந்தனர். “அவரது நட்பு எமக்கு கிடைத்தது பாக்கியமே. எங்காவது நாம் தங்க நேரிட்டால் அவர் ஒதுக்குப் புறமாயிருந்து தனது வணக்க வழிபாடுகளிலேயே ஈடுபடுவார்.” என்றும் ஒருவர் அம்மனிதரைப் பற்றி மெச்சிக் கூறினார்.

“அப்படியென்றால், அவரது ஏனைய வேலைகளையெல்லாம் கவனித்தது யார்?” என்று கேட்டார்கள் இமாமவர்கள்.

“அவர் இபாதத்திலல்லவா மூழ்கியிருந்தார். அவரது ஏனைய வேலைகளையெல்லாம் நாமேதான் கவனித்தோம் பெரியவரே!” என்றார் அவர்.

“அப்படியென்றால், அவரை விட நீங்களே மிகச் சிறந்தவர்கள்!” என்றார்கள் இமாமவர்கள்.

தொகுப்பு: ஜப்பார் எம். ஜெஸீல், சாய்ந்தமருது-08.

## கவிதைப் போட்டி இல.303

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



### பரிசுக்குரிய கவிதை

#### பரிசு

இந்துவின் முத்தென்று
பேரெடுத்த இலங்கைக்கு
போர் கொடுக்கும்
எதிர்கால இயற்கைவளம்!!!

கிரிசாந்தி சந்திரகலா-
புதிய வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.

### பயன்

மரம் பட்டால்
பயனுண்டு!
மனிதன் பட்டால்..!
பயனுண்டா...?

கயல்வண்ணன்-
வவுனியா.

### விரக்தி

காணாமற் போனோர்
புதையுண்ட மண்ணில்
பட்டுப்போன
போதி மரங்கள்!

அ. சந்தியாகோ-அசோகா
வித்தியாலயம், கண்டி.

### பட்ட ம(ன)ரம்

இங்கே...
பட்டு நிற்பது
மரங்கள் மட்டுமல்ல..!
எங்கள் மனங்களும்தான்!

இரா. இரமேஷ்குமார்-
டெஸ்போட், நானுஓயா.

### பட்ட கதை

மாதம் மும்மாரி
பொழியவில்லை
நாளும் ஷெல்மாரி
பொழிந்ததால்
உருமாறினோம்!

வை. சித்திக்கிருஷ்ணா-
பாண்டிருப்பு-01.

### 'மீண்டும்...என்றோர் நம்பிக்கையில்...'

இலைகள் உதிர்வதால்
கிளைகள் உலர்வதால்
நாங்களென்றும்
கூனிப்போய் விடுவதில்லை.
ஏனென்றால்-
இன்றுகளில் மாண்டுபோன
வசந்தம்
நாளைகளில் மீண்டுவிடக் கூடும்!

ஏ.எல். பர்வீன்-சந்தைவீதி, ஒட்டமாவடி

### உண்மை

இலையுதிர்த்த மரம்போல்
கொள்கை விட்ட கட்சிகளும்
பட்ட மரமது போல்
உணர்ச்சியற்று போனவரும்
இருந்தெம்மை வழி நடத்தி
நாம் காணும் சுகமென்ன?
மரமேனும் பசுமையிலும் பட்டபின்னும்
பயன் தந்து வாழ வைக்கும்.

ம. திருவரசுராசா-வவுனியா.

### பறக்கும் துன்பம்

இலையில்லாத மரங்கள் இரண்டு
இணைபிரியாமல் வாழ்வதைப் பார்க்க,
துணையில்லாத மனிதர்கள் பலரது
துன்பமனைத்தும் பறந்து போகாதோ!

அ.ச. அஹமத் சியாத்- நிந்தவூர்-11

### சாபத்தின் சான்று

செந்தமிழும் செந்தணலில்
புழுவான நிலையதுவோ!
செந்தளிரை இழந்த மரம்
எம் தமிழர்க் கொப்பாமே!
போர் மேகம் ஓயு மட்டும்
மரமும் துளைக்காதே!
செடி கொடியும் முளைக்காதே!
மனிதம் தினம் மரிக்கும்
மண்டையோடு நிதம் குவியும்!

தர்ஷிகா கனகசிங்கம் 'கடாட்சம்'-
கல்லடி- வேலூர், மட்டக்களப்பு.

### இரங்கலுரை

அனைத்தும் இழந்து நிற்கும்
அகதித் தமிழருக்காக
இலைகளை உதிர்த்து நின்று
இரங்கல் உரை நிகழ்த்துகின்றோம்!

திருமதி வி. கந்தசாமி- குருமன்காடு,
வவுனியா.



## கவிதைப் போட்டி இல.306



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 01.05.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.306
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## சுயநலவாதிகள்

தலைவர் கைதானால் என்ன? பொது மக்கள் கொல்லப்பட்டால்தான் என்ன? தம் சுயநலத்திற்காக புலி என்று பொதுமக்களையும் காட்டிக்கொடுக்கும் இவர்கள் தமக்குத் தாமே குழி தோண்டுகிறோம் என்பதை மறந்து விடுகிறார்கள்.

ராஜா, அக்கரையூர்-8.

## எம்மால் உதவ முடியும்

இன்று வன்னியிலும் மடுப்பகுதியிலும் அல்லலபடும் எமது உடன்பிறப்புக்களுக்கு உதவுவது எமது வரலாற்றுக் கடமைதான். உதவாமல் விட்டால் நாமெல்லாம் வரலாற்றுப் பழிக்கு ஆளாவோம் என்பதும் உண்மைதான். எனவே அந்த வரலாற்றுக் கடமையைச் செய்ய எமக்கும் ஒரு வாய்ப்புத் தரலாமே? இவர்களுக்காக நிதிசேகரிக்கும் தொண்டர் ஸ்தாபனங்கள் பத்திரிகைகள் வாயிலாக தெரியப்படுத்தினால், வங்கிக் கணக்கு இலக்கங்களை அறியத்தந்தால் எம்மால் இயன்ற உதவியைச் செய்ய இயலுமே?

எஸ். ஸ்ரீகாந்த், கட்டார்.



## இரும்பு மனிதன் சதாம்

*அன்பின் முரசே!*

உனது இருபது பக்கங்களிலும் ஒன்றையும் தவற விடாது சுவைக்கும் இலட்சக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். 34 வாரங்களாக, இரும்பு மனிதனின் (சதாம்) துணிகரச் செயலை துணிந்து வெளியிட்ட உன்னை பாராட்டாமல் இருக்க முடியுமா? ராஜையாவுக்கும் பாராட்டுக்கள்.

து. ரவீகரன், புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

## அதன்பின்னரே அறிக்கை!

முரசுக்கு,

தேர்தல் நடந்து முடியும்வரை மடுமாதா கோவில் பகுதி பற்றி ஒரு வார்த்தைகூட தமிழ்க் கட்சிகள் கூறவில்லையே. அதன்பின்னர்தான் அறிக்கை விட்டன. தங்கள் தந்திரங்கள் தமிழ் மக்களுக்குத் தெரியாது என்றா நினைத்து விட்டனர்?

ஆர். கென்னடி, மடு.

## வீரப்பெண்

சோவியத் யூனியனின் 'தான்யா' உண்மையிலே ஒரு துணிச்சல் மிகுந்த வீரப் பெண்தான். இதைவிட நம் நாட்டிலும் பல வீரப் பெண்கள் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றார்கள்.

கரவெட்டி சதீஸ்,
கருவேப்பங்கேணி.

அன்பின் முரசே! உனது ஒவ்வொரு பக்கங்களும் வெவ்வேறு சுவையுடன் வந்து என்னை மகிழ்விக்கின்றன. நீ எனது கையில் கிடைக்க ஒரு வாரம் காத்து கிடக்க வேண்டியுள்ளது. எனது ஏக்கத்தை தீர்ப்பாயா?

நீ ஆரம்பத்தில் எனது கைகளில் கிடைக்கும் போது உன்னைப்பற்றிய அபிப்பிராயம் நண்பர்கள் மத்தியில் வேறாக இருந்தது. தொடர்ந்து உன்னை வாசிக்கும்போதுதான் அவர்களும் இப்போது நன்குணரத் தலைப்பட்டுள்ளனர்.

பீ.டி. வின்சென்ற், சுவிற்ஸர்லாந்து.

## 'மரியம்மா' கப்பல்கதை

*அன்பு முரசே!*

'மரியம்மா' என்ற கப்பலில் புலிகளுக்கு ஆயுதம் வந்ததாகவும், கப்பலை மூழ்கடித்து விட்டதாகவும் கூறுவதை நம்பமுடியவில்லை. இந்திய பாதுகாப்பமைச்சருக்கு நெருக்கடி கொடுப்பதற்கான கட்டுக்கதையை சில இந்தியப் பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன என்று நினைக்கிறேன். 'முரசு' அதனால்தான் அது பற்றி எதுவும் குறிப்பிடவில்லையா?

கே. நரேந்திரன், கொழும்பு-09.

## எப்படியும் வாழலாமா?

'சதாம் உசேன்' கதை நன்றாக இருந்தது. எப்படியும் வாழலாம் என்றால் உலகில் போராட்டங்களே ஏற்பட்டிருக்காது. அடிமைகளாக- பலம் உள்ளவனுக்கு பணிந்து வாழ்ந்து மடிந்திருப்பர். கௌரவத்திற்கு பங்கம் நேர்ந்தால் எதிர்த்து வாழ்வதே மனிதப் பண்பு. அதைத்தான் சதாம் செய்திருக்கிறார். இங்குள்ள தமிழ்க் கட்சிகள் சதாம் கதையை படித்திருக்கலாம்.

பி. வாமதேவன்,
திருமலை.

*அன்புடன் ஆசிரியர்:*

நான் ஒரு இந்திய மதுரைத் தமிழன். நான் 6 வருடங்களாக சுவிற்ஸர்லாந்தில் வசித்து வருகின்றேன். தினமும் ஒவ்வொரு வெள்ளியும் உங்கள் பத்திரிகையை எதிர்பார்த்த வண்ணம் இருப்பேன். ஏன் என்றால் இலங்கை பிரச்சனையை ஆராய ஆவலாக இருக்கும். நான் உங்கள் பத்திரிகையின் இரசிகனாகி விட்டேன். தொடர்ந்து உங்கள் பத்திரிகை (எங்கள் பத்திரிகை) வெற்றி நடைபோட வாழ்த்துகின்றேன்.

எம். செல்வராசா,
சுவிற்ஸர்லாந்து.

*அன்பின் முரசே!*

நாட்டின் நடப்பினை இங்கிருந்து அறிந்த வண்ணம் உள்ளேன். இங்கிலாந்து நாட்டில் ஆங்கிலத்தில் படிக்கும் எனக்கு தமிழ் தாயில் அன்பு அதிகம்.

உன்னைப் பெற நான் படும் துன்பம் எனக்குத்தான் தெரியும். காரணம் நான் இருக்கும் இடத்தில் நீ இருப்பதில்லை. அதனால் நீண்டதூரம் பயணம் செய்து உன்னை வாரா வாரம் பெற்று வருகிறேன்.

மற்றும் அற்புதனின் அற்புதமான தொடரும், நாரதரின் தொடர் அரசியல் நிலைமைகளும் என்னைக் கவர்ந்தன!

யாழ் விநோப்பிரியன்,
பிரித்தானியா.

## தபால்காரர்களா?

*முரசே!*

வலிகாமம் காணி சுவீகரிப்புப் பற்றி ஜனாதிபதி எதுவும் கூறவில்லை. ஆனால் ஜனாதிபதி கூறியதாக தமிழ்க் கட்சிகள் மட்டும் செய்திகளை கூறிவருகின்றன. தமிழ் மக்களுக்கு தகவல் அனுப்ப ஜனாதிபதியின் தபால்காரர்களாக இக்கட்சிகள் மாறிவிட்டனவோ?!

எம். சுந்தரம், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

www.padippakam.com

# குண்டு கொண்டு சென்றவர் பலியானார்!

## இலக்கு எது என்று ஆராய்வு!

கண்டி குட்ஷெட் மத்திய பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பேருந்தில் 11.04.99 அன்று குண்டு வெடித்தது தெரிந்ததே. இதுபற்றி தற்போது வெளியாகியுள்ள விபரங்கள் வருமாறு:

இக் குண்டுவெடிப்பு நடைபெற்ற பஸ் வண்டி கண்டியில் இருந்து கதுறுவெலவுக்கு செல்லவிருந்தது.

மட்டக்களப்புக்கு அருகே இருக்கும் எல்லைப்பகுதியே கதுறுவெல. எனவே மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கு குண்டை கொண்டு சென்று, பின்னர் அங்கிருந்து கதுறுவெலவுக்கு கொண்டு செல்லும் தேவை இருந்திருக்காது.

எனவே வேறொரு இலக்கு நோக்கி கொண்டு செல்லப்பட்ட குண்டே வெடித்துள்ளதாக தெரிகிறது.

கண்டியில் வைத்து இன்னொருவரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டுவரப்பட்ட குண்டே வெடித்திருக்கிறது. குண்டை பொறுப்பேற்று செல்ல வேண்டியவர் குறித்த நேரத்தில் வரத்தாமதமானதால், கதுறுவெலக்கு கொண்டு சென்று, அங்கிருந்து மட்டக்களப்புக்கு மறுபடி கொண்டு செல்ல நினைத்திருக்கலாம். அதற்காக குண்டுப் பொதியை பஸ்சுக்குள் வைத்திருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இதனால் கண்டி நகரின் முக்கிய பகுதிகள், மற்றும் கேந்திர நிலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு குண்டுத் தாக்குதலுக்கு புலிகள் குறிவைத்த இலக்கு எதுவென்பது குறித்தே தற்போது பொலிசாரும், இரகசியப் பொலிஸ் பிரிவினரும் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் கவனிப்பாளராக கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பொளை-வெலம்பொட என்னும் இடத்தில் வசித்து வந்த மு. சித்தி பரீதா என்னும் பெண்மணியும் கைதாகியுள்ளார். முத்துலிங்கம் இராஜேஸ்வரி என்னும் பெயருள்ள இவர் பின்னர் இஸ்லாமிய மதத்துக்கு மாறியிருந்தார்.

தோட்டப் பகுதிகளிலும் தேடுதல்கள் நடத்தியபோது கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே சித்தி பரீதா கைதானதாக தெரிவிக்கப்படுகிறது.

### கொண்டுவந்தது யார்?

பஸ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர்மீதே குண்டை கொண்டு வந்ததாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அவர் புலிகள் இயக்க உறுப்பினரல்ல. கண்டி சார்ந்த பகுதிகளுக்கு தொழில் நிமித்தம் வந்து செல்பவராம். அவரிடம் மட்டக்களப்பில் வைத்து குண்டு ஒப்படைக்கப்பட்டது. கண்டி பஸ் நிலையத்தில் வேறொருவரிடம் குண்டை ஒப்படைக்குமாறு கூறப்பட்டிருந்ததாம். குண்டை பொறுப்பேற்க யாரும் வராததால் கதுறுவெலவுக்கு திரும்ப செல்ல எத்தனித்ததாக நம்பப்படுகிறது.

தற்போது கதுறுவெலவில் இருந்து கண்டிக்கு செல்லும் பஸ் வண்டிகள் தீவிர சோதனைக்கு உள்ளாகின்றன. ■

# இலங்கைத் தீவில் இன்னொரு கொசோவோ!

# இலங்கைத் தமிழர் அமைப்புக்கள் பிரசாரம்

## சர்வதேச தலையீட்டைக் கோரி ஆர்ப்பாட்டம்

**கொசோவோ பிரச்சனையில் அமெரிக்கா தலையிட்டதையடுத்து, இலங்கை இனப்பிரச்சனையில் சர்வதேச தலையீட்டை கோருவதை புலிகள் முடுக்கிவிட்டுள்ளனர். புலிகளது சர்வதேச கிளைகளும், வெளிநாடுகளில் உள்ள தமிழர் அமைப்புக்களும் அக் கோரிக்கையை எழுப்பியுள்ளன.**

கொசோவோவில் இனப் படுகொலைகளை தடுத்து நிறுத்தவே தாம் தலையிட்டதாகவும், யூகோசுலாவியாமீது குண்டுத் தாக்குதல் நடத்துவதாகவும் அமெரிக்கா கூறிவருகிறது.

'இனப்படுகொலைக்கு எதிராக அல்பேனியர்கள் கிளர்ந்தெழுவதை தடுப்பதற்காக, அந்த இன ஆண்களை சேர்பிய படைகள் கொன்று குவித்தன. புதைகுழிகளுக்குள் புதைத்தன' என்று அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்து அமெரிக்க முன்னாள் பிரபல வெளிநாட்டமைச்சரான ஹென்றி கீசிங்கர் தெரிவித்த கருத்து புலிகளுக்கு உற்சாகமளித்துள்ளது.

"கொசோவோ பிரச்சனையில் அமெரிக்கா தலையிட்டிருப்பதால், ஆப்கானிஸ்தான் சிறுபான்மையினர் மற்றும் இலங்கைத் தமிழர்கள் விடயத்திலும் அமெரிக்கா நீதிபெற்றுத் தர வேண்டும்" என்று கூறியிருந்தார்.

### தலையிட வேண்டும்

இத்னையடுத்து புலிகளது வெளிநாட்டுக் கிளைகள், இலங்கையில் தமிழ் மக்கள் இன சுத்திகரிப்புக்கு உள்ளாவதை தடுக்க அமெரிக்கா தலையிடாதது ஏன்? என்று கேள்வி எழுப்பியுள்ளதோடு, சர்வதேச தலையீட்டையும் கோரிவருகின்றன.

அமெரிக்காவில் உள்ள ஈழத் தமிழர் அமைப்புக்களைச் சேர்ந்த சிலரும் இது தொடர்பாக அமெரிக்க இராஜதந்திரிகள் சிலரை சந்தித்து பேசியுள்ளனர்.

"இலங்கையில் இன ஒதுக்கலுக்கு எதிராக போராடிவரும் புலிகளை அமெரிக்கா தடை செய்துள்ளது." அதே காரணத்துக்காக போராடும் அல்பேனியர்களுக்காக சண்டையில் இறங்கியுள்ளது என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கை அரசு சர்வதேச தலையீட்டை நிராகரித்து வருகிறது. அதேசமயம் கொசோவோ இன் சுத்திகரிப்பை கண்டித்தும் இருக்கிறது. இந்த கண்டனம் இன்னொரு நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகாதா? எனவே இலங்கை அரசு சர்வதேச தலையீட்டை தாம் மட்டுமே மறுதலித்து வருவது முறையற்றது என்றும் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனராம்.

### ஆர்ப்பாட்டங்கள்

கொசோவோவில் அமெரிக்கத் தலையீட்டை ஆதரித்துள்ள ஐரோப்பிய நாடுகளின் தலைநகர்களில் இலங்கையில் சர்வதேச தலையீட்டை கோரி ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது பற்றியும் அங்குள்ள தமிழர் அமைப்புக்கள் ஆலோசித்து வருகின்றன.

"கொசோவோவில் மட்டுமே புதைகுழிகள் இருப்பதாக அர்த்தமல்ல. இலங்கையில் தமிழர் பகுதிகளும் இன்னொரு கொசோவோ போன்றே திகழ்கின்றன" என்று ஃபிரான்ஸில் உள்ள தமிழர் அமைப்புக்கள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன.

### டென்மார்க்கில்

கடந்த 17.04.99 அன்று டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்கேஹனில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப்பேரணியில், இலங்கை தேசிய இனப்பிரச்சனையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்பது பிரதான கோஷமாக முன்வைக்கப்பட்டது. ■

# எதிர்கால சுவீகரிப்புக்கு திட்டம்

## புல்டோசரால் வீடுகள் இடிப்பு!

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

காப்பரண்கள் அமைப்பதற்காக வீடுகளது தளபாடங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

புல்டோசர்கள் மூலமே வீடுகள் இடித்துத் தள்ளப்பட்டுள்ளன. ஒட்டுசுட்டானில் மட்டுமல்ல, வன்னியின் பல பகுதிகளில் இவ்வாறு வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

தற்போது இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மறுபடி இப்பகுதிகளில் குடியேற முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியிலும் இவ்வாறே வீடுகள் புல்டோசரால் தரைமட்டமாகின.

அங்கு வீடுகள் இல்லை எனக் கூறியே அப் பகுதி மக்கள் வேறு பகுதிகளில் தங்க வைக்கப்பட்டனர். பின்னரே அப் பகுதிகளை சுவீகரிக்கும் திட்டம் உருவானது.

தற்போது வன்னிப் பகுதிகளிலும் வீடுகள் இடிக்கப்படுவதால் அதேபோன்ற நிலை அங்கும் உருவாகக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

# துப்பாக்கி ரவையும் இந்தியப் படையும்

துரையப்பா விளையாட்டரங்க பகுதியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மத்தியில் எஸ்.எல்.ஆர். துப்பாக்கி ரவையும் கண்டெடுக்கப்பட்டது. எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளையே இந்தியப் படையினர் பெரும்பாலும் பாவித்தனர். எஸ்.எல்.ஆர்.ரக துப்பாக்கிகளை இலங்கை படையினரோ, இயக்கங்களோ பாவிப்பது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏ.கே.47 துப்பாக்கிகளைவிட எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகளையே இந்தியப் படையினர் யாழ்ப்பாணத்தில் அதிகம் பயன்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளியூர் தமிழர்களுக்கு அனுமதியில்லை!

கண்டியில் சமீபத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பை அடுத்து கண்டி நகரிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் தமிழர்கள் மீது கெடுபிடி அதிகரித்திருக்கிறது.

வெளியூர்களிலிருந்து வரும் தமிழ் பேசுவோருக்கும் தங்குவதற்கு இடமளிக்க வேண்டாமென்று விடுதிகள் மற்றும் வீட்டு உரிமையாளர்களைப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

தங்கும் விடுதிகளுக்கும், வீடுகளுக்கும் இரவிரவாகச் சென்று சோதனையிடும் பொலிஸார் வெளியூர்களிலிருந்து தமிழ் பேசுவோர் யாராவது வந்து தங்கியிருந்தால் அவர்களது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டு பொலிஸ் நிலையம் வருமாறு கூறுகின்றனர்.

தமது வைத்திய மற்றும் அத்தியாவசியத் தேவைகளின் நிமித்தம் கண்டிக்கு வரும் வெளியூர் தமிழ்பேசுவோரின் கதி மிக மோசமடைந்துள்ளது. சோதனைகளும் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

# புலிகள் தீட்டிய திட்டம்

## படையினர் உஷார் நிலை

(மட்டுநகர் நிருபர்)

மட்டக்களப்பு-கொம்மாதுறை படை முகாமிலேயே ஈ.பி.ஆர்.எல்.எஃப்.இன் றாசிக் குழுவினர் தங்கியிருந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

றாசிக்குழுவினர் இந்த முகாமிலிருந்து தாம் விரும்பிய நேரத்தில் வெளியே செல்வதும் உள்ளே நுழைவதும் வழக்கமான நடவடிக்கையாகும்.

இதைத் தக்க தருணமாகப் பயன்படுத்த எண்ணிய புலி இயக்கத்தினர் சில திட்டங்களை வகுத்து றாசிக் குழுவினர்போல் நடித்து படை முகாமின் உள்ளே நுழையத் திட்டம் வகுத்திருந்ததாக படைத் தரப்பினர் கூறுகின்றனர்.

சில தினங்களுக்கு முன்னர் கொம்மாதுறைப் படை முகாமுக்கருகே எட்டுப்பேர் கொண்ட ஒரு குழுவினர் வந்து நடமாடினர். இதில் சந்தேகம் கொண்ட காவலரணிலிருந்த படைவீரர்- விசாரித்தபோது தாங்கள் றாசிக் குழுவினர் எனக் கூறினராம். மேலும் சந்தேகம் எழவே, அவர்களை அழைத்து விசாரிக்க முற்பட்ட பொழுது, மிகச் சாதுரியமாக அந்த எட்டுப்பேரும் மதிலைத் தாண்டிக் குதித்துத் தப்பியோடிவிட்டனராம்.

றாசிக் குழுவினர் தமிழையே கதைப்பதால் அதே பாணியிலேயே வந்து மேலும் தாக்குதல் நடத்தும் திட்டத்தைப் புலிகள் ஆயத்தப்படுத்தும் தகவல் தமக்குக் கிடைத்திருப்பதாக படை அலுவலர் தெரிவித்தார்.

# பேரணியில் குமார்

டென்மார்க்கில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆர்ப்பாட்டப் பேரணியில் குமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

"தமிழ் மக்கள் வரலாற்றின் ஒரு திருப்பு முனையான காலகட்டத்தில் நிற்கின்றனர். இத் தருணத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பின்பலமாக நிற்க வேண்டும்!" என்றும் அவர் கூறினார்.

டென்மார்க் தமிழ் அமைப்புக்களது ஒன்றியத் தலைவர் பூபாலசிங்கம், ஒன்றியச் செயலாளர் திருமதி டோரிற் புரோசிலியஸ் உட்பட பலர் உரையாற்றினார்கள். ■

# மினி முகாம் அகற்றப்பட்டது!

## முஸ்லிம்கள்மீது அதிருப்தி!

மட்டக்களப்பு-ஓட்டமாவடி காவத்தைமுனை இராணுவ மினி முகாம் கடந்த 05.04.99 அன்று புலிகளின் தாக்குதலுக்குள்ளானபோது 4 படையினரும், 3 பொதுமக்களும் பலியாகினர். 6 படையினரும் 3 பொதுமக்களும் காயமடைந்திருந்தனர்.

அத்தாக்குதல் நடைபெற்ற பின்னர் பாதுகாப்புப் படையினர் அவ்விடத்தில் தாம் நிலை கொண்டிருப்பது தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமானதல்ல என்று கருதி அவ்விடத்திலிருந்த மினி முகாமை அகற்றியுள்ளனர்.

புலிகள் இந்த மினி முகாமைத் தாக்கத் திட்டமிட்டிருந்ததை, அந்த வழியைக் கடந்து செல்லும் முஸ்லிம் மக்கள் நன்கு தெரிந்துவைத்திருந்த போதிலும், அது பற்றித் தமக்கு எதுவும் தகவல் தராமல் மறைத்துள்ளனர் என்று ஓட்டமாவடிப் பகுதி முஸ்லிம்கள் மீது படையினர் கடுப்பாய் உள்ளனராம்.

தாம் இருதலைக் கொள்ளி எறும்பு நிலையில் இருப்பதாக அப்பகுதித் தமிழ்-முஸ்லிம் பொதுமக்கள் கவலை கொண்டுள்ளனர்.

# நான்கு கோடியில் அஞ்சலகம்

## நவீன வசதிகளும் செய்யப்படும்

(திருமலை நிருபர்)

நான்கு கோடியே நாற்பது இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட புதிய அஞ்சலகக் கட்டடம் ஒன்று திருக்கோணமலையில் அமையவிருக்கிறது.

நாடெங்கிலுமுள்ள 55 அதி உயர்தர அஞ்சலங்களையும் சீரமைக்கும் திட்டத்தின் பிரகாரமே இது நடைபெறவிருக்கிறது. முதற்கட்டமாக மட்டக்களப்பு, காத்தான்குடி, திருக்கோணமலை அஞ்சலகங்கள் உட்பட பதினெட்டு அஞ்சலகங்கள் நவீனமயப் படுத்தப்படவுள்ளன. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

ஈ-மெயில் உட்பட அதி நவீன வசதிகளைக் கொண்டதாகப் புதிய அஞ்சலகக் கட்டடங்கள் அமையும் என திருக்கோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு.நல்லதம்பி முரசுக்குத் தெரிவித்தார். எதிர்காலத்தில் பொதுமக்கள் தங்கள் சகல அஞ்சலகத் தேவைகளையும் ஒரே கருமபீடத்தில் வைத்தே பெற்றுக்கொள்ளக் கூடியதாகப் பல்சேவைக் கருமபீடங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறிருக்க, நிலாவெளி, தோப்பூர் ஆகிய அஞ்சலகங்களுக்கு ஃபாக்ஸ் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. திருக்கோணமலை மாவட்டத்தின் ஏனைய அஞ்சலகங்கள் ஃபாக்ஸ் வசதியை ஏற்கனவே கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ■

# செய்தியாளர் செல்லத் தடை

(மன்னார் நிருபர்)

மடுவுக்குச் செல்ல முற்பட்ட அரச பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் பத்திரிகையின் பிரதேச செய்தியாளர் ஒருவர் கடந்த 13.04.99 அன்று மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டதுடன் ஒரு மாதத்திற்கு கொழும்பு செல்லவும் தடை விதிக்கப்பட்டார்.

இதனால் பாதிக்கப்பட்ட செய்தியாளர், கொழும்பிலுள்ள சட்டவிரோத கைதுகள் மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளார். அத்துடன் வன்னி மாவட்ட எம்.பி. அடைக்கலநாதன்- மன்னார் அரசாங்க அதிபர் ஆகியோரிடமும் தனது நிலையை விளக்கியுள்ளார்.

இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.குரூஸ் மேற்கொண்ட முயற்சியினால் ஒரு வாரத்தின் பின் தென்பகுதி செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மன்னார்ப் பகுதியில் அண்மைக்காலமாக பொதுமக்களுக்கு பாஸ் வழங்கும் விடயத்தில் பொலிஸார் பல்வேறு கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னார் பாஸ் அலுவலகத்தில் வைத்து பொதுமக்கள் மிகவும் கேவலமாக நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. பத்திரிகையாளரும் பல்வேறு வகையில் கேவலத்திற்குள்ளானார்.

மடுப் பகுதி கடந்த 22.03.99 முதல் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. அப்படியிருக்க இங்கு போக வேண்டாமெனக் கூறுவது எந்த வகையிலும் நியாயமில்லை என சம்பந்தப்பட்ட செய்தியாளர் கூறியுள்ளார்.

# திடீர் பணக்கார அதிகாரிகள்

## ஆங்கில வார ஏடு தகவல்

தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செலவுகளுக்காக வர்த்தகத் துறையினரும் தனவந்தர்களும் தாராளமாகப் பண உதவி செய்வார்கள். ஆனால் நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்ட ஆளும் கட்சி வேட்பாளர் பலருக்கு, வர்த்தகத்துடன் தொடர்பில்லாத ஒருவரிடமிருந்து பண உதவி கிடைத்தது. பண உதவி செய்த 'பிரமுகர்' ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி. இதனால் பலரும் வியப்பில் ஆழ்ந்தனர்.

மத்திய மலையகத்தில் போட்டியிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு, தன்னிடமுள்ள பல வாகனங்களில் இரு பெரிய வண்டிகளை இந்த முன்னாள் இராணுவ அதிகாரி அனுப்பி வைத்தாராம்.

அத்துடன் மட்டும் நின்று விடாமல், தனது 'டொயட்டா உல்லாச' வண்டியில் பவனி வந்து வேட்பாளர்களை உற்சாகமூட்டினாராம்.

மற்றுமொரு முன்னாள் இராணுவ அதிகாரி, தனக்கு குடியிருப்பதற்கு சொந்தமாக ஒரு வீடு இல்லை என்பதனால், ஓய்வு பெற்றதும் ஒரு வீட்டினைக் கட்டிக் கொள்வதற்கு ஒரு காணித்துண்டு தரும்படி ஜனாதிபதியிடம் விண்ணப்பித்தார். அவருடைய கோரிக்கை நிறைவேறியது. அக்காணியில் ஒரு சாதாரண வீடும் கட்டப்பட்டது. ஆனால் இன்று அந்த ஓய்வு பெற்ற அதிகாரியின் பொருளாதார நிலை மிக உச்சக்கட்டத்தை அடைந்து விட்டதாகத் தெரிகிறது.

சகல வசதிகளும் கொண்ட இரு பெரிய வீடுகளும் ஏராளமான சொகுசு மோட்டார் வாகனங்களும் அவருக்குச் சொந்தமாகியுள்ளன. அத்துடன் ஏற்றுமதி நிறுவனம் ஒன்றையும் இவர் நிறுவியுள்ளாராம்.

இங்கு உற்பத்தியாகும் பொருட்கள், சிறீலங்கா பாதுகாப்புத் துறைக்கான ஆயுதத் தளபாடங்களை விற்பனை செய்த சில நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனவாம்.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் உள்ள இந்நாடுகளில், இந்த ஓய்வு பெற்ற அதிகாரியின் உற்பத்திகள் சிறந்த சந்தைகளைத் தேடிப்பிடித்துள்ளனவாம்.

இலங்கையில் இனப்பிரச்னையைத் தீர்க்க யுத்தமே ஒரே மார்க்கம் என்ற முடிவு ஏற்படுத்தப்பட்டுள்ளமையினால் மறைமுகமாக இத்தகைய திடீர்ப் பணக்காரர்கள் பலர் தோன்றுவதற்கு ஏதுவாகியிருக்கிறது.

இத்தகவல்கள் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏட்டில் இடம்பெற்றுள்ளன.

# புது வருட விடுமுறை விரயம்

## படையினர் பலாலியில் அமளி

பலாலியிலுள்ள சிறீலங்கா விமானத் தளத்தில் புதுவருடப் பிறப்புக்கு முந்திய சில தினங்களில் பெரும் அமளி துமளிகள் இடம்பெற்றதாக ஆங்கில வார ஏடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

புதுவருட விடுமுறையை தங்கள் குடும்பங்களுடன் கொண்டாடுவதற்காகக் காத்திருந்த படையினரே இத்தகைய அமளிகளில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

விமானத்தளத்திலிருந்த தளபாடங்களையெல்லாம் அடித்து உடைத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். தங்கள் குடும்பங்களிடம் செல்வதற்கு விமானப் பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படாமையினால் ஏற்பட்ட ஆத்திரத்திலேயே இவ்வாறு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனராம்.

யாழ்ப் பிரதேசத்தில் கடமையாற்றும் படையினருக்கு விடுமுறை அளிக்கப்பட்டாலும், போக்குவரத்து வசதிகள் அளிக்கப்படுவதில்லை. அதனால் விடுமுறை நாட்கள் விரயமாகிறதாம்.



படிப்பகம்

www.padippakam.com

# 'டேபா' அபிவிருத்தித் திட்டம் மட்டக்களப்பில் தடை!

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்காக நோர்வே நாட்டு உதவியுடன் அமுல்படுத்தப்படும் 'டேபா' திட்டம் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருப்பதற்கு படையினர் மட்டுமல்ல ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதிகள்தான் முக்கிய காரணமாக இருப்பதாகத் தெரிகிறது. இது வேதனை தருகிறதென மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா குற்றஞ்சாட்டினார்.

நோர்வே நாட்டு சபாநாயகர் திருமதி கிறிஸ்டி கொல்லே கிரான்டல் மற்றும் தூதுவர் ஜோன் வெஸ்ட்போக் ஆகியோரடங்கிய உயர்மட்டப் பிரதிநிதிகளிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்:

"போர்ச் சூழலைச் சாட்டாகக் கொண்டு மக்களது குடியிருப்புப் பகுதிகள்- இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள், இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் என இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டு அப்பகுதி மக்களின் வாழ்வை முடக்கி அபிவிருத்தித் திட்டங்களைத் தடை செய்திருப்பது அநியாயமானது.

அரசினால் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் சமூக நலத் திட்டங்களுக்கு விடுதலைப் புலிகள் ஆட்சேபம் தெரிவித்ததாக இதுவரை அறியப்படவில்லை. சமீபத்தில் வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்த உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குச் சென்று குளங்களையும், வடிகால்களையும் பார்வையிட்டனர். யுத்தச் சூழலில்தான் இக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. புலிகள் எவ்விதத் தடைகளையும் சேதத்தையும் ஏற்படுத்தாது ஒத்துழைப்பு வழங்கியதாகவே அறிய முடிகிறது," என்றும் அவர் கூறினார்.

# நாலாயிரம் குடும்பங்கள் பாதிப்பு

மூதூர், ஈச்சிலம்பற்றைப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் ஏக்கர் நெல்வயல் கடும் மழை பெய்ததன் காரணமாக நாசமாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. சுமார் நாலாயிரம் குடும்பங்கள் இதனால் பெரிதும் பாதிப்படைந்திருக்கின்றன.

கடந்த ஆண்டு செப்டெம்பர், ஒக்டோபர் நவம்பர் மாதங்களில் மழை பொய்த்துவிட்ட காரணத்தால் இவ் வயல்கள் துப்புரவாக அறுவடை செய்யப்படவில்லை என அப்பாவி விவசாயிகள் கூறுகின்றார்கள். மேட்டு நிலப் பயிர்களான சோளம், வெங்காயம், மிளகாய், மரக்கறி வகைகள் என்பவையும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன. இப்பயிர்கள் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படுகின்றன.

# தொலைந்துபோன அடையாள அட்டை

யாழ்ப்பாணம், கந்தர்மடம்- பலாலி வீதியைச் சேர்ந்த தில்லையம்பலம் கணேசராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் உரிய சான்றுகளுடன், அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி

கட்டை பறிச்சான் முன்னாள் கிராம சபைத் தலைவரும் சமூக சேவையாளருமான திரு எஸ். குணநாயகம் இது சம்பந்தமாக அரச அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ள வேண்டுகோளில், எவ்விதத்திலாவது அரசு இம்மக்களின் துயர் துடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# படையினருக்கு வாக்களிப்பு இல்லை!

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நாட்டின் பிற மாகாணங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் கடமையாற்றுகின்றனர்.

ஏப்ரல் 06ஆம் திகதி மேல் மாகாணம், சப்ரகமுவ, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. ஆயினும் அம் மாகாணங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோருக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

தேர்தல் நடைபெற்ற மாகாணங்களைச் சேர்ந்த பல ஆயிரம் எண்ணிக்கையான இராணுவத்தினரும், பொலிஸாரும் வடக்கு-கிழக்கில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களில் ஒருவருக்கேனும் இத்தேர்தலில் தபால் மூல வாக்களிக்கும் சந்தர்ப்பம்கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் கூறுகிறார்கள்.

# நேர்மையான அதிகாரி

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாணசபை அதிகாரிகள் மட்டத்தில் எவ்வளவுதான் தில்லுமுல்லுகள் இடம்பெற்றாலும் நேர்மையான அதிகாரிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது அண்மைய சம்பவம் ஒன்றால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இரண்டு விவசாயிகள் விவசாயப் பணிப்பாளர் திணைக்களத்துக்கு வந்திருந்தனர். ஆண்டான்குளம் என்ற இடத்தில் அவர்களது வயல் இருந்தது. தமது பயிர்களுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக முதல் நாளே மேற்படி திணைக்களத்துக்குப் பரிகாரம் தேடி வந்தபோது அங்கிருந்த அதிகாரிகளால் அடுத்தநாள் வரும்படி பணிக்கப்பட்டனர். அதற்கிணங்க அன்று வந்து கட்டடத்துக்கு வெளியே காத்துநின்றனர்.

விவசாய உதவிப் பணிப்பாளர் திரு.கே. கனகசபாபதி வேறொரு திணைக்கள அதிகாரியுடன் வெளியே அலுவல் நிமித்தம் போகும்போது அந்த இருவரையும் கண்டார். இரண்டு மணிநேர அலுவல் முடிந்து அலுவலகம் திரும்பியபோதும் அவர்கள் நிற்பதைக் கண்டார். நிற்பதன் காரணத்தைக் கேட்டார். அவர்கள் பொறுமையாகப் பதில் சொன்னார்கள்.

உள்ளே நுழைந்தவர் அலுவலகத்தில் இருந்த அதிகாரிகளைப் பார்த்து பொரிந்து தள்ளினார். "விவசாயிகள் உழைப்பதால்தான் உங்களுக்கு இங்கே உத்தியோகம் கிடைக்கிறது. அவர்கள் குறைகளைக் கேட்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பதைத் தவிர உங்களுக்கு வேறு முக்கிய வேலை இந்தத் திணைக்களத்தில் கிடையாது. அவர்களை இரண்டு மணி நேரமாகக் காக்க வைத்துவிட்டு இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்றவுடன்தான் அதிகாரிகள் விழித்தனர்.

நல்ல அதிகாரிகள் பக்கம் என்றும் முரசு துணைநிற்கும்!

# மரண தண்டனை

(நமது நிருபர்)

கடந்த சில மாதங்களாக படையினருடன் சேர்ந்து ஒத்துழைத்ததாகக் கூறப்படும் லாரா எனப்படும் முன்னாள் புலி இயக்க உறுப்பினர் புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி படையினருடன் சேர்ந்து ஒத்துழைத்ததுடன் பல சந்தர்ப்பங்களில் தலையாட்டியாக முகமூடியுடன் காணப்பட்டார்.

கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் மன்னார் 100 வீட்டுத்திட்டத்தில் வைத்து புலிகளினால் கடத்தப்பட்ட லாரா, 03.04.99 வரை புலிகளின் கண்காணிப்பில் இருந்து வந்தார்.

03.04.99 அன்று வன்னிப் பகுதியிலுள்ள கள்ளியடி என்னும் இடத்தில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# நடுத் தெருவில் வாழ்க்கை



வன்னியில் ஷெல் வீச்சுக்களால் இடம்பெயர்ந்த மக்கள் வீதி ஓரங்களில் தங்கியிருக்கின்றனர். இந்தச் சிறுவர்கள் யார்மீது கோபப்படப் போகிறார்கள்? இடம்பெயர்வுகள் வடக்கில்! அதனை வெற்றியாக கொண்டாடும் தேர்தல் பிரசாரம் தெற்கில்! இது எங்கு போய் முடியும்?

# கப்பல் சேவை

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளையினர் ஏப்ரல் மாதத்துக்கான காங்கேசன்துறை கப்பல் சேவை பற்றிய அட்டவணையை வெளியிட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் திருக்கோணமலை- வடபகுதிக்கான ஐந்து போக்குவரத்துச் சேவைகள் இம்மாதம் இடம்பெறவுள்ளன.

8,15,19,22,26ந் திகதிகளில் திருக்கோணமலையிலிருந்து புறப்படும் கப்பல் 10,17,21, 24,28ம் திகதிகளில் வடபகுதியிலிருந்து திரும்பவுள்ளது.

அத்தியாவசியப் பணிகளுக்காகச் செல்லும் இக்கப்பல்- நோயாளர்களையும், தபால் பொதிகளையும் எடுத்துச் செல்வதற்கு முன்னுரிமை வழங்குகிறது.

விளம்பரப் பகுதி


## மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
கொழும்பில் ஏப்பிரல் 20 முதல் 26 வரை சந்திக்கலாம்
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388
கல்முனையில் மே 3,4ம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி–கல்முனை. T.P. 067-29329
வவுனியாவில் மே 10,11ம் திகதிகளில் சந்திக்கலாம்
(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365
கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\BT\219
NTSF துயர் தீர்க்குமிடம்
வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.
ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பலன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணக்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."
தெய்வீகம் ஸ்ரீலங்கா, தலைமை அலுவலகம் கல்லடி-அரசவிடுதி வீதி,மட்டக்களப்பு.
THEIVEEGAM SRI LANKA, HEAD OFFICE BATTICALOA. SRI LANKA. T.PHONE: 065-24825
"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

## ஹோமியோபதி

தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்
Dr. R. தியாகராஜன்
D.H.M.S. AMRSH (Lond)
நீரிழிவு, ஆஸ்துமா, ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்
தொ.பே: 585592 - 581986
21.04.1999 - 26.04.1999
இந்தியத் தொ.பே: 0091-431-432946
0091-431-432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு–6.
T.P:- 586218

## BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலமான பாடநெறிகள்
SPOKEN ENGLISH & SINHALA



மூன்றேமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.



METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANCY (M.C.B.A)
கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும் இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.



BUSINESS ENGLISH
வியாபார கடிதங்கள், வேலைக் கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகியவற்றுடன் கூடிய பாடத் திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.
APPLICATION FORM
NAME : ..........
ADDRESS : ..........
விரும்பும் பாடநெறி : ..........
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770, 074-718592
BRIGHT FUTURE IN YOUR HAND

## சித்தர் மாந்திரீகம்


அதிஷ்டகரமான வாழக்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 21ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067. (நன்மை பயப்பவை மட்டும் செய்து தரப்படும்.)
வியாழன் விடுமுறை

## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு * இளைப்பு * மாய்ச்சல் * சளி *மூச்சுத்தட்டல் * இருமல் *கண்கடி *மூக்கடைப்பு *பீனிசம் * தலைவலி * தும்மல் * நாசி அரிப்பு * முட்டு போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல் விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.
டாக்டர் சுறாஜ சோமசுந்தரம (அஸ்மா சிகிச்சை நிபுணர்)
Ph.DH(Ind), M.B.B.Sch (Cey) Govt Reg No A 1553 (1970)
25. சில்வெஸ்டர் வீதி, கல்கிசை, மவுண்ட் லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)
தொலைபேசி இலக்கம்: 074-201582
தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை
தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும்.

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை காண மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI.J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

## மஹாசக்தி மருத்துவம்

GOVT APPROVED CHARITABLE Services Reg NO. HA 14-BT/176
காலம் பகைக்கும்போது காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளும் கணவன், மனைவி குடும்பபிரச்சனைகள், அன்புக்குரியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், மதுவிற்கு அடிமை, தகாத உறவு, தீய சக்திகளின் தொல்லைகள், தீராத உடல்நோய், மனநோய், மருந்தீடு, வேறு பிரச்சனைகளும் ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட அல்லது வெற்றிகொள்ள இலவசமாக சோதிட மருத்துவ மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக ஆலோசனைகள் வழங்குகின்றார் மஹாசக்தி உபாசகர் (வைத்திய கலாநிதி) சுகாதார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட இந்தியன் வைத்தியசாலையின் டாக்டர்- "மந்திரயோகி"
(D.H.M.S.D.Ac (இலங்கை), M.B.B.S.H.D.S.M. (இந்தியா)) வர முடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் வெளியில் சொல்லமுடியாத வெட்கமான, வேதனையான பிரச்சனைகள் நோய்கள், தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள் கோரிக்கைகளை எழுதியும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். மாலை 4-30 மணியிலிருந்து 6.30 மணிவரை தியான (MEDITATION) நேரமாகையால் தொடர்பு கொள்ளப்படாது. விரும்பி அனுப்பும் குருதட்சணைகளை ஏற்று முதலில் உடன் கவனிக்கப்படும். மணியோடர் தாள் எடுக்கவேண்டிய பெயர் "GURUSACKTHY CENTRE" (INDIAN CLINIC) விலாசம். மட்டக்களப்பு, கல்லடி, மணிக்கூட்டு கோபுரத்துக்கு கிழக்குப்பக்கம் இராமகிருஷ்ணபுரம் வீதியில்.
T.P: 065-24872
Fax: 065-25434
INDIAN CLINIC (GURUSKTHY CENTRE) KALLADY-BATTICALOA (P.O) (SRI LANKA)




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# விமான எதிர்ப்பு ஆயுதங்கள் வந்து குவிந்தனவா?

## அமெரிக்க சஞ்சிகையின் நோக்கம் என்ன?

அமெரிக்காவில் இருந்து இராணுவத் தகவல்களை சுமந்து பல சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இவை இடைக்கிடையே அமெரிக்காவின் நலனுக்கு தோதான செய்திகளையும் வெளியிடுவது வழக்கம்.

அதுமட்டுமல்லாமல் இன்னொரு முக்கியமான இரகசியமும் இருக்கிறது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளது ஆயுத உற்பத்தியாளர்களும் இந்த சஞ்சிகைகளில் வெளியிடுவதற்காக தாமே சில தகவல்களை சமைத்தும் கொடுப்பார்கள்.

ரசிய ஏவுகணைகளை கெரில்லாக்கள் பயன்படுத்துவதாக ஒரு நாட்டின் அரசை நம்பவைத்தால், அந்த நாடு நேட்டோ இராணுவ தளபாடங்களைத்தான் வாங்க வேண்டியிருக்கும்.

ஏனென்றால் ரசிய ஆயுதங்களுக்கு பதிலடி கொடுக்கக்கூடிய ஆயுதங்களும், ரசிய விமான எதிர்ப்பு ஏவுகணைகளை சமாளிக்கக்கூடிய விமானங்களும் நேட்டோ நாடுகளிடம்தான் இருக்கின்றன.

அமெரிக்காவுடனும், அதன் தலைமையிலான நேட்டோ நாடுகளுடனும் ஆயுத தளபாட விற்பனை, விமானங்கள் விற்பனை போன்றவற்றில் ரசியா போட்டி போடுகிறது.

நேட்டோ நாடுகளது விமானங்களைவிட ரசிய விமானங்களை குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் என்பதால், இலங்கை போன்ற வசதி குறைந்த பல நாடுகள் ரசியாவிடமே கொள்முதல் செய்கின்றன.

இலங்கை அரசு இதுவரை கொள்வனவு செய்த விமானங்கள், ஹெலிகள் போன்றவற்றில் பெரும்பாலானவை ரசியாவிடம் பெறப்பட்டவையே.

எனவே, புலிகளிடம் இருப்பவை ரசிய விமான எதிர்ப்பு ஏவுகணைகள்தான் என்று இலங்கை அரசை நம்பவைத்துவிட்டால், இலங்கை அரசு ரசியாவிடம் விமானங்களை கொள்வனவு செய்ய பின்னடிக்கும்.

ரசிய விமான எதிர்ப்பு ஏவுகணைகளை எதிர்கொள்ளத்தக்கதாக நேட்டோ நாடுகள் உற்பத்தி செய்துள்ள விமானங்களையும், ஹெலிகளையும் கொள்முதல் செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியிருக்கும்.

இப்படியொரு திட்டத்தோடும் குறிப்பிட்ட அமெரிக்க சஞ்சிகையின் தகவல் வெளியிட வைக்கப்பட்டிருக்கலாம்.

பல்லாயிரம் கோடி புரளும் ஆயுத விற்பனைகளில் இது போன்ற வியாபார தந்திரங்கள் சகஜம்.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். ரசியாவின் தயாரிப்பான 'சாம்' ஏவுகணைகளை புலிகள் கொள்வனவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, எங்கு அவை கொள்வனவு செய்யப்பட்டன என்ற தகவல் அதில் காணப்படவில்லை.

கொள்வனவு செய்யப்பட்டமையும், எத்தகைய ஆயுதம் என்பதும் தெரிகிறபோது, எங்கே கொள்வனவு செய்யப்பட்டது என்பது மட்டும் எப்படித் தெரியாது போகும்?

ரசியாவிடம்தான் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமோ என்று இலங்கை அரசை சந்தேகிக்க வைக்க இந்த தந்திரம் உதவலாம்.

புலிகளுக்கும் ரசியா ஆயுதம் விற்பனை செய்கிறது என்று சிறு சந்தேகம் எழுந்தாலே போதும், இலங்கை அரசு அங்கு எந்த ஆயுத தளபாடமும் வாங்காது. தாம் வாங்கும் ஆயுத தளபாட இரகசியங்கள் புலிகளுக்கும் கிடைக்கலாம் என்று நினைக்கும்.

அதுமட்டுமல்ல, சாம் ஏவுகணையில் ஒரு ரகமான எஸ்.ஏ.16 ஏவுகணையை தாங்கி நிற்கும் ஒருவரது படமும் வெளியாகியுள்ளது.

அந்தப் படத்தில் இருப்பவர் ரசியப் படை வீரரல்ல. ஆப்கானிஸ்தானின் முஸ்லிம் கெரில்லா. அவர் அணிந்துள்ள தொப்பி மற்றும் உடை மூலமே அதனைத் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, அமெரிக்கா மற்றும் நேட்டோ ஆயுத வியாபாரிகள் தமது ஆயுத விற்பனைகளுக்கான மற்றொரு சந்தையாக இலங்கையை மாற்றுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதற்கு சான்றாகவும் குறிப்பிட்ட அமெரிக்க பத்திரிகை செய்தியை கருதலாம்.

புலிகளிடம் ஏற்கனவே விமான எதிர்ப்பு துப்பாக்கிகள், பீரங்கிகள், ஏவுகணைகள் என்பவை இருக்கின்றன.

உலகில் ஆயுத சந்தைகள் என்பவை ரசியாவிலும், ஆப்கானிஸ்தானிலும் மட்டுமல்ல பல நாடுகளில் இருக்கின்றன.

சோவியத் யூனியன் பல துண்டுகளாக உடைவதற்கு முன்பு, அங்கு கறுப்புச் சந்தையில் ஆயுதம் வாங்க முடியாது. சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்த பின்னர்தான் அங்கு ஆயுதங்கள் கறுப்பு சந்தையில் தாராளமாக புழங்கின. அதற்கு முன்னர் தனது நட்பு நாடுகளுக்கும், தம்மால் அங்கீகரிக்கப்பட்ட கெரில்லா அமைப்புக்களுக்குமே ஆயுதங்களை விநியோகித்தது.

ஏனைய நாட்டு ஆயுத சந்தைகளைவிட அங்கு தற்போது மலிவாக அவற்றை கொள்வனவு செய்ய முடிகிறது என்பது மட்டுமே சாதகமான அம்சம்.

ஆனால் சோவியத் யூனியன் பல நாடுகளாக உடைந்து கறுப்பு ஆயுத சந்தை அங்கு உருவாக முன்னரே, புலிகள் உலகின் வெவ்வேறு ஆயுத சந்தைகளில் ஆயுதங்களைக் கொள் வனவு செய்திருக்கிறார்கள்.

இந்திய அரசு ஈழப் போராளி அமைப்புக்களுக்கு ரசியா, அன்றைய செக்கோஸ்லோவாக்கிய, மற்றும் சீன நாட்டு தயாரிப்புக்களான ஆயுதங்களையே விநியோகித்தது.

அப்போதே புலிகளிடம் எம்.16, ஜி.3 போன்ற ஆயு தங்களும் தாராளமாக புழக்கத்தில் இருந்தன. இவை அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளது தயாரிப்புக்களாகும்.

நேட்டோ நாடுகளது ஆயுதங்களை 1983ம் ஆண்டுக்கு பின்னர் தமது நிதி இருப்புக்கு ஏற்ப புலிகள் கொள்வனவு செய்து வந்துள்ளனர்.

'ஆயுதங்களுக்கு இந்தியாவை மட்டும் நம்பியிருக்கக்கூடாது. அவ்வாறு இருந்தால் இந்தியா சொல்கிறபடிதான் நாம் நடக்க வேண்டியிருக்கும்' என்று பிரபாகரன் கூறியிருந்தார்.

அன்றைய நிதி நிலையில் எம்.16 ஜி.3, பிஸ்டல்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றையே பெருமளவில் கொள்வனவு செய்ய முடிந்தது.

பின்னர் 1994ம் ஆண்டு இறுதிப் பகுதியில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை கொள்வனவு செய்தனர்.

இவற்றை பெருமளவு கொள்வனவு செய்ய முடியாது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அவற்றின் விலை. இரண்டு, பெருவாரியாக உற்பத்தியாவதும் கிடையாது.

துப்பாக்கிகள் போல பெருவாரியாக கொள் வனவு செய்ய முடியுமானால், இலங்கையின் வான்பரப்பில் ஒரு விமானம் பறக்கக்கூட புலிகள் விட மாட்டார்கள். அதுமட்டுமல்ல வடக்கு-கிழக்கில் படை முகாம்களுக்கு வான்கலங்கள் சென்று வரவே முடியாது போயிருக்கும்.

புலிகளிடம் வான் கலங்கள் இருப்பதாக தெரிந்தும்கூட, விமான எதிர்ப்பு ஏவுகணைகளை உடன் கொள்வனவு செய்வதற்கு இலங்கை அரசிடமே நிதி பற்றாக்குறை இருக்கிறது.

இந்நிலையில் புலிகளிடம் இருக்கும் நிதி நிலையில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை குறிப்பிட்டளவுதான் கொள்வனவு செய்ய முடியும்.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் ஏற்கனவே இருப்பதால், அவற்றுக்குரிய ரொக்கட்டுக்களையே புதிதாக கொள்வனவு செய்தாலே போதுமானது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள் பெருமளவில் புலிகளிடம் இருந்தால் அவற்றை வன்னியில் மட்டுமல்ல, கிழக்கிலும் பயன்படுத்தியிருப்பர். ஏன், வடக்கு-கிழக்குக்கு வெளியேகூட பயன்படுத்தப்பட்டுவிடும்.

புலிகள் ஆயுதங்களைகொண்டுவந்து ஒரு முறை இறக்கினால், பத்து முறை இறக்கியதாக செய்திகள் வந்துவிடும். அப்படிப் பார்த்தால் புலிகள் வன்னியில் ஆயுதம் வைக்கவே இடமிருந்திருக்காது.

அதுபோல புலிகள் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை குவித்துள்ளதாக இதுவரை வெளியான செய்திகளின்படி பார்த்தால் வான் பரப்பில் அரச விமானங்கள் பறக்கவே முடிந்திருக்காது.

ஆகவேதான் அமெரிக்க சஞ்சிகையின் தகவல் சந்தேகத்துக்கு உரியதாக இருக்கிறது.

புலிகளது சக்திக்கு மீறிய செய்திகள் வெளியாகும்போது, போர்க்களம் பற்றிய அதீத எதிர்பார்ப்புக்களையும் தோற்றுவிக்கின்றன.

1995 மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் பலாலி விமானதளம் அருகே அடுத்தடுத்து இரண்டு விமானங்களை புலிகள் சுட்டு வீழ்த்தினார்கள்.

அதனையடுத்து யாழ் குடாநாட்டு முகாம்கள் எதற்கும் இனிமேல் அரச வான்கலங்கள் செல்லவே முடியாது என்றும், முகாம்கள் யாவும் வீழ்ச்சியடையப் போவதாகவும், செய்திகளும், கணிப்புக்களும் வெளியாகின. 'முரசு' அதனை மறுத்திருந்தது.

விமானங்களை வீழ்த்தும் அளவுக்கு புலிகளது திறனும், ஆயுத வளமும் உயர்ந்தமை அவர்களது வளர்ச்சியில் மற்றொரு மைல்கல் என்பதே உண்மை.

ஆனால், அதனையே அளவுக்கதிகமாக மதிப்பிட்டதால் 'சூரியக்கதி'ரில் புலிகள் பின் வாங்கியபோது பெரும் நம் பிக்கையீனமாக மாறியது.

தற்போது புலிகளிடம் விமான எதிர்ப்பு ஏவுகணை கள் அவர்களது நிதி வளத் திற்கு ஏற்ப வரையறுக் கப்பட்ட அளவிலேயே உள்ளன. விமான எதிர்ப்பு ஏவுகணையின் ஒவ்வொரு ரொக்கட்டும் பெறுமதியானது. விலை உயர்ந்தது.

எனவேதான் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை புலிகள் கண்டபடி பாவிப்பதில்லை. மிக அவசியமான சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்துகின்றனர்.

குறிப்பிட்ட அமெரிக்க சஞ்சிகை தனது தகவலில் எஸ்.ஏ.16 ரக சாம் ஏவுகணை புலிகளிடம் இருப்பதாக கூறுகிறது.

தரையில் இருந்து வான் நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளே சாம் என்று அழைக்கப்படுகின்றன. (Surfase to Air Missile-SAM).

சாம் ஏவுகணைகளில் அமெரிக்காவும் நேட்டோவும் பல ரகங்களை தயாரித்துள்ளன. ரசியாவும் பல ரகங்களை உற்பத்தி செய்துள்ளது.

ரசியத் தயாரிப்பில் தரமானது சாம்-7 ரக விமான எதிர்ப்பு ஏவுகணையாகும். மற்றொரு தயாரிப்பு எஸ்.ஏ.16.

எஸ்.ஏ.16 ஏவுகணை புற ஊதா கதிர் தொழில் நுட்பத்தால் வழி நடத்தப்படுகிறது. சாம்.7ஐ விட இதிலுள்ள மேலதிக ஆதாயம் என்னவென்றால், இருளிலும் இலக்கை கண்டறிந்து தாக்க வசதியானது.

எடை சற்று குறைவாக இருந்தாலும், சாம்-7 ஏவுகணை, ஸ்ரிங்கர் போன்றவையும் எடை அதிகமானவையல்ல. இவையெல்லாமே கெரில்லா யுத்தங்களில் சுலபமாக கையாளவும் ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளன.

எஸ்.ஏ.16 ஏவுகணையைவிட சாம்-7 ஏவுகணை நீண்டகால பாவனைக்கு ஏற்றது. அமெரிக்க தயாரிப்பான ஸ்ரிங்கரைவிட சாம்-7தான் தரமானது என்றும் இராணுவ நிபுணர்கள் முன்னர் கூறியிருந்தனர்.

—★—

### காடுகளுக்குள் வாழ்க்கை



'ரணகோஷ' நடவடிக்கையின் பின்னர் இடம் பெயர்ந்து காடுகளுக்குள் தஞ்சமான மக்கள்.

---

**யா**ழ் குடாநாட்டில் பத்து வயது சிறுவர்களுக்கும் விசேஷ அடையாள அட்டை தேவை என்று புதிய கட்டுப்பாடு அறிமுகமாகியுள்ளது.

யாழ் குடாநாட்டை கைப்பற்றுவது, அங்குள்ள மக்களை புலிகளிடம் இருந்து விடுவிக்கவே என்று அரசு கூறியது.

ஆனால் படிப்படியாக புதிய கெடுபிடியான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன.

சூரியக்கதிரின் பின்னர் கடந்த நான்கு ஆண்டுகளில் கட்டுப்பாட்டு விதிகள் படிப்படியாக இறுகிக் கொண்டிருக்கிறதே தவிர தளரவில்லை.

படிப்படியாக கெடுபிடிகள் தளருமானால் சுமுக நிலை உருவாகிறது என்று அர்த்தம்.

ஆனால் யாழ் குடா நாட்டில் படிப்படியாக இரும்புப்பிடி இறுகிவருவது போலவே நிலமைகள் காணப்படுகின்றன.

நாட்டின் வேறெந்த பகுதியிலும் இல்லாத பாதுகாப்பு விதிகள் யாழ் குடா நாட்டில் மட்டும் விதிக்கப்படுகின்றன.

ஆனால், நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிட்டால் யாழ் குடாநாட்டில்தான் புலிகளது தாக்குதல்கள் தற்போது வரை குறைவாக உள்ளன.

அப்படியிருந்தும் ஏனைய பகுதிகளுக்கு இல்லாத பாதுகாப்பு விதிகள் இரும்புக் கரமாக நீள்வது ஏன்?

யாழ் குடாநாடுதான் போராட்டத்தின் முதுகெலும்பு பகுதி என்றும், அங்கு அடக்கிவிட்டால் போராட்டத்தையே நசுக்கி விடலாம் என்றும் நீண்டகாலமாக ஒரு கருத்து தெற்கில் நிலவி வந்தது.

எனவேதான் யாழ் குடாநாட்டை பிடிக்கும் படை நடவடிக்கைக்கு தெற்கில் பட்டாசு ஒலிகளுடன் வரவேற்பும் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தை மட்டுமே தமிழ் மக்களது போராட்டத்தின் முதுகெலும்பாக கருதிய கண்ணோட்டம் தவறான ஒன்று என்பதில் ஐயமில்லை.

ஆனாலும் அக் கருத்தே இன்றுவரை தெற்கில் உள்ளது. அக் கருத்தையே சில படை அதிகாரிகளும் கொண்டுள்ளதாக தெரிகிறது.

புலிகளின் ஊடுருவலை தடுப்பது என்பதற்கும் அப்பால், யாழ் குடாநாட்டில் உள்ள மக்களை என்றுமே நிமிர்ந்து நிற்க முடியாமல் இரும்புப் பிடிக்குள் வைத்திருக்கும் நோக்கமே புதிய கெடுபிடிகளிலும், பாதுகாப்பு விதிகளிலும் தெளிவாகத் தெரிகிறது.

சிறு வயதில் இருந்தே யாழ் சமுகத்தின் எதிர்காலச் சந்ததியை கண்காணிக்கவே பத்து வயதில் அடையாள அட்டை அறிமுகம்.

ஆனால் படையினர் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவையே இத்தகைய பாதுகாப்பு விதிகள் ஏற்படுத்தப் போகின்றன.

பத்து வயதுச் சிறுவர்களும் தாம் சந்தேகத்துக்குரியவர்களாக நோக்கப்படுகிறோம் என்று உணரும்போது, படையினருக்கு சாதகமான மனநிலை கொள்ளப்போவதில்லை.

அடையாள அட்டை கேட்டு பத்து வயதுச் சிறுவர்களையும் படையினர் மறிக்கப் போகிறார்கள். சோதனையிடப் போகிறார்கள்.

இதெல்லாம் அந்தச் சிறுவர்களது மனங்களில் இப்போதே அதிருப்தியையும், வெறுப்பையும் ஏற்படுத்தவே வழிவகுக்கும்.

இதனால் புலிகளுக்கு பத்து வதிலேயே ஆள் சேர்த்துக் கொடுக்கும் வேலையை படையினரே செய்யப் போகின்றனர்.

சமீபகாலத்தில் யாழ் குடாநாட்டிலிருந்து புலிகளில் இணையும் புதிய உறுப்பினர்கள் தொகை குறைவாகவே இருந்தது.

படையினரின் புதிய பாதுகாப்பு கெடுபிடிகள் அந்த குறையைப் போக்கிவிடும் போல் தெரிகிறது.

தமது பத்து வயதுப் பிள்ளையிடமே அடையாள அட்டை கேட்கும் படையினரை பெற்றோர்களும் நேசத்தோடு நோக்குவார்களா? மொத்தத்தில் கெடுபிடிகள் எந்தளவுக்கு அதிகமாகிறதோ, அந்தளவுக்கு யாழ் குடாநாட்டில் புலிகளது பலமும் ஏறுமுகமாக சென்று கொண்டிருக்கும். இது தவிர்க்க முடியாதது. ■

நாரதர்

---

## அதிரடி அய்யாத்துரை



***சித்திரைப் புத்தாண்டை*** முன்னிட்டு வவுனியாவில் இயக்கங்கள் ஒரே கொண்டாட்டம். இயக்கம் ஒன்று துணிக் கடைகளுக்கு சிலரை அழைத்துப் போய், தங்களுக்குத் தேவையான உடைகளை கொள்வனவு செய்தவையாம். 'பத்தாயிரத் துக்கு பில்' வந்துவிட்டது! என்று பாதிக்கப்பட்ட வர்களில் ஒரு வர் புலம்பினாராம். "இவை என்ன போராட்டமோ நடத்துகினம்? எங்களோடுதான் பேயாட்டம் போடுகினம்!" என்றும் பொருமினாராம்.

***கூட்டு மேதினம்*** நடத்த வேண்டும் என்று தமிழ்க் கட்சி ஒன்றின் செயலாளர் ஆவல் கொண்டுள்ளாராம். அவரால் "கொள்ளைகாரர்" என்று சிலமாதங்களுக்கு முன்பாக வசைபாடப்பட்ட கட்சித் தலைவருடனும், அவரால் 'கொலைகாரர்' என்று கட்சி உறுப்பினர்களிடம் கூறப்பட்ட இன்னொரு கட்சி உபதலைவருடனும்-இப்போது வலு ஐக்கியமாகப் பேசியும் வருகிறாராம். எந்த ரூட்டில் போவது என்பதே தெரியவில்லை, கூட்டு மேதினம் நடத்துகினமாம்...! ஹி.ஹி.ஹி.

***அந்தப் பெண்மணியாரின்*** விளம்பர ஆசை தெரிந்த சங்கதிதான். அது சமீபத்தில் விபரீதமாக வெளிப்பட்டிருக்கிறது. செம்மணி இழுத்தடிப்பை பூசிமெழுக துப்பறியும் விசாரணை என்று புதுசாக பூச்சாண்டி காட்டப்படுகிறது. அதற்கு ஒத்துழைக்குமாறு காணாமல் போனோரின் உறவினர்களுக்கு அறிக்கைவிட்டுள்ளார் அந்த அம்மணி. பத்திரிகைகளில் பெயர் வர வேண்டும் என்பதற்காக எது, எதற்காக, ஏன்? என்ற நோக்கங்களை ஆராயாது அறிக்கை எழுதித் தள்ளுவதோ? என்ரை வேலாயுதா!

***தம்மிடம் யாரும் வந்து*** ஆதரவு கேட்கவில்லை என்று அழாத குறையாக மலையக தனித்துவக் கட்சியினர் செப்பிக் கொண்டிருக்கினம். பார்த்தியளோ, இவைக்கு உள்ள மரியாதையை? எப்படியும் எங்களைத்தான் ஆதரிப்பினம் என்பது அதிகாரத்தரப்பாருக்குத் தெரிந்த சங்கதிதானே. பின்னர் ஏன் இவைக்கு பின்னால் அலையப்போகினம்? அதிகாரம் தங்களிடம் இல்லாதவரை தங்களை இவை ஆதரிக்க மாட்டினம் என்பது எதிரணிக்கும் தெரியும். பின்னர் ஏன் இவையைத் தேடிப் போகப் போகினம்?!

***யாழ் குடாநாட்டில்*** வலிகாமம் காணிச் சுவீகரிப்பு பற்றி அதிகாரத் தரப்பு மேலிடம் அப்படிக் கூறியது, இப்படிக் கூறியது என்றெல்லாம் செய்தி சொன்னவை எங்கே போய்விட்டினம்? வர்த்தமானி அறிவித்தல் ரத்தாகவில்லை. அது போதாது என்று காரைநகரிலும் சுவீகரிப்பு திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதுவும் கடந்தகால அரசின் திட்டம் என்றுதான் சொல்லப்போகினமோ? அப்படிச் சொன்னால்கூட அதனை 'ஆமாம்' போடவும் ஆட்கள் இருக்கினமல்லோ!

***வவுனியாவில் ஈரப்பெரிய***குளத்தில் எரிந்த சடலங்கள் கிடந்துள்ளன. தமிழ்க் கட்சிகள் மூச்சுக் காட்டவில்லை. இதெல்லோ ஜனநாயகப் பாதை? ரெண்டு எழுத்தார் தங்களை எதுவும் செய்யாதிருக்க வேண்டும். அந்த ஜனநாயகம் மட்டும்தான் தமிழ்க் கட்சிகளுக்கு வேண்டும். துரையப்பா விளையாட்டரங்கில் எலும்புகள் கிடைத்தால் என்ன, ஈரப்பெரியகுளத்தில் உடம்புகள் கிடந்தாலென்ன, ஜனநாயக உணர்ச்சி கொப்பளிக்காது! வாழ்க ஜனநாயகம்.

***கொழும்பில் பாதாள*** உலக கோஷ்டியின் தூண் ஒருவரின் மரணச் சடங்குக்கு கூட்டமோ கூட்டம்- அப்படியொரு கூட்டம். அரசியல் புள்ளிகள் சிலரது தலைக் கறுப்பையும் காணக்கூடியதாக இருந்ததாம். அவையின் முதுகில்தானே இவை சவாரி செய்கினம்.

***திருவானமலை*** சம்மந்தமானவரின் உரை பத்திரிகைகளுக்கு கொடுக்கப்பட்டு பெரிதாக பிரசுரமானது. அதில் வலிகாமம் விவகாரத்தில் கடந்த ஆட்சியாளரை இழுத்துவிட்டு அதிகாரத் தரப்பாரை குளிர்வித்த பகுதிகள் மட்டும் நீக்கப்பட்டுத்தான் கொடுக்கப்பட்டதோ? இப்படித்தானே முன்பு ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி என்றும், தமிழில் தமிழரசுக் கட்சி என்றும் அங்கொன்றும், இங்கொன்றும் சொன்னவை?

பழைய தந்திரத்தை மறக்கமாட்டினம் போலகிடக்கு!

***இந்த வாரப் பொன்மொழி***

> **"ஜனநாயகம் என்றால்**
> **நான் உன்னைப் போல**
> **நன்றாக இருக்கிறேன் என்பதல்ல,**
> **நீ என்னைப் போல**
> **நன்றாக இருக்க வேண்டுமென்பதே!"** ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# இலங்கை பிரச்சனையில் ராஜீவின் தவறுகள்

## கொலை வழக்குக்கு திரண்ட நிதி

ராஜீவ் கொலை வழக்கில் 26 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதை கண்டித்து தமிழகத்திலும் பல அமைப்புக்கள் குரல் எழுப்பின.

தீர்ப்பை எதிர்த்து இந்திய உச்ச நீதி மன்றத்தில் மேன் முறையீடு செய்யப்பட்டது.

முத்த வழக்கறிஞர்களை வைத்து வழக்காட 50 இலட்சம் ரூபாய்கள் தேவைப் பட்டன.

அதனைப் பெறுவதற்காக நிதி திரட்டும் நடவடிக்கைக்கு தமிழக அமைப்புக்கள் மற்றும் கட்சிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அந்த நிதிக் குழுவின் புரவலர் வேறு யாருமல்ல, இந்தியாவின் சம்பத்திய பாது காப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்தான். அக் குழுவின் தலைவராக பழ. நெடுமாறன் தெரிவு செய்யப்பட்டார்.

'தமிழர் நிதி' என்ற பெயரில் இந்தியாவில் மட்டுமன்றி தமிழர்கள் வாழும் நாடுகள் எங்கும் நிதி திரட்டினார்கள்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் பெருமளவான நிதியை வழங்கினார்கள்.

இந்த மேன்முறையீடு தொடர்பான தீர்ப்பு விரைவில் வெளியாகப்போகிறது.

உச்ச நீதிமன்றம் 26 பேரையும் விடுதலை செய்யப்போவதில்லை. ஆனால் தண்டனைக் குறைப்பு செய்யக்கூடும். நீதிபதி நவநீதம் வழங்கிய மரண தண்டனை களை ஆயுள் தண்டனையாக மாற்றக்கூடும்.

26 பேருக்கும் மரணதண்டனையை விலக்காது போனாலும் குறிப்பிட்ட சிலருக் காவது விலக்கிக் கொள்ளலாம்.

எப்படியிருப்பினும் 26 பேரும் நிரபராதி கள் என்று உச்ச நீதிமன்றம் விடுதலை செய்ய முன்வராது என்றே தோன்றுகிறது.



### கொலைக்குப் பின்

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவு அளிப் பதை தி.மு.க., அ.தி.மு.க. போன்ற பெரும் கட்சிகள் நிறுத்திவிட்டன.

ராஜீவ் கொலைக்கு முன்பே ஈழப் போராட்டத்தையும், புலிகளையும் எதிர்த்து வந்த கட்சிகளும், துக்ளக் போன்ற பத்திரி கைகளுக்கும் மெல்ல அவல் கிடைத்தது போலானது.

தமிழக மக்களும் கணிசமானோர் ராஜீவ் கொலையை கண்டித்ததைவிட, தமது தமி ழக மண்ணில் வைத்து ராஜீவ் கொல்லப் பட்டதை கண்டித்தனர்.

அவ்வாறான சூழ்நிலையிலும் புலி களுக்கு ஆதரவான அமைப்புக்கள் தமிழ் நாட்டில் பகிரங்கமாகவே புலிகளை ஆதரித்து கூட்டங்கள் நடத்தி வந்தன.

### கடிதம்

1999 மே மாதத்துடன் ராஜீவ் கொலை யாகி எட்டு வருடங்களாகப் போகின்றன. இந்த எட்டு வருட காலத்தில் தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது செயற்படும் அமைப் புக்களில் ஒன்று தமிழர் தேசிய இயக்கம்.

அதன் தலைவர் பழ. நெடுமாறன் தமிழக சஞ்சிகையான 'தமிழன் எக்ஸ் பிரசுக்கு' கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அக் கடிதத்தில் இந்திய அரசின் இலங்கை தொடர்பான அணுகுமுறைகள், ராஜீவுக்கும், பிரபாகரனுக்கும் இடையிலான உறவுகள் பற்றி புதிய தகவல்களும் அடங்கியுள்ளன.

அதனால் அக் கடிதம் முழுமையாக இங்கு இடம்பெறுகிறது.

1978ம் ஆண்டு இலங்கை நாடாளு மன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாள ருமான அ. அமிர்தலிங்கம், தன் துணைவி யாருடன் தமிழ்நாடு வந்திருந்தார்.

அப்போது அவரும், தமிழ்நாடு காங்கிர ஸின் தலைவராக இருந்த நானும் டெல்லி சென்று இந்திராவை சந்தித்தோம். அப் போது அவர் பதவியிலில்லை.

இந்திராவின் ஆலோசனையின் பேரில் நாடாளுமன்றத் தலைவர்கள் கூட்டத்தில் அமிர்தலிங்கம் பேசினார். "இந்தியாவி லிருந்து பிழைப்புக்காகச் சென்று இலங்கை யில் குடியேறிய நீங்கள், அங்கு தனிநாடு கேட்பது எந்தவகையில் நியாயமானது?" என்று நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒய்.பி.சவாண் கேட்டார்.



இலங்கையில் இரு விதமான தமிழர்கள் இருக்கிறார்கள். இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆங்கிலேயர் காலத்தில் அங்கு சென்றவர்கள். ஈழத் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு மேலாக அங்கு வாழ்ந்து வரும் பூர்வீகக் குடிகள்." என்ற உண்மையை அவர் அறியாமலேயே இருந்தார். அமிர்தலிங்கம் அதற்கு தக்க பதில் தந்தார்.

சவாண் மட்டுமல்ல, அப்போது பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாயும் இப்பிரச்சினையில் தெளிவற்றவராக இருந்தார். இவர்கள் மட்டுமல்ல, இன்னமும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் பிரச்சனைக்கும், ஈழத் தமிழர் பிரச்சனைக்கும், உள்ள வேறுபாடுகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

### தியாகப் பயணம்

1983ம் ஆண்டு கொழும்பில் பேரின வாதிகள் தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட இனக் கலவரத்தைத் தொடங்கி மூவாயிரத் துக்கும் மேற்பட்ட தமிழர்களை படுகொலை செய்த நிகழ்ச்சி, தமிழ்நாட்டை மட்டுமன்றி இந்தியா முழுவதையும் உலுக்கியது.

இந்தக் கொடுமையை இந்திய அரசு மற்றும் மக்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்களைத் திரட்டி மதுரை யிலிருந்து இலங்கையை நோக்கி என்னுடைய தலைமையில் 'தமிழர் தியாகப் பயண'த்தை நான் தொடங்கினேன்.

அப்போது டெல்லியிலிருந்து வந்த அதிகாரி என்னிடம், "பிரதமர் இந்திரா நேற்று கூட ஜெயவர்த்தனாவின் தம்பி தலைமையில் டெல்லி வந்து அவரைச் சந்தித்த இலங்கை அரசின் தூதுக் குழுவினரிடம் தனது கண்ட னத்தை மிகக் கடுமையாகத் தெரிவித்திருக் கிறார். மேலும் பல நடவடிக்கைகளையும் அவர் நிச்சயமாக எடுக்க இருக்கிறார்." என்றார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் சரி. தமிழர் பிரச்சனையைப் பற்றி நடைபெறும் இந்தப் பேச்சில் இரு தரப்பிலும் ஒருதமிழர்கூட இல்லையே? என்ற எனது ஆதங்கத்தை வெளியிட்டேன். என் ஆதங்கம் இந்திராவிடம் தெரிவிக்கப்பட்டது.



அதற்குப் பிறகுதான் பிரதமரின் வெளியுறத் துறை ஆலோசகராக விளங்கிய ஜி. பார்த்த சாரதி சிறப்புத் தூதுவராக கொழும்பு அனுப் பப்பட்டார். இவர் தமிழர் என்பதோடு மட்டு மல்ல, இந்தியாவின் மூத்த ராஜதந்திரி என்ற முறையிலும் அவர் அனுப்பப்பட்டார்.

ஜி.பி.யின் இராஜதந்திரத்தின் விளைவாக அனெக்ஸ்-சி (Annexure-'C') என்ற திட்டத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஜெயவர்த் தனாவிற்கு ஏற்பட்டது. திட்டத்திற்கு முதலில் ஒப்புக்கொண்ட ஜெயவர்த்தனா அதிலிருந்து பின் வாங்கத் தொடங்கியபோது அன்னை இந்திரா, ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கு ஆயு தப் பயிற்சி கொடுப்பது என்ற ஒரு முக்கியமான முடிவை எடுத்தார்.

### உளவுத்துறையிடம்

இதற்கான முழுப் பொறுப்பும் 'றோ'விடம் (RAW) ஒப்படைக்கப்பட்டது. பிரபாகரன் முதலில் 'றோ' உளவுத்துறையை நம்பவில்லை. எனவே பயிற்சியில் சேர்வதற்கு மறுத்துவிட்டார்.

பின்னர் டெல்லியிலிருந்து உயரதிகாரி ஒருவர் சென்னை வந்து பிரபாகரனை சந்தித் துப் பேசினார். அதன்பிறகு பயிற்சி பெறுவதற்கு விடுதலைப் புலிகள் ஒப்புக்கொண்டனர். 'றோ' உளவுத்துறை அதிகாரிகள் பிரபாகரனின் மீது கோபம் கொள்வதற்கு இந்த நிகழ்ச்சி காரணமாக அமைந்தது.

இதற்கிடையில் அன்னை இந்திரா எதிர் பாராதவிதமாக படுகொலை செய்யப்பட்டு ராஜீவ் காந்தி பிரதமரானார். இந்தப் பின்னணி எதுவும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஏற்கனவே ஜி.பி.மீது பல வகைகளிலும் பொறாமை கொண்டிருந்த சில வட இந்திய அதிகாரிகள் இதைப் பயன்படுத்திக் கொண்ட னர். அவர்களின் சூழ்ச்சியில் சிக்கிய ராஜீவ், ஜி.பியைப் புறக்கணித்தார். அவரும் பதவியி லிருந்து விலகிக் கொண்டார்.

அதன் பின்னர் வெளியுறவுத் துறைச் செயலாளராக இருந்த மற்றொரு தமிழரான ஏ.பி.வெங்கடேசுவரனும் அவமதிப்பான முறை யில் ராஜீவினால் விலகிச் செல்ல வைக்கப் பட்டார்.

### தவறான ஆலோசனை

திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தை முறிந்ததற்கு பண்டாரியின் தன்முப்புப் போக்கே காரணமாக அமைந்தது. அதன் பிறகும், வெளியுறவுத் துறைச் செயலாளர் பண்டாரியும், இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் தீட்சித்தும் இப்பிரச்சனையில் ராஜீவிற்கு தவறான ஆலோ சனைகளைத் தொடர்ந்து வழங்கினார்கள்.

எல்லா வகையிலும் ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சி வலையில் ராஜீவ் சிக்குவதற்கு துணை புரிந்தனர். எந்த அளவிற்கு இவர்களுக்கும், ஜெயவர்த்தனாவிற்கும் நெருக்கம் இருந்தது என்பதை பின் கண்ட நிகழ்ச்சி விளக்கும்.

பண்டாரியின் மகள் திருமணம் டெல்லியில் நடைபெற்றபோது ஜெயவர்த்தனாவின் தம்பி, இலங்கை அதிபரின் சார்பில் திருமணத்தில் கலந்துகொண்டு மணமக்களுக்கு 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான வைர நெக்லஸை பரி சளித்தார்.

இந்தப் பிரச்சினை அப்போது நாடாளு மன்றத்திலும் கிளப்பப்பட்டது. பிரதமர் ராஜீவை குழப்பியதில் இவர்களுக்கும், 'றோ' உளவுத் துறைக்கும் பங்குண்டு.

ஈழத் தமிழர் பிரச்சனையில் இந்திய அரசின் இரண்டு உளவுத்துறைகளும் முரண் பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தன. 'றோ' உளவுத்துறை விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்கு மற்ற போராளி இயக்கங்களை பயன்படுத்துவதில் முனைந்தது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் தர மறுத்து, மற்ற இயக்கங்களுக்கு ஆயுதம் தந்து அவர்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்று இறக்கி விடுதலைப் புலிகளோடு மோதவிட் டது. இந்த மோதலில் விடுதலைப் புலிகளே வெற்றி பெற்றனர்.

அதே நேரத்தில் மற்றொரு உளவுப் பிரிவான ஐ.பி.(I.B) 'விடுதலைப் புலிகளே ஈழத் தமிழர்களின் ஆதரவைப் பெற்ற உண்மை யான பிரதிநிதிகள்' என்ற நிலையை எடுத்தது.

ஐ.பி.யைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் ராஜீவைச் சந்திப்பதற்காக பிரபாகரனை அழைத் துச் சென்றார். ஒரு மணி நேரத்திற்கு மேல் நடைபெற்ற அந்தச் சந்திப்பில் பிரபாகரனின் இலட்சிய உறுதியையும், நேர்மையையும் கண்டு வியந்த ராஜீவ்காந்தி அவரால் ஈர்க்கப்பட்டார்.



பிரபாகரனை அனுப்பிய பிறகு ராஜீவ் காந்தி என்ன கூறினார் என்பதை அந்த அதிகாரியே என்னிடம் தெரிவித்தார். "This is the man. We must give him full support" (இவர்தான் பொருத்தமான மனிதர். இவருக்குத்தான் நாம் முழு ஆதரவையும் தரவேண்டும்.)

இத்தகைய மனநிலையில் இருந்த ராஜீவை திசை திருப்பியது யார்?

'பண்டாரி, தீட்சித், 'றோ' உளவுத்துறை ஆகியோரே இதற்குக் காரணம் என்பதைத் திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்பு கிறேன். 'றோ' உளவுத்துறை எத்தகைய வேண் டாத செயல்களிலெல்லாம் ஈடுபட்டது என்ப தைப் பற்றி இலங்கை சென்ற இந்திய அமை திப்படை தளபதியான லெப் ஜெனரல் தீபிந்தர் சிங், மேஜர் ஜெனரல் சர். தேஷ்பாண்டே போன்றவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு எழுதிய புத்தகங்களில் மிகக் கடுமை யாகச் சாடியிருக்கிறார்கள்.

புலிகளுக்கும், இந்திய இராணுவத்திற்கும் மோதல் ஏற்பட்டதற்கு 'றோ' உளவுத்துறையின் தவறான அணுகுமுறையே காரணம் என்பதை அவர்கள் அப்பட்டமாக எடுத்துக் காட்டியிருக் கிறார்கள்.

### சி.ஐ.ஏ. ஏஜண்ட்

இன்னொரு திடுக்கிடும் நிகழ்ச்சியும் அப் போது நடைபெற்றது. இந்திய அரசின் சார்பில் போராளி இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த 'றோ' அதிகாரி உன்னி கிருஷ்ணன் திடீரென கைது செய்யப்பட்டார். 'அமெ ரிக்க சி.ஐ.ஏ.வின் ஏஜெண்டாக அவர் செயல்பட்டார்.' என இந்திய அரசு குற்றஞ்சாட்டி யது. டி.ஐ.ஜி. பதவி போன்ற உயர் பதவியில் உள்ள ஒரு அதிகாரி அமெரிக்க உளவு ஏஜெண்டாக மாறினார் என அரசாங்கம் குற்றம்சாட்டியமை இதுவே முதன் முறையாகும்.

அந்த அதிகாரி தந்த தவறான ஆலோ சனைகளை ஏற்றும் பிரதமர் ராஜீவ் செயல்பட்ட தன் விளைவாக பல பெருந்தவறுகள் நடந்தன.

அமெரிக்க ஏஜெண்டாக செயல்பட்ட அந்த அதிகாரியின் யோசனைகளுக்குப் பின்னணியில் அமெரிக்க சி.ஐ.ஏ. இருந்திருப்பது எவ்வளவு பெரிய கேட்டினை ஏற்படுத்திவிட்டது என்ப தைக் காலங்கடந்து உணர்ந்தபோது எல்லாமே கைமீறிப்போய்விட்டன.

தவறுகள் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத் தாற்போல் ராஜீவ்-ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இதற்குப் பின்னணி என்ன?

அமெரிக்க ஜனாதிபதி ரீகன் ஒருமுறை தென்னாசியாவின் பொலிஸ்காரன் (Policeman of South Asia) என இந்தியாவைப் பாராட்டினார்.

நடுவராக இருந்து செயல்பட வேண்டிய இந்தியா, ஒரு சார்பான நிலையை எடுத்தது. ஜெயவர்த்தனாவுடன் தமிழர் சார்பில் ராஜீவ் உடன்பாடு செய்து கொண்டது அடிப்படையிலே தவறாகும்.

இந்த உடன்பாட்டிற்கு ஜெயவர்த்தனா ஏன் சம்மதித்தார் என்பதை அவருடைய கட்சிக் கூட்டத்தில் அவர் வெளியிட்ட கருத்தே விளக்கும். "இந்த உடன்பாட்டில் நான் கையெழுத்திட்டது குறித்து பலர் குறை கூறுகிறார்கள். அவ்வாறு நான் செய்யாவிட்டால் நம்முடைய வீரர்கள் வீணாக இரத்தம் சிந்தி இருப்பார்கள். பிரபாகரனின் கை ஓங்கியிருக்கும்.


இப்போது நமது வீரர்கள் உல்லாசமாக வும், பத்திரமாகவும் பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்திய வீரர்கள் தமிழர்களுடன் மோதிக் கொண்டிருக்கிறார் கள். நாம் செய்ய வேண்டிய வேலைகளை இந்தியா செய்து கொண்டிருக்கிறது." என்று சொன்னார். இந்த உடன்பாடு எதற்காக செய்யப்பட்டது என்பதை இதைவிட யாரும் தோலுரித்துக் காட்டி இருக்க முடியாது.

அன்னை இந்திரா படுகொலை செய்யப் பட்டபோது யாழ் அலுவலக உச்சியில் கறுப் புக்கொடி ஏற்ற முயன்ற இரண்டு விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் சுட்டு வீழ்த்தியது. ஈழத் தமிழர்கள் இல்லங்களில் எல்லாம் இந்திராவின் படம் வைக்கப்பட்டு கறுப்புக்கொடி ஏற்றப்பட்டு தங்களின் சொந்த அன்னையை இழந்ததைப் போன்று அவர்கள் மூன்று நாட்கள் துக்கம் கடைப்பிடித்தனர்.

### பலன் என்ன?

தென்னாசியாவில் உள்ள நாடுகளில் வாழும் பல இன மக்களில் இலங்கையில் வாழும் தமிழர்களே இந்தியாவின்பால் உண் மையான நேசம் பாராட்டிவருபவர்கள். அத்த கைய உண்மையான மக்களின் போராட்டத்தை ஒடுக்க இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது.

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1,200 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். நாளொன்றுக்கு 3 கோடி ரூபாய்கள் வீதம் இரண்டாண்டு களுக்கு மேல், மக்கள் பணம் வீணாக வாரி இறைக்கப்பட்டது. பலன் என்ன?



நெடுமாறன்

அமெரிக்காவின் தலையீடு தென்னா சியப் பகுதியில் இலங்கை வழியாக அதிகரித் துள்ளது. இந்த நடவடிக்கை விடுதலைப் புலிகளுக்கோ அல்லது ஈழத் தமிழர் களுக்கோ மட்டும் எதிரானது என நாம் நினைத்தால் ஏமாந்து போவோம். இது இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கையாகும். அமெரிக்க வல்லரசின் தடங்கள் இலங்கையில் பதிவது நமக்குப் பேரபாயமாகும்.

நமக்கு உற்றுழி உறுதுணையாக இருக்கும் நண்பர்கள் யார்? அடுத்துக் கெடுக்கும் பகைவர்கள் யார் என்பதை உணராமல் ஈழத் தமிழர் பிரச்சனையில் ராஜீவ் கையாண்ட தவறான அணுகுமுறை இனியும் தொடரக் கூடாது. அது அடியோடு கைவிடப்பட வேண்டும். இந்திராவின் அணுகு முறைக்கு இந்திய அரசு திரும்ப வேண்டும்.

மிக அருகில் உள்ள இலங்கையில் தங்கள் சகோதரத் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு தமிழ்நாட்டுத் தமிழர்கள் வாளா விருக்க முடியாது.

அடக்குமுறைச் சட்டங்களும், பொய்ப் பிரசாரங்களும் சாம்பல் போல மூடி மறைத் திருந்தாலும் தமிழர்களின் உள்ளங்கள் கனல் போலத் தகித்துக் கொண்டிருக்கின்றன. நீறுபூத்த அந்த நெருப்பு பெருந்தீயாக மூண் டெழுவதற்கு முன்பாக செய்ய வேண்டிய கடமைகளை இந்தியா செய்தாக வேண்டும்.

அது ஈழத் தமிழர்களுக்கும் நல்லது. இந்தியாவிற்கும் நல்லது.

இதுதான் நெடுமாறன் அவர்கள் எழுதியிருந்த கடிதம்.

(தொடர்ந்து வரும்)

---

தமிழ்நாட்டின் முற்போக்கான கவிஞர் இன்குலாப். பேராசிரியராக பணியாற்றும் இன்குலாப் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுத்துவருகிறார். ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு வெளியான பின்னர் அவர் எழுதியது இது:

## நாளைக்கு தமிழகம் முழுவதையும்.....

— கவிஞர் இன்குலாப் —

வேறொன்றும் சொல்வதற்கு இல்லை. நீதிமன்றங்களின் மூலமாகவும் இந்திய வல் லரசு உரிமை கோரும் தமிழர்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தவிர. இதற்கு முன்பு பாவலரேறு பெருஞ் சித்திரனாரின் மகன் பொழிலனுக்கும், அவர் தம் தோழர் களுக்கும் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை இந்த அச்சுறுத்தலின் தொடக்கம் எனலாம்.

தமிழர்கள் அப்போதும் அசதியில் இருந் தனர். இப்பொது 26 பேருக்கும் மரணதண் டனை விதித்திருக்கிறது. இது அப்பட்டமான அச்சுறுத்தல்.

இதை நடுநிலையோடு விசாரணை செய்து, முறையாக வழங்கப்பட்ட தீர்ப்பாக ஏற்பதற்கில்லை. மூடிய அறைகளுக்குள் தொடங்கி நடத்தப்பட்ட விசாரணை, மூடிய அறைகளுக்குள் வழங்கப்பட்ட தீர்ப்பாக வெளி வந்திருக்கிறது.

நீதிபதி வழங்கிய தீர்ப்பைச் சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் சொல்லித்தான் செய்தியாளர்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

எத்தகைய குற்றங்கள் சுமத்தப்பட்டன? குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சொன்ன பதில்கள் யாவை? இதைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு ஏன் இல்லாமற் போனது? அரசு நடத்தும் இப்படிப்பட்ட அடாவடித்தனமான நீதிமன்ற விசாரணை முறைகள் கேள்விக்கு அப்பாற்பட்டவையா? பூவிருந்தவல்லி சிறப்பு நீதிமன்றம், 2வது நாளாக நியாய நடை முறைக்கும் மரணதண்டனை விதித்திருக்கிறது.

சத்தியமேவ ஜெயதே, வாய்மையே வெல்லும் என்றும், தேசத்தின் கொள்கை சரியென்று மெய்ப்பிக்கப்பட்டது என்றும் சிறப்புப் புலனாய்வுக்குழு தலைவர் புளகாங் கிதம் அடைந்திருக்கிறார்.

வெளிப்படையாக அல்லாமல் மூடி வைத்து விசாரணை நடந்து தான் சத்தியமே ஜெயதேவா?

ராஜீவ் என்று மனிதர் செய்த குற்றங்களும் ஊழல்களும்தான் தேசத்தின் கொள்கையா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சிறை, கைவிலங்கு, துப்பாக்கி, தூக்குக்கயிறு ஆகிய வற்றையே அரசு விடையாக வைத்திருக்கிறது. எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாத பாசிச வெறி தலைவிரித்தாடுகிறது. இன்று 26 பேர், நாளைக்கு தமிழகம் முழுவதையுமம் தூக்கில் போடலாம்.

ஒரு ஜெயின் ஆணையம் அவமதித்தது என்றால், சிறப்பு நீதிமன்றம் தமிழகத்துக்குத் தூக்குத்தண்டனை விதித்திருக்கிறது.

தமிழர்களே என்ன செய்யப் போகிறீர் கள்?



படிப்பகம்

www.padippakam.com

# துரையப்பா அரங்க புதைகுழியும் ஆட்சியாளரின் இரட்டை போக்கும்!

அலசுவது - இராஜதந்திரி

ஒரு பெரிய கோடொன்றை சிறிதாகக் காண்பிக்க வேண்டுமாயின்,அதனைவிட பெரிய கோடொன்றை பக்கத்தில் வரைந்துவிடவேண்டும்.

இந்த எளிமையான சூத்திரத்தைத்தான் யாழ்ப்பாணம் செம்மணி விவகாரத்தில் ஆட்சியாளர்கள் கையாண்டு வருகின்றனர்.

யாழ் துரையப்பா விளையாட்டரங்கு புதைகுழிகளும், எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டமை எதிர்பாராத நிகழ்வேயாகும்.

மாநாகரசபை ஊழியர்களால் அப்பகுதியில் திருத்த வேலைகள் செய்யும்போதே எலும்புக்கூடுகள் குழிகளுக்குள் இருந்து வெளிப்பட்டன.

இந்த எதிர்பாராத நிகழ்வு ஆட்சியாளர்களுக்கு வரப்பிரசாதம் போன்றே அமைந்திருக்கிறது.

செம்மணி விவகாரத்தை முடிமறைப்பதற்கான முயற்சிகள் தோல்வி கண்டதையடுத்தே, வேறு வழியின்றியே நீதிமன்ற விசாரணை, மண் ஆராய்ச்சி போன்ற நிகழ்வுகள் ஆட்சியாளரால் அரங்கேற்றப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை குழுக்கூட்டம், பாரிசில் நடைபெறவுள்ள இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளது மாநாடு போன்றவற்றை கருத்தில் கொண்டே செம்மணி விவகாரத்தை சட்டப்படி கையாள்வது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த ஆட்சியாளர்கள் முன்வந்தனர்.

ஆயினும் ஆட்சியாளரது இழுத்தடிப்பு நாடகம் உடனுக்குடன் அம்பலமாகிவிட்டது.

செம்மணி புதைகுழிகள் விடயத்தில் ஆட்சியாளர்கள் முடிமறைப்பு ஒன்றுக்கே அரும்பாடுபட்டு வருகின்றனர் என்னும் அபிப்பிராயம் உள்ளூரில் மட்டுமன்றி, சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மத்தியிலும் ஏற்பட்டு வருகிறது.

செம்மணியில் குழிகள் தோண்டப்பட்டால் எதுவுமே இருக்காதளவுக்கு சுத்திகரிப்பு நடந்திருக்கலாம் என்ற சந்தேகமும் தோன்றியிருக்கிறது.

செம்மணிப் பகுதியில் புகை முட்டங்கள் காணப்பட்டன என்றும், சந்தேகத்துக்குரிய நடமாட்டங்கள் இருந்தன என்றும் புகார்கள் கடந்த ஆண்டே கூறப்பட்டிருந்தன.

அப்போது அப் புகார்கள் தொடர்பாக மௌனமாக இருந்த ஆட்சியாளர்கள், தற்போது மண் ஆராய்ச்சி என்று காலத்தை இழுத்தடிப்பதும் பலத்த சந்தேகத்தை உருவாக்கும் விதமாக அமைந்திருக்கிறது.

சர்வதேச மண்ணியல் நிபுணர்களை அழைக்காது, சிங்கள இனத்தவரான உள்ளூர் மண்ணியல் நிபுணரை வைத்தே மண் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

மண்ணின் அமைப்பு சிதைவடைந்து காணப்படுவதாக மண்ணியல் நிபுணர் முதற்கட்ட அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனினும் இந்த அறிக்கையை கண்டுவிட்டு திருப்தி அடைவதோ, ஆராய்ச்சி நியாயமாக நடப்பதாகவோ முடிவுக்கு வந்துவிட முடியாது.

நியாயமாக நடப்பதாக முதலில் காண்பித்துவிட்டு, இறுதியில் ஆட்சியாளருக்கு சாதகமான முறையில் முடிவுகள் அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முற்றாக முடிமறைக்க முடியாத நிலையில் ஒரு சில புதைகுழிகளே இருந்தன என்றும், மண் சிதைவுற்ற பகுதிகள் அவை மட்டுமே என்றும் இறுதியில் கூறுவதற்கு ஏற்பவும் தற்போதே வழி கோலப்படலாம்.

எவ்வாறெனினும் செம்மணியில் பாரியளவு புதைகுழிகள் காணப்படாவிட்டால் ஆட்சியாளர்கள் மீதான சந்தேகம் வெளியுலகிலும் ஏற்படவே செய்யும்.

இந்தச் சந்தேகத்தில் இருந்து எவ்வாறு மீள்வது என்று ஆட்சியாளர்கள் முடியைப் பிய்த்துக் கொண்டிருந்த போதுதான், துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அங்கு எலும்புகள் இருப்பதாக அறியப்பட்ட சூட்டோடு சூட்டாக தோண்டல் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டு, 25 எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன.

செம்மணிப் புதைகுழியை தோண்டாது தாமதிக்க கூறப்பட்ட காரணங்கள் உண்மையானால், அதே காரணங்கள் துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகளுக்கும் பொருந்தக்கூடியதேயாகும்.

ஆனால், துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகளைத் தோண்டும் முயற்சியில் ஆட்சியாளரோ, படையினரோ, நீதியமைச்சோ தலையீடு எதனையும் செய்யவில்லை.



**25 எலும்புகள் கண்டெடுக்கப்பட்டும்—நாட்டின் ஜனாதிபதியிடமிருந்து எக் கருத்தும் வெளியாகவில்லை. அரசின் சார்பாக யாரும் சென்று பார்வையிடவுமில்லை....**

தற்போதுகூட யாழ் சட்டவைத்திய அதிகாரி கூறியதன் பிரகாரமே புதைகுழிகள் தோண்டப்படுவது இடை நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, செம்மணி புதை குழிகள் உடன் தோண்டப்படக்கூடாது என்று ஆட்சியாளர்கள் கருதியமையும், எதற்காகவோ அவர்களுக்கு தேவைப்பட்ட கால அவகாசமுமே தாமதத்துக்கும், இழுத்தடிப்புக்கும் உண்மையான காரணம் என்பது நன்கு புலனாகியுள்ளது.

துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகள் விடயத்திலும் ஆட்சியாளர்களின் இரட்டைப் போக்கு வெளிப்பட்டுள்ளது.

அங்குள்ள புதைகுழிகளை தோண்டுவதில் தாம் அக்கறையோடு நடந்துகொள்வதாக காண்பிக்கவும் ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

ஏனெனில், அப் புதைகுழிகள் இந்தியப் படையுடன் தொடர்புடையவை என்பதால், அவற்றை அம்பலமாக்க ஆர்வம் காட்டுவதாக இந்தியா நினைத்துவிடும். அவ்வாறு நினைத்தால் சந்திரிக்கா அரசுடன் இந்திய அரசு கசப்புக் கொள்ளும் நிலை ஏற்படலாம்.

எனவேதான் தாம் ஆர்வம் காட்டாததுபோல இருந்ததோடு, யாழ் நீதிமன்றம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் துரையப்பா அரங்க புதைகுழி தோண்டலையும் தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

ஆனால், புதைகுழி விவகாரங்களை முடிமறைக்கும் எண்ணம் தமக்கில்லை என்று உலகை நம்பவைக்க கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிட ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.

மனித உரிமை தொடர்பான நீதி நடவடிக்கைகள் இந்த நாட்டில் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் நடைபெற்று வருகின்றன என்னும் தோற்றத்தை ஏற்படுத்தவும் இச் சந்தர்ப்பத்தை நாசூக்காக பயன்படுத்தி உள்ளனர்.

அதுமட்டுமன்றி துரையப்பா விளையாட்டரங்கப் புதைகுழிகளிலிருந்து பெருமளவு எலும்புகள் மீட்கப்படுவதால், செம்மணி விவகாரம் சிறிய விவகாரமாக மாறிவிடும் என்று கணக்குப் போடப்பட்டுள்ளது.

நாளை செம்மணி தோண்டப்படும்போது அங்கு எதிர்பார்த்தளவு புதைகுழிகள் இல்லை என்று கூறினாலும் உலகம் நம்பும். துரையப்பா அரங்கப் புதைகுழிகளை முடிமறைக்காது விட்டமையால் ஏற்படும் நற்பெயரை வைத்து, செம்மணி புதைகுழி விவகாரத்தை தம் விருப்பப்படி முடித்துவைக்க நல்லதொரு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

ஆயினும் இத்தகைய தந்திரங்கள் மத்தியிலும் பல உண்மைகள் நிரூபணமாகியுள்ளன.

துரையப்பா அரங்க புதைகுழிகள் தோண்டப்பட்ட வேகமானது, செம்மணி புதைகுழி இழுத்தடிப்புக்கு கூறப்பட்ட நொண்டிச் சாக்குகளின் சாயத்தை வெளுக்க வைத்திருக்கிறது.

அதுதவிர முக்கியமான ஓர் உண்மையை தம்மையறியாது ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும், ஆட்சியாளரும் வெளிப்படுத்திவிட்டனர்.

துரையப்பா அரங்கப் பகுதியில் தோண்டத் தோண்ட எலும்புகள் வந்துகொண்டே இருந்தன.

மிகப் பாரிய மனிதப் படுகொலை நிகழ்ந்தமைக்கான ஆதாரமே அவையாகும். குழந்தைகள், பெண்கள் ஆகியோரது எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்த அதிர்ச்சிகள் எல்லாம் தமிழ் பேசும் மக்களிடையே மட்டுமே ஏற்பட்டுள்ளனவே தவிர, ஆட்சியாளரிடமோ, சிங்கள வெகுஜன தொடர்பு சாதனங்களிடமோ எவ்வித தாக்கத்தையோ, அனுதாப நோக்கையோ ஏற்படுத்தவில்லை.

இதேபோன்றதொரு புதைகுழி தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் ஜனாதிபதி நேரடியாகச் சென்று பார்வையிட்டிருப்பார். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அங்கு முகாமிட்டிருப்பார்கள்.

அரச தொலைக்காட்சி, வானொலிகள் தினமும் ஒப்பாரி வைத்து மக்களின் உயிர்கள்மீது தமக்குள்ள உள்ள அக்கறையை காண்பித்திருக்கும்.

எக்காலத்து எலும்புக்கூடுகள்? எவரால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள்? என்பதைக் கண்டறிய விசாரணைக் கமிஷன் ஒன்றை ஜனாதிபதி நியமித்திருப்பார்.

ஆனால் யாழ் துரையப்பா அரங்கப் புதைகுழிகள் தொடர்பாகவோ, அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் மூலம் வெளிப்படையாகியுள்ள கடந்த கால படுகொலை தொடர்பாகவோ நாட்டின் ஜனாதிபதியிடமிருந்து ஒரு வார்த்தைகூட இன்றுவரை வெளிவரவில்லை என்பது ஆழ்ந்து நோக்கத்தக்கதாகும்.

பத்திரிகைகளும், யாழ் சட்டவைத்திய அதிகாரியுமே துரையப்பா அரங்கில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பத்தாண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர்.

ஆனால் குறிப்பிட்ட எலும்புகள் எக்காலத்திற்குரியவை என்று கண்டுபிடிக்கக்கூட அரசு உத்தரவிடவில்லை. யாழ் சட்டவைத்திய அதிகாரிதான் தடயங்களை கொழும்புக்கு அனுப்பி பரிசோதிக்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மிகப்பெரும் அலட்சியம் மூலம் தமிழ் மக்களது உயர்களுக்கு இன்றைய ஆட்சியாளர்கள் வழங்கும் முக்கியத்துவம் எத்தகையது என்பது தெளிவாகியுள்ளது.

இதே சமயம் இந்த விவகாரத்தில் தமிழ்க் கட்சிகளது சுயரூபமும் அம்பலமாகியுள்ளது.

தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் கிடைத்தபடி இருக்கின்றன. இன்னமும் தோண்டினால் கிடைக்கப் போகின்றன. இதுவரை 25 எலும்புக்கூடுகள் கிடைத்துமிருக்கின்றன.

மிகப் பெரிய மனிதப் படுகொலை நடந்துள்ளது என்பதும், கொலையானவர்கள் அப்பாவி தமிழ் குடிமக்கள் என்பதும் எவ்வித சந்தேகமும் இன்றி தெரிகிறது. அவ்வாறிருந்தும் சொல்லி வைத்தாற்போல சகல தமிழ்க் கட்சிகளுமே எவ்வித சலனமும் இன்றி இருந்துள்ளன.

பல பெயர்களில், பல கட்சிகளாக இருப்பினும் சகல தமிழ்க் கட்சிகளுமே ஒரே அரசியல் சாக்கடையில் ஊறிய மட்டைகளாக மாறிவிட்டன என்பதற்கு இது தக்க சான்றாகும்.

துரையப்பா அரங்க எலும்புக்கூடுகள் எக்காலத்தவை, இக் கொலைகளுக்கு யார் காரணம் என்ற உண்மைகள் கண்டறியப்படுமானால் இந்தியப் படைக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

அதனைத் தவிர்க்க ஆட்சியாளர்கள் விரும்புவதுபோலவே, தமிழ்க் கட்சிகளும் விரும்புகின்றன.

தமது கையாலாகாத்தனத்தை மறைக்க தமிழ்க் கட்சிகள் பின்வருமாறு கூறமுற்படலாம்: 'இந்திய நட்பு நமக்குத் தேவை என்பதால் இராஜதந்திரம் கருதி கண்டிக்கவில்லை!' என்று கூறக்கூடும்.

இந்தியப் படையின் நடவடிக்கைகளை கண்டிப்பதோ, அக் காலத்திய படுகொலைகளைப் பற்றி பிரஸ்தாபிப்பதோ இந்திய எதிர்ப்பு என்று ஆகாது.

இந்தியப்படை நடவடிக்கைகளைக் கண்டித்த மு.கருணாநிதிதான் தமிழக முதல்வராக வெற்றி பெற்றிருந்தார். இந்தியாவின் சமீபகால பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ்கூட இந்தியப்படை நடவடிக்கைகளை காட்டமாக எதிர்த்து நின்றவரேயாவார்.

ஒரு வாதத்துக்காக தமிழ்க் கட்சிகள் கூறும் நொண்டிச் சாக்கை ஏற்றுக் கொண்டால்கூட, வேறு ஒரு மார்க்கம் இருக்கிறது.

தமிழ்க் கட்சிகள் நேராக இந்தியாவை குற்றம் சாட்டாது, இலங்கை அரசுக்கு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கலாம். "எந்தக் காலத்திற்குரிய எலும்புகள், இக் கொலைகளுக்கு யார் காரணம்!" என்பதை அரசு கண்டறிந்து கூறவேண்டும் என்று ஒருமித்து கோரிக்கை விட்டிருக்கலாம்.

இதன் மூலம் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதாகவும் இருக்கும்; இந்தியாவை விரோதித்துக் கொள்ள வாய்ப்பே இருந்திருக்காது.

எனவே, மனம் உண்டானால் மார்க்கம் உண்டு. தமிழ்க் கட்சிகளிடம் இப்போதிருப்பது பாராளுமன்ற அரசியல் பாதைக்குள் அடங்கிய குறுகிய சிந்தனைகளேயாகும்.

சகலரையும் அனுசரித்து, வளைந்தும், குனிந்தும் நற்பெயர் எடுத்து, அதன்மூலம் தமது அவ்வப்போதைய தேவைகளை நிறைவு செய்வது ஒன்றே தமிழ்க் கட்சிகளது ஒரேயொரு வேலைத்திட்டமாகவும், கொள்கையாகவும் அமைந்திருக்கிறது.

எனவே, மிகக் குறுகிய வட்டத்திற்குள்ளேயே இக் கட்சிகள் சிந்திக்கின்றன. துரையப்பா அரங்கப் புதைகுழிகள் பற்றி தாம் வாயே திறக்காது விட்டால் இந்திய அரசு மட்டத்தில் நற்பெயர் கிட்டும் என்று மிகச் சுலபமாக நம்புகின்றன.

இந்திய உறவை இவர்கள் நாடுவதும்கூட மிகக் குறுகிய தேவைகள் கருதியேயாகும். கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக விருந்து வைபவங்களில் ஆஜராகுவது, இந்திய விசாக்களை பெற்றுக் கொடுப்பது, இந்திய அரசியல் தலைவர்கள் சிலருடன் பரிச்சயம் ஏற்படுத்தி அதனை இங்கு தமது தேர்தல் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வது போன்ற குறுகிய எல்லைகளுக்குள்ளேயே இந்திய உறவு பற்றிய இக் கட்சிகளது கொள்கை அமைந்திருக்கிறது.

ஆனால், இக் கட்சிகளின் அவசியமே இன்றி உண்மைகள் அம்பலமாகிவருகின்றன.

துரையப்பா அரங்கப் புதைகுழிகள் இந்தியப் படை காலத்தவையே என்பது பெரும்பாலும் உறுதியாகியுள்ளது.

அதுபோல துரையப்பா அரங்க விவகாரத்தில் ஆட்சியாளரின் இரட்டைப் போக்கும், செம்மணியை சிறு விவகாரமாக்கத் திட்டமிடுவதும் தமிழ் மக்களால் நன்குணரப்பட்டுள்ளது.

இதேசமயம், துரையப்பா அரங்கப் புதை குழிகளை யாழ் நீதிமன்றத்தால் தோண்ட மட்டும்தான் முடியும். ஆனால் அதற்கு அப்பால் இப் புதைகுழிகளது சூத்திரதாரிகளை இனம் காட்டும் நடவடிக்கைக்கு அரசின் ஒத்துழைப்பு தேவையாகும்.

அந்த ஒத்துழைப்பு ஒருபோதும் கிடைக்கப்போவதில்லை. எனவே, பரபரப்பு ஏற்படுத்தும் செய்திகள் என்றளவிலும், செம்மணி விவகாரத்தை சிறிதாக்க அரசுக்கு சாதகமாக பயன்படுத்தல் என்ற அளவிலுமே துரையப்பா அரங்கப் புதை குழி விவகாரம் பயன்பட்டுவிட்டு, ஒரு குறிக்கப்பட்ட காலத்தின் பின்னர் கைவிடப்பட்டுவிடும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

## சின்னச் சின்ன ஆசை வண்ண வண்ணக் கூட்டு

"ஏனைய தமிழ்க் கட்சிகளோடு எமக்குக் கூட்டும் கிடையாது, குலாவலும் கிடையாது!" என்று கூறிவிட்டார் ஆனந்தசங்கரி.

ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளும் கூட்டணியின் இந்த அறிவிப்பு தமது செவியில் விழாதது போல அசடு வழிகின்றன.

தமிழ்க் கட்சிகளது இந்தக் கூட்டு நாடகம் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர்-கடந்த மார்ச் மாதம் 28ம் திகதி கொழும்பு கலதாரி ஹொட்டலில் ஆரம்பமானது.

இக் கூட்டத்தில் புளொட் சார்பில் சித்தார்த்தன் எம்.பி., பிற்றர், ஈ.பி.டி.பி. சார்பாக டக்ளஸ் தேவானந்தா எம்.பி, இராசமாணிக்கம் எம்.பி, ஜெகன், ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பாக சுரேஸ், வில்சன், ரெலோ சார்பாக, செல்வம் எம்.பி, சிறீகாந்தா, வினோதலிங்கம் ஆகியோரும், கூட்டணி சார்பாக ரவிராஜும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில்- வலிகாமம் காணி சுவீகரிப்பை நிறுத்து, திருமலையில் சிங்களக் குடியேற்றத்தை நிறுத்து, வன்னிக்கு உணவு அனுப்பு- என்றெல்லாம் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

ஆனால் தீர்மானம் எடுத்தது பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்காக மட்டும்தான். அரசுக்கோ, ஜனாதிபதிக்கோ இந்தத் தீர்மானங்கள் அனுப்பப்படவேயில்லை என்பது யாருமறியாத இரகசியம்.

மீண்டும் தமிழ்க் கட்சிகளது கூட்டம் ஏப்ரல் 11ம் திகதி த.சித்தார்த்தன் எம்.பி.யின் இல்லத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கூட்டணி கலந்து கொள்ளவில்லை. சித்திரைப் புத்தாண்டுக்கு பின்னர் கூட்டணி கலந்துகொள்ளும் என்று நீலன் திருச்செல்வம் தன்னிடம் கூறியதாக சுரேஸ் ஏனைய கட்சிப் பிரமுகர்களுக்குக் கூறினாராம்.

இதன் பின்னர் ஏனைய நான்கு தமிழ்க் கட்சிகளும் கூடி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று தயாரித்தன.

வலிகாமம் காணிச் சுவிகரிப்பை உடன் நிறுத்தி, வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய வேண்டும். அங்கு மக்கள் குடியமர உடன் அனுமதிக்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கை.

யுத்தத்தை நிறுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பது இன்னொரு கோரிக்கை.

மடு விவகாரம் பற்றி பலவாரங்களாக வாயே திறக்காத தமிழ்க் கட்சிகள், அந்தப் பிரச்சனை மக்கள் மனதைத் தொடும் பிரச்சனையாகிவிட்டது என்று தெரிந்ததும், அது பற்றியும் தீர்மானம் எடுத்தன.

படைகளை மட்டும் கண்டித்தால் அவர்கள் தம்மீது கோபப்படுவார்கள் என்பதால், புலிகளும் அங்கு நடமாடக்கூடாது என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டது.

புலிகள் அங்கு ஆயுதங்களோடு நடமாடுவதில்லை என்று மதகுருமார்களே கூறும்போது, அதற்கு மாறாக அரசின் கூற்றை நியாயப்படுத்துவதுபோலவே தமிழ்க் கட்சிகளது தீர்மானம் காணப்பட்டது.

எந்த விடயத்திலும் ஒரு தெளிவு இன்றி தமிழ்க் கட்சிகள் தடுமாறுகின்றன என்பதற்கு மேற்கண்ட தீர்மானமும் ஒரு உதாரணம்.

மேற்படி தீர்மானங்கள் அடங்கிய கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்புவதாகக் கூட்டத்தில் முடிவானது. எல்லோரும் தலையசைத்தனர். கூட்டம் இனிதே முடிவுற்றது.

அதன்பின்னர்- இதனை எழுதும்போது இரண்டு வாரங்கள் சென்றுவிட்டன. ஜனாதிபதிக்கு என்று தயாரிக்கப்பட்ட கடிதம் அனுப்பப்படவேயில்லை.

அக் கடிதத்தில் உள்ள வாசகங்கள் சில ஜனாதிபதிக்குக் கசப்பைக் கொடுக்குமோ? என்று தயங்கி, எவருமே கையொப்பம் போடவில்லையாம்.

இதற்கிடையே கூட்டணியும் இக் கட்சிகளோடு உறவை கத்தரிப்பதாக கூறிவிட்டது.

இதனால் மிகவும் மனமுடைந்திருப்பவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளரும், மீன்பிடி அமைச்சின் ஆலோசகருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தான்.

கூட்டணியையும் எப்படியாவது சேர்த்து வைத்திருந்தால்தான், அடுத்த பொதுத் தேர்தலில் பொதுப் பட்டியலில் போட்டியிடலாம்; யாழில் தனக்காவது ஓர் ஆசனத்தைப் பெறலாம் என்பது சுரேஸ் பிரேமச்சந்திரனின் நீண்ட காலக் கனவு.

1994ம் ஆண்டு பொதுத்தேர்தலில் கூட்டணியோடு இணைந்து போட்டியிட சுரேஸ் விரும்பினார். அந்த விருப்பத்தைக் கூட்டணி நிராகரித்தது.

தற்போது மறுபடியும் முயற்சித்து முறிந்து விழுந்துள்ளார். சுரேஸ் போன்றோர் தமது சின்னச் சின்ன ஆசைகள் காரணமாக கூட்டணிக்கு மேலும் மதிப்பும், மரியாதையும் தேடிக் கொடுப்பது தான் கண்ட பலன்.

தற்போது கூட்டு.... கூட்டு என்று சுரேஸ் ஒடித்திரிவது, வரதருக்கு வேட்டுவைக்கத்தான்.

வரதரைவிட சகல கட்சிகளையும் இழுத்துப் பிடித்து சவாரி செய்யக்கூடியது தானதான் என்று காண்பிக்கத்தான் ஓடுப்பட்டுத் திரிகிறார்.

இன்னொரு சுவாரசியமான சங்கதி: இலங்கை அரச வானொலியில் சுரேஸ் பிரேமச்சந்திரனின் மயிர்கூச்செறியும் வீரவரலாறு ஒலிபரப்பானது.

சுரேஸ் அவர்கள் முதன்முதலாக பார்த்த திரைப்படம் 'அரசிளங்குமரி'. அதிலே அவருக்குப் பிடித்த பாடல் 'சின்னப் பயலே சேதி கேளடா' போன்ற அரிய தகவல்களை காது குளிரக்கேட்க முடிந்தது.

மறக்க முடியாத அனுபவம் என்று கேட்ட போது, 'கண்ணாட்டியில் தோட்டம் செய்தது' என்று குறிப்பிட்டார்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை பலமாகத் தாக்கி மூன்று மரக்கிளைகளை வெற்றிகரமாக வீழ்த்தியதையும் குறிப்பிட்டிருக்கலாம்.

பிரபாகரனும் சிறு வயதில் எம்.ஜி.ஆர். படம் பார்த்ததாகக் கூறியிருந்தார். அதை அப்படியே கொப்பியடித்திருக்கிறார் பிரேமச்சந்திரன்.

அதெல்லாம் கிடக்க- ஏன் இந்தத் திடீர் பேட்டி? ஏன் இந்த சுயசரிதை? எல்லாம் வரதர் வருகைதான் காரணம்.

இப்படியான சின்னச் சின்ன ஆசைகளுடன் உருவாகும் கூட்டுக்கள் நீடிக்குமா?



படிப்பகம்

www.padippakam.com

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 58

### கடந்தவாரம்

**பல்கலைக்கழக விருந்துபசாரத்தில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிய தாதிமார்கள் அரச ஆய்வு நிறுவன இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.** இனி...

# இடி அமீன்

தருவது ரசிகன்

தாதிமார்களுடன் உறவு கொண்ட இராணுவத்தினரில் பலர் நிறைபோதையில் இருந்தனர்.

அதனால் அவர்கள் களைத்துப்போய், மூச்சு வாங்கி அப்படியே உருண்டு கிடந்தார்கள்.

அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட தாதிகள் பலர் இருளோடு இருளாக கட்டடத்தைவிட்டு வெளியேறினார்கள்.

முகாம் காவலரணைத் தாண்டியே அவர்கள் செல்ல வேண்டியிருந்தது.

காவலரணுக்குள் இருந்தும் முனகல் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

இரண்டு மூன்று இராணுவத்தினர் காவலரணில் வைத்தே தாதி ஒருவரை சதை வேட்டையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்களது கவனமெல்லாம் அத்தாதியின் உடம்புமீதே இருந்ததால், முகாம் வாயிலில் காவல் இல்லாதிருந்தது. அதன் வழியே தாதிகள் பலர் தப்பிச்செல்ல வசதியாகவிருந்தது.

வேறு சில தாதிகள் இருளில் அழுதபடி தங்கள் ஆடைகளைத் தேடிக்கொண்டிருந்தனர். சில துணிச்சலான தாதிகள் உருண்டு கிடந்த இராணுவவீரர்களது உடைகளைக் களைந்து தாம் அணிந்து கொண்டு ஓடித்தப்பினார்கள்.

அறையில் பூட்டி வைத்திருந்த மாணவர்களை, காலையில் அடித்து நொறுக்கி விட்டு இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

அந்த மாணவர்கள் ஊடாக இரவு நடந்த கொடுமை உகண்டா எங்கும் பரவியது.

அமீனின் படைகளிடம் இருந்த பயத்தையும் மீறி மக்கள் கொதித்தனர்.

ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றன.



வெளிநாட்டு செய்திகளிலும் அக் காட்டுமிராண்டித்தனம் வெளியானது.

"நாகரிக உலகம் எதனையெல்லாம் வெறுத்து ஒதுக்குகிறதோ, அதுவெல்லாம் உகண்டாவில் சர்வசாதாரணமாக நடந்து வருகிறது. காட்டுமிராண்டியும், மனித மாமிசம் புசிப்பவனுமான ஒருவனது ஆட்சியில் இதைவிட வேறெதை எதிர்பார்க்க முடியும்?" என்று சர்வதேச செய்திகளில் கண்டனங்கள் வீசப்பட்டன.

அதனால் அமீன் அரண்டு போனான்.

"தாதிமார்கள் சிலர் குடித்துவிட்டு கும்மாளமிட்டனர். மாணவர்களுடன் உடல் உறவு கொண்டனர். அவர்களையே இராணுவத்தினர் கைதுசெய்தனர். தமது ஒழுக்கக்கேடு வெளியே தெரியப்போகிறது என்று பயந்து மாணவர்களும், தாதிகளுமே கட்டுக்கதைகளை அவிழ்த்துவிட்டுள்ளனர். இராணுவத்தினர்மீது பழிபோடுகின்றனர். கதையையே மாற்றுகின்றனர்." என்று உகண்டா வானொலி அறிவித்தது.

இந்த அறிவித்தலை அடுத்து மக்ரெரே பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டனர். தாதிகள் சிலரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையால் மாணவர்கள் பின்வாங்குவார்கள் என்று அமீன் நினைத்தான்.

ஆனால் மாணவர்கள் மட்டுமன்றி தாதிகளும் போராட்டத்தில் குதித்தனர்.

வேறு வழியின்றி அமீன் ஒரு நாடகம் ஆடினான்.

"மாணவர்களிடமும் தாதிகளிடமும் நான் மன்னிப்புக் கோருகிறேன். நடைபெற்ற சம்பவங்கள் பற்றி தவறான தகவலை வெளியிட்ட வானொலி நிலைய அதிகாரியை பணி நீக்கம் செய்திருக்கிறேன். இப்படியான அதிகாரிகளின் பொறுப்பற்ற நடவடிக்கைகள்தான் நாடு சீர்கெடுவதற்கு காரணமாக உள்ளன.

அரச பொது ஆய்வு நிறுவனத்தில் நடைபெற்ற முறைகேடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், நீதி விசாரணை நடத்தவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கைதான மாணவர்களும், தாதிகளும் விடுதலை செய்யப்படுகின்றனர்."

அமீனின் இந்த அறிவிப்பும், அவன் இறங்கி வந்திருப்பதும் வெறும் நாடகமே என்பது மாணவர்களுக்கு தெரிந்திருந்தது.

மாணவர்களின் தலைவர்கள் நான்கு பேர் இரவோடு இரவாக கைது செய்யப்பட்டு அமீனின் முன்னால் நிறுத்தப்பட்டனர்.

அமீனின் அறிவித்தல் வெளியாவதற்கு முதல் நாளன்று இரவுதான் இக் கைதுகள் நடந்தன.

அமீனை நேரில் கண்டதும் மாணவர்களது துணிச்சல் காணாமல் போனது.

"இளம்வயது. சூடான இரத்தம். ஏதாவது செய்யத் துடிக்கும்தான்! நான் நினைத்தால் அந்தத் துடிப்பே நின்று போகுமே! என்னப்பா செய்வீர்கள்? உங்களை கோழிக்காலை முறிப்பதுபோல முறித்துப் போட என்னால் முடியும். என்ன, முடியுமா? முடியாதா?" என்று கேட்டபோதே, மாணவர் தலைவர்களுக்கு வியர்த்துப் போனது.

தன் மேசைமீது கிடந்த பொதி ஒன்றைப் பிரித்தான் அமீன்.

அதற்குள் என்ன இருக்கப்போகிறதோ என்று மாணவர்களின் இதயத்துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது.

தங்கள் உயிருக்கு உலை வைக்கும் ஏதோ ஒன்றுதான் அதற்குள் இருக்கப்போகிறது என்றே மாணவர்கள் மிரண்டு நின்றனர்.

ஆனால் அதற்குள் இருந்து அமீன் எடுத்தது பண நோட்டுக் கட்டுகள். மடமடப்பான புதுநோட்டுக் கட்டுக்கள்.

அவற்றை மேசையில் அழகாக அடுக்கினான். திறந்த விழி மூடாது நின்ற மாணவர் தலைவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

"என்ன பார்க்கிறீர்கள்? எல்லாமே உங்களுக்குத்தான் பகிர்ந்து தரப்போகிறேன். உங்களை இங்கிருந்து பிணமாக அனுப்ப விரும்பவில்லை. அதனால்தான் பணமாக தருகிறேன். பெற்றுக்கொண்டு நான் சொல்வதற்கெல்லாம் ஒப்புக் கொள்ளுங்கள்!" என்ற அமீன் உரத்து சிரித்துவிட்டு கூறினான்: "ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இல்லையானால் உங்கள் குடும்பங்களை நீங்கள் தேட வேண்டியிருக்கும்!"

அமீனின் சொற்படி நடக்க அவர்கள் ஒப்புக்கொண்டனர். நடுங்கும் கரங்களால் பணக் கட்டுக்களை பெற்றுக்கொண்டனர்.

அவர்களிடம் அமீன்: "என்னடா, அமீன் எங்கள் போராட்டத்திற்கு பயந்து பணிந்து பணம் கொடுக்கிறானே என்று நினைத்தால் நீங்கள் படித்த முட்டாள்கள்! உங்களை அழிப்பதைவிட, உங்களை வைத்தே எதிர்ப்புகளை அழிப்பதுதான் எனக்கு இலாபம். நாளை நான் ஒரு அறிக்கை விடப்போகிறேன். அதனை வரவேற்று மாணவர்களைத் தணிப்பதுதான் உங்கள் வேலை. புரிந்ததா? போய் வாருங்கள்!"

அதேபோல் தாதிமார்சங்கத் தலைவியும், செயலாளரும் அதே நாள் நள்ளிரவில் அமீன் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

"அழகாகத்தான் இருக்கிறீர்கள். உங்களைப் பார்த்தாலே நோயெல்லாம் பஞ்சுபோலப் பறந்து போகும். மருந்து ஏன்? மாத்திரை ஏன்? ஏனம்மா என்னோடு விளையாட ஆசையாக இருக்கிறதா?" என்று திடீரென்று கேள்வி ஒன்றைத் தூக்கிப் போட்டான் அமீன்.

சட்டென்று அவர்களில் ஒருத்தியை நெருங்கி அவள் மார்பைத் தன் கையால் அழுத்தினான்.

"உங்கள் இருவரையும் என் ஆட்களிடம் ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன். அவர்களும் அனுபவிக்கட்டுமே! என்ன சம்மதமா? இப்படி மதமதப்பாக இருக்கிறதே, யாருக்குத்தான் ஆசை வராது?" என்று மேலும் அழுத்தினான்.

அமீனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தோட்டாக்களாக அவர்களது உறுதியைத் துளைத்தது. அவர்கள் நிலைகுலைந்து போனார்கள்.

கைகூப்பி நின்றனர். கண்களில் இருந்த தாரை தாரையாகக் கண்ணீர்.

"போதும் நிறுத்துங்கள்! உங்களைப் போன்ற அழகான பெண்களை ஆண்டவன் படைத்தது அழுவதற்காகவா?" என்று இடிச் சிரிப்பை உதிர்த்தவன், மேசையை நோக்கிப் போனான்.

மேசையில் இன்னொரு பொதி கிடந்தது. அதனைப் பிரிக்க, அதற்குள்ளும் பண நோட்டுக்கள் கிடந்தன.

மாணவர் தலைவர்களுக்கு கூறியதையே அவர்களுக்கும் கூறினான்.

அமீனின் ஒவ்வொரு அசைவுக்கும் நடுங்கிக் கொண்டிருந்த தாதிகள் இருவரும், அமீன் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டினார்கள்.

பணக்கட்டை அவர்களிடம் கொடுத்த அமீன், அவர்களை அனுப்பிவைக்கும்போது தன்னை கட்டுப்படுத்த முடியாமல், இருவரையும் தன் இரு கைகளாலும் இழுத்து அவர்களது உதடுகளைக் கௌவி, இருவரையும் மாறி மாறி முத்தமிட்டான்.

மறுநாள் அமீனின் அறிக்கை வெளியானபோது, அமீனின் தந்திரத்துக்கு பலன் இருந்தது.

"ஜனாதிபதிக்கு எதுவுமே தெரியவில்லை. நாமாவது அவரது கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கலாம். இப்போது அவராகவே உண்மையைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுத்துவிட்டார். இனி எதற்குப் போராட்டம்? நிறுத்த வேண்டியதுதான்!" என்று மாணவர் தலைவர்கள் நான்கு பேரும் கூறிவிட்டனர்.

அமீனின் அறிவிப்பை சந்தேகித்த மாணவர்களின் குரல் எடுபடவில்லை. அதே போலவே தாதிகளது போராட்டமும் நிறுத்தப்பட்டது.

"அதிபர் அமீன் அவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட தாதிகள் நீதி விசாரணைக்கு ஒத்தழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்!" என்று தாதிகள் சங்கம் அறிக்கை விடுத்திருந்தது.

அறிக்கையைப் பார்த்த அமீன் இடிச் சிரிப்பை இறக்கினான். தன் முன்னால் அமர்ந்திருந்த அமைச்சர் சியம்பாவிடம், "பார்த்தீரா, ஜனநாயகத்தை? ஆர்ப்பாட்டக்காரர்களை நான் நினைத்திருந்தால் சுட்டுத் தள்ளியிருக்க முடியும். அப்படிச் செய்திருந்தால், கொஞ்சம் கெட்ட பெயர் சேர்ந்திருக்கும். இப்போது பாரும்-அவர்களின் தலைவர்கள் என்று வலம் வந்தவர்களை வைத்தே அவர்களை வழிக்கு கொண்டுவந்துவிட்டேன்!" என்றான்.

'அமீனின் மூளைக்குள் குயுக்தியான திட்டங்கள் சுலபமாக தோன்றிவருகின்றன. அமீன் தந்திரத்தில் நன்கு தேறிவிட்டான். இனி உகண்டா மக்கள் முட்டாள்களாகப் போகிறார்கள்!' என்று உள்ளூர நினைத்துக் கொண்டார் சியம்பா.

அவரது நினைப்பை மேலும் உறுதிப்படுத்துவதுபோல அமீன் கூறினான்: "மிஸ்டர் சியம்பா! எனது ஆட்களை வைத்தே கட்சிகள் ஆரம்பித்து எனக்கு எதிராக கோஷம் போட வைக்கப்போறேன்!"

சியம்பாவுக்கு புரியவில்லை. விழித்தார்.

அவரது குழப்பத்தை இரசித்த அமீன் கூறினான்: "நம் ஆட்கள் நமக்கு எதிராக கோஷம் போட்டால், நமது உண்மையான எதிரிகள் நமக்கு எதிராக கோஷம் போட சந்தர்ப்பம் இருக்காதல்லவா?"

சியம்பாவுக்கு அமீனின் நாசகார மூளை அச்சமூட்டியது. மிகப் பயங்கரமான ஒருவனிடம் உகண்டாவின் எதிர்காலம் வசமாக சிக்கிக் கொண்டதாக நினைத்தார்.

ஆனால் அடுத்தடுத்து நடந்த கொடூர சம்பவங்கள் அமீனின் தந்திரங்களையும் மீறி அவனது பயங்கர சொருபத்தை காண்பித்தன. (இடி தொடரும்)

# காதல் வலையில் டயானாவின் புதல்வர்

சாள்ஸ்-டயானாவின் புதல்வர் இளவரசர் வில்லியம் காதல் வலையில்வீழ்ந்துவிட்டார்.

அவர் தன் இதயத்தை தொலைத்திருப்பது யாரிடம் தெரியுமா?

தன் தந்தையான இளவரசர் சாள்ஸின் அருமைக்காதலியும், டயானாவின் வில்லியுமான கமீலாவின் உறவுக்கார பெண்ணிடம் தான்.

கமீலாவுக்கு பாக்கர் பௌளஸ் என்னும் மைத்துனர் இருக்கிறார். அவரது மகள் எம்மா பார்க்கர். 24 வயது அழகுப் பெட்டகம்.

இளவரசர் வில்லியமைவிட எம்மாவுக்கு



எட்டு வயது அதிகம். இருவரும் பல உணவு விடுதிகளில் ஒன்றாக அமர்ந்து உணவு அருந்தியுள்ளனர்.

இலண்டனிலுள்ள உல்லாச ஹொட்டலில் ஒரே மேசையில் ஒருவரை ஒருவர் ஆசையோடு உற்றுப் பார்த்த வண்ணம் சில மணி நேரம் இருந்ததைக் கண்ணுற்ற ஹொட்டல் உணவு பரிமாறும் சிப்பந்தி ஒருவர், "வில்ஸ் அப்பெண்ணால் வசீகரிக்கப் பட்டுவிட்டார்!" என்று கூறினார்.

"இளவரசர் வைத்த கண் வாங்காமல் எம்மாவைப் பார்த்த வண்ணம் ஏதோ கிசுகிசுத்துக் கொண்டிருந்தார். அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அப்படியே எம்மா பூரணமாக ஏற்றுக்கொண்டவர் போல் காணப்பட்டார்!" என்றும் அவர் மேலும் கூறினார்.

## நல்ல நண்பர்

இவர்கள் இருவரும் மிகவும் உயர்தரமான ஃபொக்ஸ்ட்ரொட் ஒஸ்கார் உணவு விடுதியில் தான் முதன் முதலில் பகிரங்கமாக சந்தித்து உரையாடி மகிழ்ந்தார்கள். அதன் பின் இப்பொழுதெல்லாம் இவர்கள் அடிக்கடி சந்திக்கிறார்கள்.

எம்மாவின் மிக நெருக்கமான சிநேகிதி ஒருத்தர் கருத்துத் தெரிவிக்கையில், "இவர்கள் ஒருவரை ஒருவர் நட்பின் நிமித்தம் மட்டுமே சந்தித்துப் பழகுகிறார்கள். இவர்களுடைய நட்பில் எத்தகைய-ஒழுக்கத்துக்குமாறான தொடர்பும் கிடையாது. இளவரசர் அழகான, நல்ல சுபாவமுள்ள தனது வயதுக்கேற்ற அறிவுள்ள ஓர் இளைஞர். மிகவும் பிரதானமாக இளவரசர் நம்பத்தகுந்த ஒரு நண்பர் என்றே எம்மா கருதுகிறார்" என்கிறார்.

அண்மையில் ஒரு நாள் நள்ளிரவு கடந்து ஒரு மணிவரை இளவரசரும் எம்மாவும் உரையாடிக் கொண்டிருந்தனர். அதன் பின்னர் கமீலாவின் இரு பிள்ளைகளான ரொம் மற்றும் லௌரா- இவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர். நால்வரும் 4 போத்தல் வைனை அருந்தி முடித்தனர். அதன் பின்னர் கே-பார் (K-Bar) இரவு விடுதிக்குக் கிளம்பினர்.

## துடிப்பான பெண்

எம்மா ஒரு துடிப்பான பெண். வெளிவட்டார விளையாட்டுகளில் ஈடுபாடு கொண்டவர். மணிக்கூடுகளுக்கு வடிவமைப்பு வழங்கும் காட்டியர் என்பவரின் மாடலாகச் சில காலம் பணிபுரிந்தார்.

தன்னை ஒரு 'மாமிசத் துண்டாக' மதிக்கும் அந்த வேலையை விட்டு விட்டார். தற்போது ஆண்களுக்கென வெளியிடப்படும் ஒரு சஞ்சிகையில் பணிபுரிகிறார்.

சிறு பராயத்திலிருந்தே, தனது தந்தையான சாள்ஸ் போன்றே வில்லியமும் அழகிய இளம் பெண்களை இரசிக்கும் பாங்குடையவர்.

இவர் விரும்பி பழகிய இருவரில் மொடல் அழகி சிண்டி கிரௌஃபோர்ட் மற்றும் நடிகை பமீலே அண்டர்சன் ஆகிய இருவரும் அடங்குவர்.

# ஜெமினியைக் கொல்ல ஜூலியா சதி?

காதல் மன்னன் ஜெமினி கணேசனும். அவரது இளம் மனைவி ஜூலியாவும் இப்போது நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தனது கணவர் ஜெமினியை அவரது முதல் மனைவி பாப்ஜி கடத்திச் சென்று அடைத்து வைத்திருப்பதாக ஜூலியா கூறி வந்தார்.



ஆனால் ஜெமினி நீதிமன்றத்துக்கு நேரில் வந்து சென்றுள்ளதால், ஜூலியா கூறியது பொய்யாகிவிட்டது.

ஜெமினி, ஜூலியா பிரிவுக்கு பல காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன. அவை பற்றி கடந்தவாரம் தெரிவித்திருந்தோம்.

இப்போது மேலும் ஒரு புதிய காரணம் கூறப்படுகிறது. ஜெமினியை தீர்த்துக் கட்டிவிட்டு சொத்துக்களை விரைவாக அடைவதற்கு ஜூலியா திட்டம் போட்டாராம்.

அதற்காக அவரது முன்னாள் காதலரான இளைஞர் ஒருவரை சிங்கப்பூரில் இருந்து சென்னைக்கு அழைப்பித்தாராம்.

அந்த இளைஞரது உதவியுடன் ஜெமினியை தீர்த்துக் கட்டுவதே திட்டமாம்.

இதனை எப்படியோ ஊகித்துத்தான் ஜெமினி ஜூலியாவுடன் தங்குவதற்கு பயந்து, முதல் மனைவி வீட்டுக்கு ஓடினாராம்.

ஆனால் இதுவும் பொய்யான குற்றச்சாட்டுத்தான் என்கிறது ஜூலியா வட்டாரம். ஜெமினியை ஜூலியாவிடம் இருந்து பிரித்ததை நியாயப்படுத்த அவர்கள் கட்டிவிடுகின்ற கற்பனைக் கதை என்கிறது ஜூலியா வட்டாரம். உண்மையை யாரறிவாரோ?!

# கொலைகார நண்டு

அவுஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகத்தில் உள்ள கடல் பகுதியை அங்குள்ள ஊழியர்கள் அலசி ஆராய்ந்தனர். அப்போது துறைமுக நீரின் ஆழத்தில் இருந்து ஒரு அதிசய நண்டு வெளிப்பட்டது.

மற்ற உயிரினங்களைப் பிடித்துத் தின்னக்கூடிய கொலைகார நண்டாக இது பார்வைக்குத் தோன்றுகிறது. இந்த விஷயம் உயிரியல் நிபுணர்களின் பார்வைக்கு எட்ட அவர்கள் வந்து நண்டைக் கைப்பற்றினார்கள். இந்த நண்டு எருகோசிலா கிரகாமா என்ற இனத்தைச் சேர்ந்தது என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இது 20 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட ஜூராசிக் காலத்தைச் சேர்ந்தது என்று அவர்கள் கூறியுள்ளனர்.

# காதணியால் கணவனுக்கு கல்தா!

ஐக்கிய அரபுக் குடியரசில் நடந்த சம்பவம் இது. கணக்காளராக பணியாற்றும் வாலிபர் ஒருவருக்கு காதணி அணிய ஆசை. அணிந்து கொண்டார்.



காதணியுடன் வீடு சென்றதும் மனைவி முகம் சுளித்தார். 'அந்தக் கண்றாவியை கழற்றி எறியுங்கள்' என்றார்.

கணவருக்கு மூக்கின்மேல் கோபம் வந்ததால் மனைவியை உதைத்தார்.

மனைவி நீதிமன்றத்துக்கு சென்றார்.

"ஆண்கள் காதணி அணிவது முஸ்லிம் மத சட்டத்துக்கு முரணானது' என்று கூறிய நீதிபதி, மனைவியின் விருப்பப்படி விவாகரத்துக்கு அனுமதி அளித்து விட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

# நக ஆயுதம்



← நகங்களை பெண்கள் ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று மகாத்மா காந்தியே கூறியிருக்கிறார்.

இங்குள்ள பெண்ணுக்கு காந்தி கூறியது தெரியாமல் இருக்கலாம். ஆனால் நகங்களை நவீன ஆயுதமாக மாற்றி வைத்திருக்கிறார்.

இந்த நக் அலங்காரம் இன்று அமெரிக்காவில் முதலிடம் பெற்றுள்ளது. நகங்களை நீளமாக வளர்த்து இப்படி வடிவமைத்திருப்பதால் சமயத்தில் ஆயுதமாகவும் உபயோகமாகும். வாலாட்டுகிறவர்களின் கண்களுக்குள் ஒரே செருகு.

# நவீன ஹிட்லர்




↑ அருமையான சுலோக அட்டை இது. கிளின்ரனை ஹிட்லர் போல வரைந்துள்ளனர். மீசையை வைத்ததுமே கிளின்ரன் சாட்சாத் ஹிட்லர் போலவே தெரிகிறாரல்லவா?

கொசாவோ மீது அமெரிக்க நாசகாரத் தாக்குதலைச் கண்டித்து ஸ்வீடனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒரு காட்சி இது. '21ஆம் நூற்றாண்டின் ஹிட்லர் கிளின்ரன்' எனனும் வாசகம் கொண்ட அட்டைகளுடன் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

# வருவது யாரோ?

பிரசித்தி பெற்ற மோனாலிஸா ஓவியம் உயிர் பெற்று நடந்து வருவது போன்ற தோற்றத்தை ஸ்பானிய நாட்டின் பத்திரிகைப் படப்பிடிப்பாளர் ரினோ சோரியானே தனது படப்பிடிப்பின் மூலம் ஏற்படுத்திமிருக்கிறார். 1999ஆம் ஆண்டுக்கான உலகப் பத்திரிகைப் படப்பிடிப்பாளர்களுக்கான போட்டியில் இப்படம் முதலிடத்தைப் பிடித்தது. ஸ்பெயின் நாட்டு பார்செலோனா நகரில் கற்பனையின் மாயத் தோற்றங்களை வெளிப்படுத்தும் புகைப்படக் கண் காட்சியின்போது இப்படமும் வைக்கப்பட்டிருந்தது.



## தகவல் பெட்டி

# புதிய மக்கள் படை

→ உலகின் பல நாடுகளிலும் அடக்குமுறை ஆட்சிகளுக்கு எதிராக போராட்டம் நடந்துகொண்டு தானிருக்கின்றது. ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களுக்கு எதிரான ஆயுதப் போராட்டங்கள் வெடித்துள்ளன. பெரும்பாலும் இளைஞர்களும் யுவதிகளும் கெரில்லாப் போராளிகளாகி அரச படைகளுடன் மோதி வருகின்றனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கம்யூனிச சார்புடைய புதிய மக்கள் படை அந்நாட்டு அரச படைகளுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்குகின்றது.

இரு தரப்பினருக்கும் அவ்வப்போது ஏற்படும் மோதல்களில் பல உயிர்கள் பலியாகின்றன.



பிலிப்பைன்ஸ் தென் பகுதி மின்டானோ சூரி காவோ மாகாணத்திலுள்ளது. இங்குள்ளஅடர்ந்த காடுகளில் பதுங்கியிருந்த புதிய மக்கள் படை கெரில்லாக்களை கடந்த பெப்ரவரி 16 ஆம் திகதி அரச படைகள் முற்றுகையிட்டுத் தாக்கின. போராளிகள் 9பேர் கொல்லப்பட்டார்கள். 10 போராளிகள் தப்பியோடிவிட்டார்கள்.

படைகளிடம் காயமடைந்த ஆண் போராளியும் பெண் போராளியும் பிடிபட்டனர்.

படுகாயமடைந்த இளம் போராளி உயிருக்காகப் போராடுகின்றார்.

ஜெலின் டெயோங் என்ற 17 வயது பெண் போராளி படுகாயமடைந்த போராளியின் அருகில் காணப்படுகிறார். இந்த போராளிகள் வாழ்வதற்காக போராடுகிறார்கள். போராடுவதற்காக வாழ்கிறார்கள்.


# டி.வீ.டி

↓ ஜப்பானைச் சேர்ந்த மற்சுஷிட்டா எலக்டிரிக் (பனாவிஷன்) நிறுவனம் கைக்கு அகடக்கமான டி.வி.டி.(DVD) சாதனத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதிலுள்ள மிகச் சிறிய திரையில் சி.டி. கசட்டுகள் மூலம் படம் பார்க்கலாம். இசையையும் கேட்கலாம். இந்நிறுவன ஊழியரான கஸுமி ரமாமோட்டோ இக்கருவியை சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கிக்காட்டுகிறார்.

கடந்த மார்ச் 20 ஆம் திகதி இச்சாதனம் ஜப்பான் சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டது. DVD-L50 என்றழைக்கப்படும் இச்சாதனம் உலகச் சந்தையிலும் விரைவில் விற்பனைக்கு விடப்படும்.' என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் எடை ஆக 940 கிராம் மட்டும்தான்.





# மா மணி

← இது ஆராய்ச்சி மணியல்ல. ஆச்சரியமணி. ஃபிரான்ஸ் நாட்டில் இதனை உருவாக்கியுள்ளனர்.

தற்போது நான்டெஸ் நகரத் துறைமுகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதன் எடை 42 தொன். சுற்றளவு நான்கு மீட்டர். தற்போது உலகிலேயே மிகப் பெரிய மணியாக கருதப்படும் இதனை இரண்டு நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ளன. வரப்போகும் 2000 மாவது ஆண்டை சிறப்பிக்கும் வகையில் கென்டக்கியில் உள்ள 'நியூ போர்ட்' துறைமுகத்தில் இதனை தொங்கவிடப் போகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

சினிமா விமர்சனம்

# என் வழி தனி வழி

படம் : படையப்பா
நடிப்பு : சிவாஜி, ரஜினி, சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன்,அப்பாஸ், நாசர்.
இயக்கம் : கே.எஸ்.ரவிக்குமார்
இசை : ஏ.ஆர்.ரகுமான்

ரஜினி ரசிகர்களுக்கு என்றே தயாரான படம். ஆரம்பத்தில் சில காட்சிகளில் சிவாஜி தோன்றுகிறார். அருமையான ஒப்பனை. அளவான நடிப்பு. அத்தோடு அவர் துடிப்பு அடங்கிய பின்னர், காட்சிக்கு காட்சி ரஜினியின் துடிப்பு.

பாம்பை கையால் பிடித்து தூக்கியபடி, சல்யூட் ஒன்றை ஸ்ரைலாக வீசிக்கொண்டு அறிமுகமாகும் ரஜினிக்கு சரியான வில்லி ரம்யா கிருஷ்ணன்.

ஜெயலலிதாவை மறைமுகமாக குத்திக்காட்ட ரம்யா கிருஷ்ணனை வில்லியாக வைத்து கதையை நகர்த்தியுள்ளனர்.

'அளவுக்கு அதிகமாக ஆசைப்படும் ஆணும், அதிகமாக கோபப்படும் பெண்ணும் நல்லா வாழ்ந்ததாக சரித்திரம் கிடையாது' என்ற வசனத்தை கிட்டத்தட்ட மூன்று முறை பேசியிருக்கிறார் ரஜினி.

ஜெயலலிதாவை அம்மா என்றுதான் தொண்டர்கள் அழைப்பார்கள். படையப்பாவில் ரம்யாவை அம்மா என்று கூப்பிட வைத்துள்ளனர்.

துண்டை தூக்கி தோளில் போடுவது, சுருட்டை பற்றவைப்பது போன்ற ஸ்ரைல்களுடன், ரஜினி இதில் பேசும் முத்திரை வசனம்: 'என்வழி தனி வழி'.

இதிலும் அரசியலுக்கு ரஜினி வரக்கூடும் என்பது போன்ற எதிர்பார்ப்பை மறுபடி ஏற்படுத்தியுள்ளனர். அடிக்கடி இப்படி ஒரு எதிர்பார்வை ஏற்படுத்திப் பார்ப்பதில் ரஜினிக்கும் ஆர்வம் போலிருக்கிறது.

ரஜினி பிரசாரம் செய்தும் ஜெயலலிதா கட்சி பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றது. அதனையே ரம்யாவிடம் ரஜினி ஒருமுறை தோற்பது போலவும், துண்டு தோளில் இருந்து விழுவதுபோலவும் காட்டியுள்ளனர்.

பின்னர் ரம்யாவை வென்றுவிட்டு ரஜினி கூறுகிறார்: "துண்டு ஒரு முறை தான் நழுவும்."

ரஜினியைத் தவிர நடிக்க வாய்ப்பு கிடைத்துள்ள ஒருவர் ரம்யா கிருஷ்ணன். ஏனையோர் வந்து போகிறார்கள். சௌந்தர்யா ஐயோ பாவம். நடிக்க சந்தர்ப்பமே இல்லை. ரஜினியின் தோழராக செந்தில், ரமேஷ் கண்ணா போன்றோர் வருகிறார்கள். அவர்களில் ரமேஷ் கண்ணாவுக்கு மட்டும் சௌந்தர்யாவுக்கு கடிதம் கொடுக்கும் வேலை. ரஜினியை காணும்போதெல்லாம், பாம்மைக் கையால் பிடித்தது பற்றி அனுமோகன் கேட்பது கலகலப்பு.

பாடல்கள் ரஜினி படத்துக்கு ஏற்ற விதத்தில் இசையமைக்கப்பட்டுள்ளன. அதனால் ரகுமானின் முத்திரையைக் காணவில்லை. ரஜினியோடு 'முத்து' படம் தந்த ரவிக்குமார் படையப்பாவை இயக்கியுள்ள விதம் ரசிகர்களிடையே பாராட்டை பெறும்.

மொத்தத்தில் 'படையப்பா' பாட்ஷாவைவிடகுறைவு, அருணாச்சலத்தைவிட உயர்வு!

## மொழிமாற்றுப் படங்கள்

மொழிமாற்றுப் படங்களில் சமீபமாக நம் நாட்டுக்கு விடியோ வழியாக வந்துள்ள படங்கள் 'கணேஷ்', 'ஜித்தன்'.

'கணேஷ்' படத்தில் வெங்கடேஷ், ரம்பா நடித்துள்ளனர். இடைவேளைவரை அமர்க்களம். பின்னர் சற்று தடுமாற்றம். ரம்பாவின் கவர்ச்சிக்காக ஜொள்ளர்கள் நம்பிப் பார்க்கலாம். அடி தடி காட்சிகளும் அமோகம்.

'ஜித்தன்' படத்தில் நாயகன் டாக்டர் ராஜசேகர். அவருக்கு இரண்டு ஜோடிகள். ரம்பா, சௌந்தர்யா.

தன் குடும்பத்தை அழித்த விஜயகுமாரையும், அவரது குடும்பத்தையும் அழிக்கிறார் ராஜசேகர். விஜயகுமாரின் மகளான ரம்பாவை காதலித்து ஏமாற்றி கொலை செய்கிறார். இன்னொரு மகளான சௌந்தர்யாவை காதலிப்பதுபோல நடித்து ஏமாற்றி சொத்துக்களை மடக்குகிறார்.

வில்லத்தனமான கதாநாயகனாக டாக்டர் ராஜசேகர் நடித்திருக்கிறார். பொழுதுபோக்காக ரசிக்கக்கூடிய சராசரிப் படம்: ஜித்தன்.

## ராஜஸ்தான் தாமதம்

சரத்குமார், விஜயசாந்தி நடித்த ராஜஸ்தான் படம் சித்திரைப் புத்தாண்டுக்கு வெளிவருவதாக இருந்தது.

ரஜினி படத்தோடு வெளியிட்டு அதனால் வசூலுக்கு சேதம் ஏற்படலாம் என்று கருதியதால், படவெளியீட்டை பின்போட்டுவிட்டனர்.

'ராஜஸ்தான்' படத்தை வெளிநாடுகளுக்கு திரையிடும் உரிமையை யாருக்கும் வழங்கவில்லை. திருட்டு விடியோ பயம் காரணமாகவே வெளிநாடுகளுக்கு விற்கவில்லையாம்.

## நானும் காதலிக்கிறேன்

சித்திரலேகா பட நிறுவனம் சார்பாக தயாராகும் படம், 'நானும் காதலிக்கிறேன்' இப்படத்தில் பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக நடிதுள்ளார்.

தினம் ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருக்கும் பெரிய பணக்காரராக பிரகாஷ்ராஜ் நடித்திருக்கிறார்.

எதையும் விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்று நினை[...] நாயகனுக்கு காதலை வாங்க முடியாது என்று ஒரு [...] நிருபிப்பதுதான் கதை. பிரகாஷ்ராஜின் ஜோடியாக மும்பை இறக்[...] ஆமிஷா ஜுல்கா நடித்துள்ளார்.

இப்படத்தை நேரடி தமிழ்ப் படம் போல செய்தி வெளியிட்டுள்ளனர். ஆனால் இது கன்னடத்தில் இருந்து தமிழுக்கு மொழிமாற்[...] செய்யப்படும் படம்.

## ரம்ப[...]

படையப்ப[...] கிருஷ்ணன் [...] நினைக்கிறா[...]

அதனால் [...] இருக்கிறார். [...]

## காதோடு சொல்லுகிறோம்

'பெரியண்ணா' படத்தில் முன்றெழுத்து நாயகனுக்காக இன்னொரு இளம் நாயகன் மூன்று பாடல்களை பாடியுள்ளார். அவை அப்படத்திற்காக பாடப்பட்டது என்றே கூறப்பட்டது. அதில் உண்மை இல்லையாம். ஆல்பம் ஒன்றுக்காக அந்த நாயகன் பாடி பதிவு செய்து வைத்திருந்த பாடல்களைத்தான் பயன்படுத்தி உள்ளனராம்.

தமிழக பிரபல வார இதழ் வெளியிட்டுள்ள தகவல் இது. முன்னாள் காதலர்களாக இருந்து பிரிந்த பூ நடிகையும் இளைய திலகமும் தற்போது அடிக்கடி சந்திக்கிறார்கள். சமீபத்தில் ஏ.வி.எம். ஸ்ருடியோவில் இவர்கள் சந்திப்பு நடந்துள்ளது. இவர்களது சந்திப்பை கண்டவர்கள் முகம் சுளிக்கும் அளவுக்கு சந்திப்பு இருந்ததாம்.

தனக்கு ஜோடியாக படத்துக்குப் படம் புது நடிகைகளை போடுமாறு முருகனது பெயர் கொண்ட நகைச்சுவை நடிகர் தயாரிப்பாளர்களிடம் நிபந்தனை போடுகிறாராம். புதிது புதிதாக நட்பு தேடுவதில் ஆர்வமாக உள்ளாராம். ஏற்கனவே 'அம்பிக' நடிகையிடம் பெரும் தொகையை பறிகொடுத்து நிற்கிறார். அவரோ வேறு ஒருவரை மணந்து கொண்டு நடிகருக்கு டாட்டா காட்டிவிட்டார்.

'தெலுங்கில் கால்களைக் காட்டியே சம்பாதித்து விடலாம். தமிழில் என்றால் கவர்ச்சி காட்டினால் மட்டும் போதாது. வேறு தேவைகளுக்கும் ஒரே ஊதியத்தோடு ஒத்துழைப்பு கோருகிறார்கள். அதுதான் தமிழில் நடிப்பதை குறைத்துள்ளேன்' என்று கூறியுள்ளாராம் 'ரம்ப' நடிகை.

ஒரு படத்திற்கு முற்பணம் வாங்கினால் அப் படத்தின் தயாரிப்பு நிறுத்தப்பட்டால் முற்பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆனால் 'சிம்ம' நடிகையோ அப்படி திரும்பக் கொடுக்கமாட்டாராம். அப்படியே அமுக்கிக் கொள்ளுவாராம்.



பிரசாந்த்-கௌசல்யா
படம்: ஆசையில் ஓர் கடிதம்




மும்தாஜ்
படம்: மோனிஷா என் மோனலிசா

## 'படையப்பா' திருட்டு வீடியோ இலங்கையில் வெளியானது எப்படி?

'படையப்பா' படத்தின் வி.சி.டி.யும் வீடியோ பிரதிகளும் படம் வெளியாகி நான்கு நாட்களுக்குள் கொழும்புக்கு வந்துவிட்டன. வீடியோ கடைகளில் மட்டுமன்றி, மினி சினிமாக்களிலும் 'படையப்பா' வெளியாகிவிட்டது.

இதற்கிடையே கொழும்பின் சில பகுதிகளில் படையப்பா வீடியோ பிரதி நூறு ரூபா வாடகைக்கு விடப்பட்டது. புத்தளம் போன்ற பகுதிகளில் 175 வரை வாடகை வசூலித்தனர்.

'படையப்பா' திருட்டுத்தனமாக வி.சி.டியில் வெளியாகாது தடுக்க பலத்த முயற்சி நடந்தது.

திருட்டு வீடியோ பிரதிகளை பிடித்து தந்தால் ஒரு பிரதிக்கு 25 ஆயிரம் ரூபாவீதம் ரஜினியின் கைகளால் சன்மானம் தரப்படும் என்று தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்டது.

திருட்டு வீடியோ எடுத்தால் ஒருவருட தடா சிறை என்றும் எச்சரிக்கப்பட்டது.

அதனால்தான் 'மோனிஷா என் மோனலிசா', 'பெரியண்ணா' போன்ற படங்களின் வீடியோ மற்றும் வி.சி.டி.கள் உடன் வெளியாகவில்லை. தாமதமாகின.

அப்படியானால் 'படையப்பா' மட்டும் திருட்டுத்தனமாக வெளியானது எப்படி? என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது.

'படையப்பா' தமிழ்நாட்டில் வெளியான அதே நாளில் வெளிநாடுகளிலும் திரையிடப்பட்டது. வெளிநாடொன்றில் படத்தை வாங்கிய விநியோகஸ்தர் ஒருவர் மூலம்தான் திருட்டு வி.சி.டி. மற்றும் வீடியோ பிரதிகள் வெளியாகின. அதனால் அந்த விநியோகஸ்தருக்கு செமத்தியான இலாபம்.

'மோனிஷா என் மோனலிசா', 'பெரியண்ணா' போன்ற படங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்படவில்லை. இவற்றை தமிழ்நாட்டில் யாராவது திரையரங்கு உரிமையாளருக்கு பணம் கொடுத்தே திருட்டுத்தனமாக பதிவு செய்ய வேண்டியிருக்கும்.

## விஜயகாந்த் உதவி

நடிகர் விஜயகாந்தின் உதவியாளராக இருப்பவர் சுப்பையா. அவரது குடும்பத்துக்கு பணக்கஷ்டம். உதவ நினைத்தார் விஜயகாந்த்.

இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரை அழைத்து "பதினைந்து நாட்கள் நான் நடித்துத் தருகிறேன். படம் பண்ணுங்கள்." என்றாராம். அந்தப் படம்தான் 'பெரியண்ணா'. தற்போது வெளியாகியுள்ளது.

இப்படத்தில் சூர்யாவின் ஜோடி மானஸா. இவர் 'நாளைய தீர்ப்பு' படத்தில் வைஜந்தி என்ற பெயரில் நடித்தவர். இவர் நடிகை ஈஸ்வரிராவின் தங்கை.

## சௌந்தர்யா படம்

ரஜினியோடு சௌந்தர்யா நடிக்க ஆரம்பித்ததுமே, தெலுங்கில் அவர் நடித்த படங்களை மளமளவென்று தமிழில் மொழிமாற்றி விட்டனர்.

அதில் ஒரு படம்தான் 'எங்கவீட்டு மஹாலட்சுமி'. சமீபத்தில் இது வெளியாகி உள்ளது.

'அருணாச்சலம்' படத்தில் ரஜினியோடு நடித்தும் சௌந்தர்யாவுக்கு தமிழில் திருப்பம் ஏற்படவில்லை. படையப்பாவில் நடித்த பின்னர் இப்போதாவது ஏற்படுமா என்று பார்க்கலாம்.

## சல்மான்கான்-ஐஸ்வர்யா ராய் திருமண ஏற்பாடு

இந்திப் பட உலக முன்னணி நாயகர்களில் ஒருவர் சல்மான்கான். கட்டுமஸ்தான ஆண்மகன்.

பல நடிகைகள் இவரைச் சுற்றி வந்தனர். சமீபத்திய நண்பி சோமி அலி. இப்போது அவரும் திகட்டி விட்டதால் உலக அழகியின் பக்கம் தாவியுள்ளார் சல்மான்.

சல்மானின் பிறந்த நாள் விழாவுக்கு ஐஸ்வர்யா ராய் சென்றார். அங்கு கலகலப்பாக பழகினார். சல்மான்கானையும் காந்தமாக கவர்ந்துவிட்டார்.

ஆனால் இதற்கு முன்பே சல்மானும், ஐஸ்வர்யாராயும் ஹங்கேரி நாட்டில் நெருக்கமாக பழகியுள்ளனர் என்கிறது இன்னொரு தகவல்.

'ஹம் தில் தே சுகேஸனம்' என்னும் படத்திற்காக ஹங்கேரி சென்றபோது காதல் மலர்ந்தாகவும், கட்டியணைத்து முத்தம் கொடுக்குமளவுக்கு வளர்ந்ததாகவும் அத் தகவல் கூறுகிறது.

இக் காதல் செய்தி பரவியதால் ஐஸ்வர்யா ராயின் காதலர் நடிகர் பொபி தியோல் அதிர்ச்சியடைந்துள்ளார். ஐஸ்வர்யா ராய் உண்மையாக காதலிப்பது யாரை? என்று மும்பாய் பத்திரிகைகள் கேள்வி தொடுத்துள்ளன.

சல்மான்கான் ஐஸ்வர்யா ராயின் விட்டுக்கு சென்று பெண் கேட்டு விட்டார். ஐஸ்வர்யா தற்போது நடிக்க ஒப்பந்தமாகியுள்ள படங்கள் முடிவடைந்ததும் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று ஐஸ்வர்யா ராய் வீட்டில் கூறப்பட்டுள்ளதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

## காதலுக்கு மரியாதையில்லை

குழந்தையாக நடித்து இப்போது கொஞ்சம் குமரியாக நடித்துவருபவர் ஷாலினி. காதலுக்கு மரியாதை படத்தின் பின்னர் அமோக முன்னேற்றம்.

ஆனால் ஷாலினியின் காதலுக்கு மட்டும் வீட்டில் மரியாதை கிடைக்கவில்லை. மலையாள பட தயாரிப்பாளர் ஒருவரது மகனை ஷாலினி காதலிக்கிறார். இதனால் ஷாலினி வீட்டில் குண்டு வெடிக்காததுதான் பாக்கி. அந்தளவுக்கு தாம் தூம் என்று குதித்துள்ளார் ஷாலினியின் அப்பா.

அழுதபடி வீட்டில் அடைந்து கிடக்கிறார் ஷாலினி.

## சிரஞ்சீவி–ரம்பா

தெலுங்கில் வெற்றி பெற்று தமிழில் மொழிமாற்றப்படும் படம் 'டைகர்'. சிரஞ்சீவி, ரம்பா ஜோடியாக நடிக்க, பிரகாஷ்ராஜ், மோகினி, பொன்னம்பலம், சுதாகர் ஆகியோர் நடித்துள்ளனர்.

தெலுங்குப் படவுலக சூப்பர் இயக்குநர் சத்தியநாராயணா இப்படத்தை இயக்குகிறார்.

சிரஞ்சீவி நாயகனாக நடிக்க பிரகாஷ்ராஜ் வில்லனாக நடித்த படமும் கல்கத்தா என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு [...]றாக ஓடியது. அதனால் சிரஞ்சீவி நடித்த அடுத்த படத்தையும் சடச்சட மொழி மாற்றுகின்றனர்.


படிப்பகம்

## ...ா சந்திப்பு

...ல் வில்லியாக கலக்கும் ரம்யா ...ில் மீண்டும் ஒரு உலா வர

...த்து கமலை சந்திக்க ஆவலாக ...டம் நேரமும் கேட்டிருக்கிறார்.

இது எப்படியோ கமல் வட்டாரங்கள் மூலம் பத்திரிகைகளுக்கு கசிந்தது.

'முன்னணி நாயகர்களை சந்திக்க ரம்யா ஆர்வம்' என்று கிசு கிசு போட்டுவிட்டனர்.

அதனைப் பார்த்த ரம்யா கதிகலங்கி விட்டாராம்.



ரஜினி
படம்: படையப்பா

முகப்பில் கஜோல்

ரஜினி
படம்: படையப்பா

திரையுலக மறுபக்கம் 100

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# வசதி இல்லாது வாழ்வது சிரமம் பிரபல தயாரிப்பாளரின் கவனிப்பு

பிரகாசமான கதாநாயகனாக இன்று மாறிவிட்டாலும், வில்லத்தனமான நடிகர் அவர். மனநோய் உள்ளவர்போல அவர் காட்டும் வில்லத்தனம் பலரையும் கவருகிறது.

அவர் முதலில் தெலுங்கு, கன்னடப் படங்களில்தான் அதிகமாக நடித்து வந்தார். தமிழில் அவ்வளவாக வாய்ப்புக்கள் இல்லை.

அப்போது தமிழில் கவர்ச்சி நடனம் ஆடிய நடிகையுடன் நட்பு ஏற்பட்டது. அமைதிக்கு இன்னொரு பெயர் கொண்ட நடிகை அவர்.

அந்த நடிகைக்கு காத்திரமான நடிகர்கள்மேல் தனி ஈடுபாடு. அவர்களிடம் தானாகவே சென்று நட்பு பாராட்டுவார். தன்வீட்டுக்கே அழைத்துச் சென்று சிறப்பாகக் கவனிப்பார்.

பல நடிகர்கள் அவருடன் நட்பு கொண்டபோதும், ஒரு சிலர்மீதுதான் நடிகை உண்மையான ஆர்வம் காட்டினார். ஏனையோருடன் அவர்களது செல்வாக்குக்காக அனுசரித்துப் போனாரே தவிர ஈடுபாடு காட்டியதில்லை.

குறிப்பிட்ட நடிகருடன் ஈடுபாட்டோடு பழகியதுடன், எந்த நேரம் வேண்டுமானாலும் அவரை அழைத்து சந்தோசமாக இருப்பார்.

அப்போது நடிகருக்கு பெரிய வாய்ப்புக்கள் இல்லாமையால் ஆட்ட நடிகையின் விருப்பங்களை பூர்த்தி செய்து வந்தார்.

ஒரு கட்டத்தில் அந்த நடிகைக்கு வேறு ஒரு பெரிய தொடர்பு கிடைத்தது. அதனால் நடிகரை தன் தங்கைக்கு அறிமுகம் செய்து வைத்து, இருவரையும் ஒன்று சேர்த்து வைத்தார். தங்கையும் அப்போது சிறு வேடங்களில் நடித்து வந்தார்.

தங்கைக்கும் நடிகருக்கும் இடையே நட்பையும் தாண்டி, காதல் மலர்ந்து, கல்யாணத்தில் முடிந்தது. ஆட்ட நடிகையும் வேறு ஒருவரை மணந்து கொண்டார். ஆயினும் சகோதரிக்கு தெரியாமல் இடைக்கிடையே இந்த நடிகரையும் தன் ஆசைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொண்டார்.

இந்த விவகாரம் எப்படியோ ஜாடை மாடையாக தங்கைக்கு தெரிய வந்ததால் பெரும் பூகம்பம் வெடித்தது.

அதனால் நடிகர் சில காலம் தனியாக இருக்க நேர்ந்தது. அப்போதுதான் பூ ஒன்றின் பெயர் கொண்ட நான்கெழுத்து நடிகையின் தொடர்பு கிடைத்தது.

படம் ஒன்றில் நடித்தபோதே இருவருக்கும் இடையே தொடர்பு மலர்ந்தது.

கதாநாயகியாக சில படங்களில் நடித்துவிட்டு, தற்போது துணைப் பாத்திரங்களில் தோன்றி வருபவர் அந்த நான்கெழுத்து நடிகை.

வாய்ப்பு அதிகம் இல்லாமல் வருமானத்துக்கு சிரமப்பட்டார். நடிகையான பின்னர் பஸ்ஸில் செல்ல முடியாது. நடந்து போக முடியாது. கூட்டம் மொய்த்துவிடும்.

சிறிய வீட்டில் குடியிருக்க முடியாது. எளிமையாக வாழ்வதும் சிரமம். எனவே வருமானம் தேவை.

அதனால் பட வாய்ப்புக்கள் இல்லையானால், பிரபல புள்ளிகளுக்கு வலை வீசுவது தவிர வேறு நாதியில்லை.

அந்த நடிகையும் சென்னையின் பிரபலமான நட்சத்திர விடுதி ஒன்றில் பிரபல புள்ளிகளுக்கு இரவு விருந்து கொடுத்து சம்பாதிக்கத் தொடங்கினார்.

அந்த நேரத்தில் நடிகரின் நட்பு தேடிவந்ததால், தொழிலை கைவிட்டு நடிகரின் கவனிப்பில் இருந்து வருகிறார்.

இதனை அறிந்த மனைவி நடிகருடன் சமரசம் செய்து கொண்டார். இப்போது மனைவி வீட்டில் நடிகர் தங்கியிருந்தாலும், இடைக்கிடையே நான்கெழுத்து நடிகையையும் சந்திக்கத் தவறுவதில்லை.

மனைவிக்கு இதனைத் தடுக்கும்வழி தெரியவில்லை. தன்னை தூக்கியெறியாதிருந்தால் அதுவே போதும் என்று தற்போது பேசாதிருக்கிறார்.

### தொழிலதிபர்

மந்திரத்தோடு சம்பந்தப்பட்ட பெயர் கொண்ட அந்த நடிகைக்கு பிரபல தொழிலதிபர் ஒருவர் அபயம் கொடுத்துள்ளார்.

சகோதரர்களான தொழிலதிபர்களில் ஒருவர்தான் அவர். தமிழ்ப்படங்களை மட்டுமல்ல, ஹொலிவுட் படங்களையும் அந்த சகோதரர்கள் தயாரித்துள்ளனர். ஹொலிவுட் நடிகைகளைவிட தமிழ்ப்பட நடிகைகளிடம்தான் அவர்களுக்கு தனி ஈர்ப்பு. மனதுக்கு பிடித்த நடிகைகளை மறு நிமிடமே தம் மாளிகைக்கு அழைக்குமளவுக்கு செல்வாக்குள்ளவர்கள்.

பதினாறு வயது நாயகியும் அவர்கள் மாளிகையில் தங்கியது பழைய கதை. அவர்களது பார்வை எப்படியோ மந்திர மான நடிகை மீது தாவியிருக்கிறது.

அவர்களது மாளிகையில் ஒரு வாரம்வரை தங்கியிருந்து விட்டு திரும்பியுள்ளார் நடிகை.



வெங்கடேஷ்-ரம்பா
படம்: கணேஷ்

## ...ம்புயல் பிரசாந்த்

...ணனின் சீடரான செல்வபாரதி இயக்கும் 'ஹலோ' ...வக்கவிழா நடைபெற்றுவிட்டது.

...ந்த் கதாநாயகனாக நடிப்பதால், அவரது பிறந்த நாளான ...றாம் திகதி பூஜை போடப்பட்டது.

...ச்சுவை கலந்த இந்தச் காதல் கதையில் கதாநாயகி ...ம். அவரது பெயர் ப்ரீத்தி. மணிவண்ணன், தாமு, சார்லி, ...ஜெயந்த் ஆகியோர் நடிக்கின்றனர்.

...ய்க்கு இளைய தளபதி என்று பட்டம். பிரசாந்த்துக்கும் ...போட்டியாக பட்டம் சூட்டியுள்ளனர். இளம்புயல்!

## ...றுவது சினம்

...ாஜ்-பிரபு நடிக்க 'மக்கள் நண்பன்' படத்தை இயக்கவிருந்தார் ...ன். பிரபு மறுத்துவிட்டதால் பிரகாஷ்ராஜ் நடிக்க ... இப்போது திடீரென்று 'ஆறுவது சினம்' என்ற பெயரில் ...ற இயக்கப் போகிறார். இப்படத்திலும் மணிவண்ணனது ...ர் சத்யராஜ்தான் கதாநாயகன். இன்னொரு நாயகன் ...சை: தேவா. நடனம்: ராஜுசுந்தரம். சண்டைப்பயிற்சி, கனல் ... கதாநாயகி விந்தியா. விஜயகுமார், வடிவேலு, விவேக் ... நடிக்கின்றனர்.

... அப்பாஸ் இருவரும் 'மலபார் பொலிஸ்' படத்திலும் ...டிக்கின்றனர். இப்படத்தில் குஷ்பு, சத்யராஜ் ஜோடி சேரு...பாஸ் ஜோடியாக மும்பாய் புதுமுகம் ஒருவர் நடிக்கிறார்.



சசிகுமார்-சௌந்தர்யா
படம்: எங்க வீட்டு மஹாலட்சுமி

## தழுவல் படங்கள்

வெற்றிகரமாக ஓடும் படங்களை தழுவி கதை பண்ணுவது சினிமாவில் புதிய விஷயமல்ல.

இந்தியில் வெற்றிகரமாக ஓடிய படம், 'தில்வாலே துளியா லேஜாயேங்கே'. அப்படத்தை தழுவி சுந்தர்.சி. இயக்கிய படம் 'உன்னைத் தேடி'. 'நேசிக்கிறேன்', 'என்றென்றும் காதல்' போன்ற படங்களும் அப்படத்தின் தழுவல்தான். அது போதாது என்று தற்போது வஸந்த் இயக்கும் 'பூவெல்லாம் கேட்டுப்பார்' படக் கதையும் அப் படத்தின் தழுவல்தானாம்.

## கிசு கிசு

* 'படையப்பா' படத்தின் தெலுங்கு மொழிமாற்றான 'நரசிம்மா' படத்திற்கு ரஜினிக்குப் பின்னணி பேசியிருப்பவர் பாடகர் மனோ.
* சக்தி ரீ.வி. ஒளிபரப்பான 'ஜன்னல்' தொலைக்காட்சித் தொடரில் அம்புலி வேடத்தில் நடித்த டாக்டர் ஷர்மிளா, 'ஸ்டாலின்' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார்.
* பிரசாந்த் ஜோடியாக 'ஹலோ' என்ற படத்தில் அறிமுகமாகும் ப்ரீத்தி, 'மழவில்லு' என்ற மலையாளப்படத்தில் வினீத்துடனும், 'பிரதர்' என்ற தெலுங்குப் படத்தில் கல்யாணுடனும் நடித்துள்ளார்.
* நெப்போலியன்-விக்னேஷ் இணைந்து நடிக்கும் 'சாமி கொடுத்த வரம்' படத்தின் பெயரை 'தாலாட்ட நான் பொறந்தேன்' என்று மாற்றி விட்டார்கள்.
* தமிழில் பல படங்களில் நடித்துவரும் ப்ரீதா விஜயகுமாருக்கு மலையாளப்படத்தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. படத்தின் பெயர் 'ரெட் இண்டியன்'.
* 'விண்ணோடும் முகிலோடும்' படத்தை இயக்கி அதில் முக்கிய வேடமொன்றில் நடிப்பதாக இருந்த சேரன், தற்போது அந்த வேடத்தில் நடிக்கவில்லை.
* பிரகாஷ்ராஜ்-செண்பகா நடித்த 'ஆனந்த கிருஷ்ணா' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர் 'ஸ்மைல் ப்ளீஸ்.' இப்போது 'ஸ்மைல் ப்ளீஸ்' என்ற பெயரில் பாண்டியராஜன் நடிக்கும் படமொன்று தயாராகிறது.
* பிரபு-தேவயாணி நடித்து விரைவில் வெளியாகவுள்ள 'கும்மிப்பாட்டு' படத்தை இயக்கிய கஸ்தூரி ராஜா அடுத்து இயக்கும் படத்திற்கு 'ஈரக்காத்து' என்று பெயர் சூட்டியுள்ளார்.
* பிரகாஷ்ராஜ்-குஷ்பு நடிக்கும் 'மாசில்லா உண்மைக்காதலே' படத்தை இயக்கும் புதிய இயக்குநர் நந்தா, பிரபல தெலுங்கு இயக்குநரான கோடி.ராமகிருஷ்ணாவிடம் உதவியாளராக இருந்தவர்.
* 'சின்னத்தாயி', 'மாமியார் வீடு' படங்களை இயக்கிய கணேஷ்ராஜ் தற்போது இயக்கும் 'பரணி' படம் மூலம் தமிழில் கதாநாயகனாக அறிமுகமாகிறார் ஷாலினியின் சகோதரர் ராகுல்.

## ஏழையின் வானத்தில் எத்தனை சிதைவுகள்

மேலே தெரிந்த ஒரே ஒரு
நட்சத்திரமும் மறைந்துபோனது
நான்கு திசைகளிலும் இருள்.
**
வானத்தின் ஓரம் ஒளிவட்டம்
போட்ட வானவில்லின் வர்ணங்களிலும்
பூமியை நோக்கிய வறுமையின் சாயங்கள்.
**
வெறுமைகளால் தூரம்போகும்
நிகழ்காலத்து தெறிப்புக்களில்
விடிவினை ஆகர்சிக்கும்
ஏழையின் மனதாய் நடைபாதை
எங்கும் காகிதத்தோணிகள்.
**
எங்கே போய்க்கொண்டிருக்கும்
பாதப் பயணமிது பாதங்களும்
சிவந்துபோகும் எண்ணத் துடிப்புக்களை
ஏணி வைத்து அளக்கும் வாழ்வின்
மனநெரிசல்கள்.

இருக்க இடமின்றி ஓர் ஓரத்தில்
நின்று கொண்டு உண்மையினைச்
சொன்னாலும் நீண்ட வாழ்வின்
அர்த்தத்தைக்கூட இங்கே
புரிந்துகொள்ள முடியவில்லை.
**
சந்தோஷ அரும்புகளால் முழம்
போட்டுக் காட்டுகின்ற
வாடை காலத்து குளிர்மையால்
வாழ்வினில் ஒளித்தீபம்
ஒளி தர வேண்டுகிறேன்.
**
என்னதான் தெரிந்தாலும் என்னிடம்
இருக்கும் விளக்குகளை விடவும்
தூக்கி எறிந்த விறகுகளிடமிருந்துதான்
வாழ்க்கைக்கு இங்கே வெளிச்சம்
கிடைக்கிறது.
**
தள்ளாட்டம் போடுகின்ற
மரக்குதிரையின் மேல்
பிரபஞ்ச வாழ்வு கழிந்துபோகிறது.
**
அதுபோலவே காவோலை விழுவதும்
குருத்தோலை எழுவதும்
சோகமுடிவில் சந்தோஷம் காட்டும்
இயற்கையின் வரம்பில்
நியதிச் சுவடுகள்.
**
அந்த பாதைகளின் மீது
கருங்கொண்டல் வீசினாலும்
ஏழைகளின் மனங்களில்
வறுமைக் கம்பளிகள்தான் இன்னும்
காய்ந்து கொண்டிருக்கிறது.
**
மனிதா! அருணோதயத்து
அழகினைப்போல் ஒரு மெத்தென்ற
இளங்குளிரில் ஏழைகளின்
தேர்வுகளைக் கலந்து புது
விடிவினைத்தர வேண்டுகிறேன்.
**
வெறுங்கையாய் இருப்பவர்கள்
சாமத்தில் அழும்போது ஒரு
செம்புத் தண்ணீரைத் தருகின்ற
மானிடத்தை இங்கே உருவாக்கு!
**

உவைஸ்கனி- பாணந்துறை.

# தேன் கிண்ணம்

## இறப்பது சுலபம்!

'என்னை மறந்துவிடு'
என்று மட்டும் சொல்லாதே
மடிந்து விடு
என்று சொல்!
**
'என்னை இழந்து விடு'
என்று மட்டும் சொல்லாதே
இறந்து விடு
என்று சொல்!
**
'என்னைப் பிரிந்துவிடு'
என்று மட்டும் சொல்லாதே
உயிர் பிரிந்து விடு
என்று சொல்!
**
'என நினைவை அழித்துவிடு'
என்று மட்டும் சொல்லாதே
அழிந்து விடு
என்று சொல்!
**
மறப்பது உனக்குச் சுலபம்
அதைவிட- எனக்கு
இறப்பது சுலபம்.
**
இறந்தாலும் இறக்காமல்
உறங்கிக் கிடக்கும்
உன் ஞாபகங்களோடு...

உதயா பசுபதி, மல்லாவி.

# அந்தநாள் ஞாபகம்



1960ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட புரட்சிகரப் படம் இது. கியூபாப் புரட்சி வெற்றியின் பின்னர் பிடல் காஸ்ட்ரோ, சேகுவேரா ஆகியோர் தம் தோழர்களோடு செல்லும் காட்சி. கியூபா புரட்சி நடந்து 40 வருடங்களாகிவிட்டன.

அமெரிக்காவின் மிரட்டல்கள், பொருளாதார தடைகள் மத்தியிலும் 40 வருடங்கள் நிமிர்ந்து நிற்கிறது கியூபா. அதன் தலைமையின் உறுதியும், தீர்க்கமான வழி நடத்தலுமே காரணம்.

காஸ்ட்ரோவை கொலைகாரர், சர்வாதிகாரி என்று அமெரிக்க சார்பு பிரசாரகர்கள் வர்ணிக்கிறார்கள். அந்த பொய்ப் பிரசாரங்கள் எடுபடுவதில்லை.

# இந்தவாரம் உங்கள் பலன்

**25.04.99 முதல் 01.05.99வரை**

ஜோதிடர் 'கர்ணா'

**மேடம்:**
சனி ஜென்ம நீசமாகவும் வியாழன் மறைவு ஆட்சியாகவும் உள்ளதால் எடுத்த கருமங்கள் தாமதமாகும். தொழில், கல்வி சீராக அமையும். வார நடுப்பகுதியில் எதிர்பார்த்த ஒரிரு விடயங்கள் நிறைவுறும். எதிர்ப்புக்கள், தொல்லைகள் உருவாகப்பார்க்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை: எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 28, 30.

**இடபம்:**
பொதுவாக கிரக நிலைகள், சிறப்பாக உள்ளதால் எடுத்த கருமங்கள் வெற்றியைக் கொடுக்கும். உறவினர்களது உதவியுடன் மன மகிழ்ச்சியும் ஏற்படும். குடும்ப உறவு, தொழில் என்பன சீர் சிறப்பாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்: எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 29, 25.

**மிதுனம்:**
சனியும் வியாழனும் 11ம் 10ம் வீடுகளில் உள்ளதாலும் புதன் ஜென்மவீட்டில் ஆட்சிபலம் பெறுவதாலும் சுபகருமங்கள் கைகூடும். பணவருவாய் காணப்படும் தூர இடத்துப் பிரயாணங்கள், நற்செய்திகள் கிட்டும். புனர்பூச நட்சத்திரகாருக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்: எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 28, 01.

**கடகம்:**
10ம் இடத்து அர்த்தஷ்டம சனியாக உள்ளதால் எடுத்த விடயங்கள் முயற்சிகள் தடைதாமதங்களுடன் நிறைவேறும். குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள் குறையும். கல்வி, தொழில் சீர்சிறப்படையும். உடல் நலம் பேணவும்
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 28, 30.

**சிம்மம்:**
அட்டமஸ்தானத்தில் வியாழன் ஆட்சிபலம் பெறுவதுவும் சுக்கிரன் 10ல் உள்ளதும் மகிழ்ச்சிகரமான விடயங்கள் ஈடேறும். புதிய சூழ்நிலையில் வாழ்க்கை தொடரப்பெறும். குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள் மெல்லக்குறையும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்: எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 28, 01.

**கன்னி:**
சனி, 8லும் வியாழன் 7ல் பலம் பெறுவதும் குடும்பத்தில் பிரச்சனைகள் தோன்றினாலும் வளம் பெறும். தடைப்பட்ட திருமணப் பேச்சுக்கள் தொடரும் குடும்பத்தில் பண வருவாய் அமையும். நோய்துன்பங்கள் வந்தாலும் தீர்ந்துவிடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை: எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

**துலாம்:**
அசதியான காணப்படும் நிலை மனதில் பயம் ஏற்பட்டபடி இருக்கும். எண்ணிய கருமங்கள் வார இறுதியில் சிறப்பாக அமையும். குடும்பத்தில், சகோதரங்களின் உதவி கிடைக்கும். சுவாதி நட்சத்திரருக்கு சுபகால நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : றோஸ் வர்ணம்: எண் : 3
அதிஷ்ட திகதிகள் : 27, 30.

**விருட்சிகம்:**
குடும்ப முன்னேற்றம், தொழில், பண வருவாய் நன்றாகக் காணப்படும். உறவினர்கள் நண்பர்களது வரவுக்கிடமுண்டு. சிறு நோய் துன்பங்கள் தொடரப்பார்க்கும். தூரப்பிரயாணங்கள் ஏற்படலாம்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : பிங்க்வர்ணம்; எண்: 7
அதிஷ்ட திகதிகள் : 25, 29.

**தனுசு:**
நோய் துன்பங்கள் வரப்பார்க்கும். 5ம் இடத்தில் சனி, நடுக்க் சனியாக உள்ளதால் சிற்சில பலன்கள் குறைவு பெறும். கல்வி தொடரப்பெறும். எடுத்த காரியங்கள் நிறைவுபெறும். நண்பர்கள் உதவி, பணவருவாயுண்டு. காதல் உறவு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல் நிறம்; எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 27, 01.

**மகரம்:**
சிறப்பான வாரம். தொழில், பணவருவாய் நன்றாக இருக்கும். மனதில் அவ்வப்போது யோசனைகள் தோன்றும். புதிய தொழில் வாய்ப்புக்கள், இடமாற்றம் அல்லது பிரயாணம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா: எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 01, 27.

**கும்பம்:**
சனி 3லும் வியாழன் 2லும் உள்ளதால் எடுத்த கருமங்கள், வழக்கு விடயங்கள் வெற்றி பெறும். தொழில், கல்வி நன்றாக அமையும். குடும்பத்தில் சுபவைபவங்கள் நடைபெறும், பணவருவாய் ஏற்படும். புதிய பொருட்கள் வந்து சேரக்கூடிய வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: மண்ணிறம்; எண் : 6
அதிஷ்ட திகதிகள்: 28, 30.

**மீனம்:**
சுக்கிரன் 3ல் உள்ளதால் குடும்ப அதிகாரம் சிறப்புடன் இருக்கும். கல்வி முன்னேற்றம் காணும். நண்பர்களின் வரவு அதிகமாக இருக்கும். எடுத்த திட்டங்கள் நிறைவுபெறும். உத்திரட்டாதி நட்சத்திரகாரருக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநிறங்கள்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள் : 28, 01.



## யார் இவர்?

இவர் ஒரு பிரபல கதாநாயக நடிகர். இளமையின் இரகசியத்தை இவரிடம்தான் படிக்க வேண்டும். இங்கு முதியவராக ஒப்பனை செய்திருக்கிறார்.

யார் இந்த நடிகர் என்று தெரிகிறதா? இவரது மகனும் இன்று கதாநாயகனாக நடித்து வருகிறார். விடை உதவி 18ம் பக்கம்.

# நில்-கவனி-முன்னேறு

**எழாதே!**

இருக்கும்போதே இல்லாததற்குப் பழகிக் கொள்வது மேல்.

சேர்ந்தாற்போல் நாலு மணி நேரம் கரெண்ட் இல்லையென்றால் இரவில் தவித்துப் போய்விடுகிறார்கள். மின் விசிறி, ஏ.ஸி. ஆகியவற்றுக்குப் பழக்கப்பட்டவர்கள் காரை எடுத்துக் கொண்டு ஓட்டல் அறைகளுக்கே குடும்பத்துடன் போய் விடுகிறார்கள்.

தினமும் கொஞ்ச நேரம் இல்லாமலிருக்கப் பயிற்சி எடுத்துக் கொள்வது அவசியம்.

**பேசாதே!**

உங்களிடம் பணம் இருக்கலாம். ஆனால் பணமில்லாதவராக, சட்டைப்பையில் இரண்டு ரூபாய்கூட இல்லாமல் ஒரு மணி நேரம் வெளியே உலாவி விட்டு வாருங்கள்.

பழக்கம் காரணமாக குளிர்பான கடையைக் கடக்கும் போது அருந்தத் தோன்றும். 'ஓ... பையில் காசு போட்டு வரவில்லையே' என்ற நினைப்புவந்தவுடன் ஆசை கட்டுபட்டுவிடும்.

நீங்கள் வசதி உடையவர்தான். ஆனால் வசதியற்றவராக இருக்கப் பழகுங்கள். அப்படிப் பழகிவிட்டால் இடர்ப்பாடுகள் சம்பவிக்கும் போது அதிக வருத்தம் ஏற்படாமலிருக்கும்.



இந்த உலகத்திலிருந்து கொண்டே உங்களை இல்லாதவர் மாதிரி ஆக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

**அசையாதே!**

ஒரு சின்னப் பயிற்சி.

நீங்கள் காலை நீட்டிச் சவம் போல் கண்ணை மூடிப் படுத்துவிடுங்கள். இப்போது நீங்கள் இறந்து விட்டீர்கள். (அப்படி நினைத்துக் கொள்ளுங்கள்)

எக்காரணத்தை முன்னிட்டும் எழக் கூடாது. பேசக் கூடாது. அசையக் கூடாது. காதில் சத்தங்கள் விழட்டும். அதை ஒட்டி சிந்தனை செல்லாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.

**எண்ணாதே!**

நீங்கள் இல்லாமலேயே குடும்பம் நடந்து கொண்டிருப்பதை ரசியுங்கள். டெலிபோன் அடிக்கிறது. சட்டென்று எழுந்து எடுக்கத் தோன்றுகிறது. அடக்கிக் கொளுங்கள். நீங்கள்தான் உயிரோடு இல்லையே. எப்படி எழ முடியும்? தினமும் அரை மணி நேரமாவது இந்த 'இருக்கும் போதே இல்லாதிருக்கும்' பயிற்சி பழகி வந்தால் உங்கள் கோபதாபம், ஏக்கங்கள், கெட்ட குணங்கள் அனைத்தும் நீங்கி விடும். ஒரு நாற்பது நாள் முயன்று பாருங்கள்.

பிரகஸ்பதி

# ஹலோ டாக்டர்

**கேள்வி: வயிற்றில் காயம் ஏற்படுவதால் அல்லது சிறுகுடல் பின்பகுதி நோய் ஏற்பட வாய்ப்பு உண்டா?**



**பதில்:** ஆம். இப்படி காயம் ஏற்படும்போது வயிற்றில் உள்ள குழிப்பகுதியில் இரத்தப் பெருக்கு ஏற்படும். ஈரல் கிழிந்தால் இந்த நிலை ஏற்படும். அப்போது சிறுகுடலில் பின்பகுதியும் சேதம் அடையும்.

**கேள்வி: மார்பின் ஒலியைக் கேட்பதற்காகத்தான் ஸ்டெதஸ்கோப்பை பயன்படுத்துவதாகப் பலர் நினைப்பர். ஆனால் சிலரது வயிற்றில் பிரச்சனை வந்தால் மருத்துவர்கள் வயிற்றிலும் ஸ்டெதஸ்கோப்பை வைத்துக் கேட்பார்கள். ஏன் எப்படி?**

**பதில்:** அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் குடல் ஒழுங்காக வேலை செய்கிறதா என்பதைக் கேட்க மருத்துவர்கள் அவ்வாறு செய்கின்றனர். அது வேலை செய்யாவிட்டால் சிறு குடல் பின்பகுதி நோய் உள்ளது என்று அர்த்தம். வயிற்றில் அறுவைச சிகிச்சை செய்த பின்னர் வழக்கமாக மருத்துவர்கள் இவ்வாறு செய்வார்கள். இதன்மூலம் நோயாளிகள் என்ன சாப்பிடலாம் என்பதை மருத்துவர்கள் முடிவு செய்வார்கள்.

www.padippakam.com

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## துணிகளின் பராமரிப்பு

துணிகளைப் பாதுகாத்துப் பராமரிப்பது எப்படி?

* துணிகளைத் துவைத்துக் காயப் போட்டு அவைகள் நன்றாகக் காய்ந்த பின்புதான் மடித்து அலமாரியில் வைக்க வேண்டும். துணிகளை வைக்கும் அலமாரியிலும் தண்ணீர்த் தன்மை இருக்கக்கூடாது.

* அலமாரியில் நப்தலின் உருண்டைகளைப் போட்டுவைத்தால் ஈரத்தன்மை இருக்காது. பூச்சித் தொல்லையும் தோன்றாது.

* துணிகளை அடுக்கி வைத்திருக்கும் அலமாரிக்கும் காற்று தேவை. அதனால் அவ்வப்போது திறந்து பூட்ட வேண்டும்.

* பிளாஸ்டிக் கவர்களுக்குள் துணிகளைப் பொதிந்து வைத்துப் பாதுகாக்கக் கூடாது.

* துணிகளை அலமாரியில் வைக்கும் போது கோணல்மாணலாகப் போடாமல் நன்றாக அடுக்கி வைக்க வேண்டும். துணிமணிகளை நெருக்கமான விதத்தில் இறுக்கமாக வைக்காமல் இடம்விட்டு வையுங்கள்.

* கஞ்சி போட்ட புடவைகளை அதிக காலம் அலமாரியில் வைக்க வேண்டாம். புடவைகளை கட்டும்போது மட்டும் கஞ்சி போட வேண்டும்.

* வியர்வை பட்ட புடவைகளை அலமாரியில் வைக்க வேண்டாம். பூச்சித்தொல்லை



ஏற்பட அது காரணமாகும்.

* பட்டுப் புடவைகளில் எண்ணெய் பட்டால், அந்த இடத்தில் மட்டும் சிறு பருப்புத்தூளை தேய்த்துக் கழுவினால் போய்விடும்.

* துணிகளில் கோப்பி மற்றும் தேனீர் கறை பட்டால் உடனே சூடு இல்லாத தண்ணீரில் நனைத்து சவர்க்காரம் போட்டால் கறை போய்விடும்.

## எப்படி, எப்படி கடிதம் எழுதுவது எப்படி?

கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய உண்டு.

✉ யாரிடமாவது கோவமாக இருக்கும் போது கடிதம் எழுத வேண்டாம். மனது சாந்தமாக இருக்கும்போது கடிதம் எழுதுங்கள். இல்லாவிட்டால் உங்கள் கோபம் கடிதத்திலும் வெளிப்படும். அதனால் பல்வேறு பிரச்சனைகள் உருவாகி விடும்.



✉ குறிப்பிட வேண்டிய விஷயங்கள் யாருக்கு எழுதப் படுகிறேதா அவருக்குத் தெள்ளத் தெளிவாகப் புரிய வேண்டும்.

✉ இரகசியமான விஷயங்களை அஞ்சலட்டையில் எழுதி அனுப்பக்கூடாது.

✉ யாருக்கும் மொட்டைக் கடிதம் எழுத வேண்டாம். உங்கள் கடிதத்தால் பலர் பாதிக்கப்படுவதுபோல நீங்களும் ஒருநாள் பாதிக்கப்படுவீர்கள்.

✉ கடிதத்தை ஒட்டுவதற்கு முன்னால் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்துக் கொள்ளவும். கடிதம் ஒரு முக்கியமான ஆதாரம் ஆகும். அதனை நினைவில் வைத்துக்கொண்டே கடிதம் எழுத வேண்டும்.

✉ பெறுநர் விலாசம் தெள்ளத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

✉ விலாசத்துக்குரியவர் இல்லாதபட்சத்தில், கடிதம் திரும்பி வரும் அளவுக்குத் தெளிவாக அனுப்புனர் விலாசத்தைக் குறிப்பிடவும்.

✉ கடிதத்தை தபாலில் சேர்ப்பதற்கு முன்னால் தேவையான முத்திரை ஒட்டப்பட்டிருப்பதை உறுதி செய்யுங்கள்.

✉ கடிதங்களை தபால் பெட்டியில் சேர்ப்பதற்கு மற்றவர்களைப் பயன்படுத்துவதைவிட தானே கொண்டுபோய் சேர்த்து விட வேண்டும். ✉

## சரும அழகு

பெண்களின் சருமத்திற்கு அதிகமான அளவு தொல்லை கொடுப்பது கோடைகாலம்.

இதற்குக் காரணம் பெண்களின் மென்மையான சருமத்தை கோடைகாலச் சூரியன் சுட்டு எரிக்கிறது. இதனால் சருமம் கன்றிப் போய் விடுகிறது.

இந்தத் தொல்லைகளில் இருந்து விடுபடுவது எப்படி?

நிவாரணம் தேடுவதற்கு முன்னால் முகம், கை,கால்,இடை பகுதிகளில் வெய்யில் படாமல் பாதுகாப்பது நல்லது. அப்படியே வெய்யிலில் இறங்கி நடக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், முகம், கைப் பகுதிகளில் சூரிய ஒளியால் பாதிப்பு ஏற்படுவதை தடுக்கும் கிறீம்களை தடவிக் கொள்ளலாம். இவை மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

கோடைகாலத்தில் அநேகமானவர்களுக்கு வியர்க்குரு தோன்றும். கழுத்தின் முன்பக்கம், அக்குள், தொடை, இடுப்பு, முதுகு, மார்புகளின் அடிப்பாகத்தில் அதிக வியர்வை தோன்றும். இந்தப் பகுதிகளிலேயே வியர்க்குரு அதிகம் தோன்றும்.

கோடை காலத்தில் சருமத்தைப் பராமரிக்க எளிய வழிகள்:

* சுத்தமான காற்று பரவும் இடங்களில் அதிகமான நேரத்தைச் செலவிட வேண்டும்.

* தினமும் 6 முதல் 8 மணிநேரம் நன்றாகத் தூங்க வேண்டும்.

* உடலையும் கூந்தலையும் சுத்தமாக வைத்திருங்கள்.

* உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பானங்களைப் பருக வேண்டாம்.

* எதற்கெடுத்தாலும் உடனே மருந்துகளைத் தேட வேண்டாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FP

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 01-05-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 84

புவனா

டோடி ஃபாயட் தன்னை ஏமாற்றிவிட்டதாக கெல்லி ஃபிஷர் பேட்டி கொடுத்ததைப் படித்தார் டயானா.

கெல்லிமீது அனுதாபப்பட்டு, தன் சிநேகிதி ஒருத்தியை அவரிடம் அனுப்பினார்.

டயானாவிடமிருந்து வந்திருக்கிறார் என்று தெரிந்ததுமே கெல்லி ஃபிஷர் பேரம் பேச ஆரம்பித்து விட்டார்.

"டயானாவுக்கு டோடியை நான் விட்டுத் தர வேண்டுமானால், நான் கேட்கும் தொகையை அவர் எனக்குத் தரவேண்டும்!" என்றுவிட்டார் கெல்லி ஃபிஷர்.

டயானாவின் சிநேகிதியோ ஆளைவிட்டால் போதும் என்று வந்த வழியே திரும்பி விட்டார்.


ஆனால் கெல்லி ஃபிஷர் டயானாவை சந்திக்க அனுமதி கேட்டு தொல்லை கொடுக்க ஆரம்பித்தார்.

அனுதாபம் காட்டப்போய் வம்பில் முடிந்து விட்டதே என்று எண்ணிய டயானா, கெல்லியை சந்திக்க மறுத்துவிட்டார்.

அதனால் டயானா, டோடி ஆகியோரது காதல் பற்றி கெல்லி புலம்பித்திரிந்தார்.

"எனக்குச் செய்த துரோகம் உங்களை நிம்மதியாக வாழவிடாது!" என்று டோடிக்கு கடிதம் எழுதினார் கெல்லி.

கெல்லியின் புலம்பலையோ, சாபங்களையோ டோடி பெரிதுபடுத்தவில்லை.



### ஃபிரான்ஸ் பயணம்

டோடியை திருமணம் செய்வதில் டயானாவின் உறுதி நாளுக்கு நாள் வளர்ந்தது.

டயானா அதுவரை பழகிய ஆண்களில் டோடி வித்தியாசமானவராக இருந்தார்.

தன்னிடம் எதனையும் மறைக்காது டோடி பேசியதும் டயானாவின் மனதைக் கவர்ந்திருந்தது.

"டோடி பெண்கள் பின்னால் சுற்றியவர். உன்னையும் உபயோகித்து விட்டு உதறிவிடுவார். அதனால் அவரை நம்பாதே!" என்று டயானாவின் சிநேகிதிகள் சிலர் கூறினார்கள்.

## டோடியுடன் பத்து நாட்கள்

"நான் இதுவரை சிலரை நம்பி மோசமாக ஏமாந்திருக்கிறேன். அத்தகைய அனுபவம் டோடியிடம் எனக்கு ஏற்படமாட்டாது என்று நம்புகிறேன்!" என்று பதிலளித்தார் டயானா.

டோடிமீது டயானாவுக்குள்ள நம்பிக்கையைப் பார்த்து பிரமித்த சிநேகிதிகள் அதன்பின்னர் டோடியைப் பற்றி அவரிடம் விமர்சனம் செய்வதைத் தவிர்த்தனர்.

டோடியுடன் தனது திருமணம் நடைபெற முன்பாக, தனது புதல்வர்கள் இருவரையும் அவருடன் நெருங்கிப் பழக வைக்க விரும்பினார் டயானா.

அது பற்றி டோடியிடமும் கூறினார். அவரும் சம்மதித்தார். அதற்கான ஏற்பாட்டையும் டோடியே செய்தார்.

ஃபிரான்ஸ் நாட்டின் தென் கிழக்கில்- இத்தாலி நாட்டின் மேற்கு எல்லையைத் தொட்டு நிற்கிறது டௌஃபயின் மாகாணம். அங்கு கடற்கரை ஓரமாக சென் ட்ரொப்பெஸ் என்னும் குடா அமைந்துள்ளது. சன சந்தடியற்ற சிறு கிராமம் போல இருக்கும். இங்குதான் டோடி குடும்பத்துக்கு சொந்தமான உல்லாச மாளிகை இருந்தது.



பொஸ்னியாவில் கண்ணிவெடியால் மகனை இழந்த தாய்க்கு ஆறுதல்

1997 ஜூலை மாதத்தில் இங்குதான் டயானா தன் பிள்ளைகள் இருவருடனும் வந்து சேர்ந்தார். டோடி அவர்களை வரவேற்றார்.

பத்து நாட்கள் அந்த மாளிகையில் தங்கியிருந்தனர். அந்த பத்து நாட்களுக்குள் வில்லியமும், ஹரியும் டோடியுடன் சரளமாகப் பழகத் தொடங்கிவிட்டனர்.

பத்து நாட்களுக்குப் பின்னர் டயானா தன் பிள்ளைகளுடன் இலண்டன் திரும்பினார்.

### சந்தோசம்

டோடியுடன் தன் பிள்ளைகள் நெருக்கமாகப் பழகியது டயானாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

டோடியுடன் குடும்பம் நடத்துவதற்கு முன்னர், அதற்கான ஒத்திகை பார்ப்பது போன்றே அந்த பத்து நாட்களும் கழிந்திருந்தன.

டயானா முன் எப்போதுமே இல்லாதளவுக்கு சந்தோசத்தில் மிதந்தார். "டயானா இவ்வாறு சந்தோசப்பட்டு நாங்கள் கண்டதில்லை" என்று அவரது சிநேகிதிகளே அதிசயித்தனர்.

சிநேகிதிகளுக்கும் நிறையப் பரிசுப் பொருட்களை வழங்கினார். தன் துன்பங்கள் யாவும் தூர விலகிவிட்டன என்பது போலவே டயானா பூரித்திருந்தார்.

### ஆகஸ்ட் 07

ஆகஸ்ட் 7ம் திகதி இலண்டன் பூங்கா வீதியில் டோடியின் இல்லத்தில் இரவு உணவில் கலந்து கொண்டார்.

மறுநாள் டயானா பொஸ்னியாவுக்கு புறப்பட வேண்டி இருந்தது.

கண்ணிவெடிகளுக்கு எதிரான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள டயானாவை அழைத்திருந்தனர்.

"இதுதான் நான் கலந்துகொள்ளும் இறுதியான பொது நிகழ்ச்சி என்று நினைக்கிறேன். எங்கள் திருமணத்தின் பின்னர் சந்தடிகளில் இருந்து ஒதுங்கி வாழவே விரும்புகிறேன்!" என்று டயானா தன் சிநேதிகளிடமும், டோடியிடமும் கூறியிருந்தார்.

தன் வாழ்க்கையின் இறுதியான பொது நிகழ்ச்சி என்று டயானா நினைத்தது- பின்னர் ஒரு வகையில் பலிக்கத்தான் செய்தது. ஆனால் தான் எதிர்பாராத சோக முடிவாக அது அமையும் என்று டயானாவுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

### பாராட்டு

பொஸ்னியாவில் கண்ணிவெடிகளுக்கு எதிரான நிகழ்வுகளில் டயானா கலந்துகொண்டார்.

கண்ணிவெடிகளை ஒழிக்குமாறு உலகுக்கு வேண்டுகோள் விடுத்தார். டயானாவின் உரையும், கண்ணிவெடிகளுக்கு எதிரான பிரசாரமும் உலகெங்கும் வரவேற்கப்பட்டன.

டயானாவின் சமுக சேவைகளில் இது ஒரு குறிப்பிடத்தக்க சேவையாகும். பல்லாயிரம் மக்களை முடமாக்கியுள்ள கண்ணி வெடிகளை உலகில் இருந்து ஒழித்துக்கட்ட டயானாவின் பணி உதவும் என்று பலரும் பாராட்டினார்கள்.

கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், படை வீரர்களைக் கண்டு டயானா உண்மையாகவே கலங்கி நின்றார்.

'உடல் ஊனமாவது சாவதைவிடக் கொடுமையானது. கண்ணிவெடி மரண தூதனைவிடப் பயங்கரமானது- குரூரமானது' என்று டயானா மனம் கலங்கினார்.

கண்ணிவெடிகளை ஒழித்துக் கட்டுமாறு டயானா ஆற்றிய உரை பிரிட்டனில் சலசலப்பை உருவாக்கியது.

பிரிட்டன் கண்ணிவெடிகளை பயன்படுத்தும் நாடுகளில் ஒன்று .அவ்வாறிருக்க டயானா எப்படி கண்ணிவெடிகளை எதிர்க்கலாம். அது பிரிட்டனுக்கும் எதிரான பேச்சல்லவா?' என்று விமர்சனங்கள் பாய்ந்தன.

டயானா கலங்கவில்லை. எதிர்ப்பைக் கண்டு அஞ்சவில்லை. அதனால் சலசலப்பு தானாக ஓய்ந்தது.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | க. சகுந்தலா, மஹாரம்பைக்குளம், வவுனியா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

● முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
● 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
● 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
● பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
● இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்-முரசு 01 வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





சேர்ந்து வாழு வீரோ?– உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ?– உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ?

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# உழைப்பின் பெருமை



ஒரு நாள் காலை, ரஷ்ய நாட்டு புகையிரத நிலையத்தில் ஒரு பெண்மணி புகையிரதத்தில் இருந்து இறங்கினார்.

அவர் கையில் ஒரு கடிதம் இருந்தது.

புகையிரத நடை பாதையோரத்தில் பெரிய தாடி மீசையுடன் கசங்கிய உடையுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

அவரை, புகையிரதத்தில் வந்த பெண்மணி அழைத்துத் தன் கையிலிருந்த கடிதத்தை, புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள உணவு விடுதியில் சேர்ப்பித்தால் ரஷ்ய நாட்டு நாணயமான ரூபிள்கள் இரண்டு தருவதாகக் கூறினார்.

இதைக் கேட்ட அம் மனிதரும் சம்மதித்து, கடிதத்தை அப்பெண்மணியிடமிருந்து வாங்கிச் சென்று, உணவு விடுதியில் சேர்ப்பித்துவிட்டு வந்தார்.

அப் பெண்மணி அவருக்கு இரண்டு ரூபிள்கள் கொடுத்தார்.

பணத்தைப் பெற்றுக்கொண்டு நடக்க ஆரம்பித்தார் அந்த மனிதர்.

அந்த மனிதர் நடப்பதைப் பார்த்த பெண்மணிக்குத் திடீரென அவரது அடையாளம் நினைவுக்கு வந்தது.

வெளிறிய முகத்துடன் அந்த மனிதரிடம் ஓடினார் பெண்மணி.

"நான் உங்களைப் புகையிரத நிலையத்தில் பணிபுரியும் கூலியாள் என்று நினைத்து இரண்டு ரூபிள்கள் கொடுத்து விட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து, அந்தப் பணத்தை என்னிடம் தாருங்கள்!" என்று அவரிடம் கேட்டார் பெண்மணி.

அதற்கு அந்த மனிதர்,

"அம்மா! என்னுடைய வேலை உனக்குத் திருப்தி அளிக்காவிட்டால் இன்னொரு முறை என்னை வேலைக்குக் கூப்பிடாதே.

ஆனால் என் உழைப்பிற்கு நீ தருவதாகக் கூறி எனக்குத் தந்த பணத்தைக் கேட்காதே.

நான் உழைத்துச் சம்பாதித்த பணத்தை உனக்குத் தரமாட்டேன்!" என்று கூறிவிட்டு மீண்டும் நடக்க ஆரம்பித்தார் அந்த மனிதர்.

புகையிரத்தில் வந்த பெண்மணியோ இதைக் கேட்டு வாயடைத்துப் போய் நின்றார்.

'உழைப்பின் பெருமையை உணர்த்திய அந்த மனிதர் யார் தெரியுமா?'

'போரும் சமாதானமும்', 'அன்னா கரீனா' போன்ற நாவல்களை எழுதிய ரஷ்ய மாமேதை லியோ டோல்ஸ்ரோய் ஆவார்.

## அதிசயம் – ஆனால் உண்மை!



← புகழ்பெற்ற அமெரிக்க வில்வீரர் ஹோவார்ட் ஹில், வில்லம்பைக் கொண்டு கடலடியில் 40 அடி ஆழத்தில் 12 அடி நீளமுடைய சுறாமீனை ஒரே ஒரு அம்பால் அடித்துக் கொன்றார்.



← இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த வில்லியம் லெகட் என்பவர் 50 ஆண்டுகள் தொடர்ச்சியாக தேவாலயத்தில் இடம் பெறும் வழிபாடுகளில் கலந்து கொண்டார். ஒரு நாளும் தவறியதில்லை. புனித வேதாகமம் இவருக்கு தலைகீழ் பாடம். இருந்தாலும் இவருக்கு எழுதப்படிக்கத் தெரியாது.



↑ ஜெர்மனி அருகேயுள்ள ஈஸ்டர் குகையின் சுவர் மீது, கன்னி மரியாள் குழந்தை இயேசுவை அணைத்தபடி அமர்ந்திருப்பது போன்ற ஓவியம் இயற்கையாக அமைந்துள்ளது.

## சிமெந்து



கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தும் சிமெந்து என்ற சொல்லுக்கு ஒட்டிக் கொள்வது அல்லது சேர்த்து வைப்பது என்று பொருள். இன்று உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு வரும் சிமெந்து- 1924ம் ஆண்டு ஜோசப் அஸ்பிடின் என்ற கட்டடக்கலைஞரால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஜோசப் அஸ்பிடின் களிமண்ணையும் சுண்ணாம்புக் கற்களையும் சேர்த்து அரைத்து அதை சுண்ணாம்புக் காளவாயில் வைத்து அதிக வெப்பத்தில் சுட்டார். சுடப்பட்ட அந்தக் கலவையை மறுபடி அரைத்தார்.

இங்கிலாந்தில் உள்ள போர்ட்லாண்ட் என்ற இடத்தில் தயாராகும் செங்கற்கள்தான் அக்காலத்தில் புகழ்பெற்றவை. அந்தச் செங்கற்களைக் கொண்டுதான் பெரிய கட்டடங்கள் கட்டப்பட்டன.

தான் கண்டுபிடித்த சிமெந்தும் உயர்தரமானது என்று காட்டுவதற்காக ஜோசப் அஸ்பிடின் அதற்கு 'போர்ட்லாண்ட் சிமெந்து' என்று பெயரிட்டார். அந்தப் பெயர் உலகப்புகழ்பெற்று விட்டது.

## அமெரிக்கச் செய்திகள்



உலகில் மிகப்பெரிய பணக்கார நாடு அமெரிக்காதான். உலகப் பரப்பளவில் 4வது பெரிய நாடாக இருந்தாலும் உலகின் மிகப்பெரிய வல்லரசாக இருக்கிறது.

அமெரிக்காவின் விடுதலைக்குப் பாடுபட்ட, அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் நினைவாக நாட்டின் தலைநகருக்கு வோஷிங்டன் எனப் பெயர் வைக்கப்பட்டது.

அமெரிக்காவில் மொத்தம் 50 மாநிலங்கள் உள்ளன. இதைக் குறிப்பதற்காக அதன் தேசியக்கொடியில் 50 நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க தேசியக் கொடி 'ஓல்ட் குளோரி' என்றழைக்கப்படுகிறது.

அமெரிக்க மாநிலங்களில் மிகவும் பெரியது அலாஸ்கா.

அமெரிக்க ஜனாதிபதிகளின் கார் இலக்கங்கள் எப்போதும் 100 என்றே இருக்கும்.

அமெரிக்க ஜனாதிபதிகளில், தனது பதவியை இராஜினாமா செய்த ஒரே ஒரு ஜனாதிபதி- றிச்சர்ட் நிக்சன்.

அமெரிக்க தேசிய கீதத்தை இயற்றியவர் ஒரு ரஷ்யர்.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.க்கு ஆண்டுதோறும் 300 கோடி டொலர் (21 ஆயிரம் கோடி ரூபா) செலவளிக்கப் படுகிறது.

உலகிலேயே மிகப் பெரிய இராணுவ மையம் அமெரிக்காவின் 'பெண்டகன்' தான். இது அமெரிக்காவில் ஆர்லிங்டன் என்ற இடத்தில் உள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.05.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **294**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 292

பரிசுக்குரியவர்:
என். சூரியகுமாரி,
குருமன்காடு, வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். இர்பான், ஸம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. | எஸ். சரவணபவன், புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை. |
| எஸ். கேதீஸ்வரன். தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. | கே. ஸ்ரீஸ்கந்தகுமார், விபுலானந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-1. |
| வி. பிரதீபா, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருமலை. | முகமட் பைரூஸ், அப்துல் மஜீத் வித்தியாலயம், சின்னக்கிண்ணியா. |
| கே. நிரோஷன், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு-4. | கே. ஷர்மிளாதேவி, ஹைபை தமிழ் மகா வித்தியாலயம், ஹஹாவத்தை. |
| எஸ். சித்தி பாத்திமா, சாஹிரா சிறுவர் தேசிய பாடசாலை, புத்தளம். | பி. மனோரஞ்சன், விஷ்ணுமகா வித்தியாலயம், கல்முனை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. காலையில் வந்தான் மாலையில் போனான். அவன் யார்?
2. ஒன்பது பேருக்கு ஒரு குடுமி. அது என்ன?
3. தொப்பையனுக்கு ஒரு வாசல்; அவன் தோழனுக்கோ இரு வாசல். அது என்ன?
4. வட்ட வட்டத் தட்டுக்குள் விட்டதெல்லாம் பாம்புக் குட்டிகள். அது என்ன?
5. அசைவான்,மடங்குவான்,பிடுங்க முடியாது. அவன் யார்?
6. போவான், வருவான், ஒற்றைக் காலில் நிற்பான். அவன் யார்?
7. உச்சாணிக் கிளையிலே ஓட்டுச் சட்டியிலே உள்ளே இருக்குமாம் களிமண். அது என்ன?
8. குளத்துக்குள் குதித்தவன் கும்மாளம் போடுகிறான். அவன் யார்?
9. நன்றிக்கு வால், கோபத்துக்கு வாய். அது என்ன?
10. தலைக்கனம் அதிகமிருக்கும், தயிரை அடித்து மோராக்கும். அது என்ன?

### விடைகள்

1. சூரியன் 2. வெள்ளைப் பூண்டு 3. சட்டை 4. இடியப்பம் 5. விரல்கள் 6. கதவு 7. விளாம்பழம் 8. பலகாரம் 9. நாய் 10. மத்து.

தொகுப்பு: ஏ. அகல்யா.

## பெருவிரல் அடையாளம்



☛ பெருவிரல் அடையாளம் (கை நாட்டு) என்றால் என்ன?
கையெழுத்துப் போடத்தெரியாதவர்களின் கைப்பெருவிரலில் மை தடவி, கடதாசியில் வைக்கும் அடையாளத்திற்கு பெருவிரல் அடையாளம் என்று பெயர்.

☛ இந்தப் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
நமது அண்டை நாடான இந்தியா சுதந்திரம் பெறுமுன், அங்கு பணியாற்றிய சேர் வில்லியம் ஹெர்ஷெல் என்ற ஆங்கிலேயர் முதன் முதலாக ஒய்வூதியம் பெறுபவர்களிடம் அடையாளம் பெறுவதற்காக இந்தப் பழக்கத்தை அறிமுகப்படுத்தினார்.

☛ ஒவ்வொருவருடைய விரல் அடையாளங்களும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை என்று எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
1809ம் ஆண்டு ஃபிரான்ஸிஸ் கார்டன் என்ற இங்கிலாந்து விஞ்ஞானி இதைக் கண்டுபிடித்தார்.

☛ முதன் முதலில் எந்த நாட்டு பொலிசார் குற்றவாளிகளிடம் கைவிரல் அடையாளங்களைப் பெறும் பழக்கத்தை அறிமுகப்படுத்தினர்?
பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த இந்திய பொலிசாரே ஆரம்பித்தனர். அதனை ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசார் 1901ல் நடைமுறைப் படுத்தினர்.

☛ இரட்டைப் பிறவிகளின் விரல் அடையாளங்களும் ஒரே மாதிரி இருக்குமா?
இல்லை. ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்ட இரட்டைப் பிறவிகளின் விரல் அடையாளங்கள்கூட வேறு மாதிரித்தான் இருக்கும்.

## பெரிய தீவுக்கூட்டம்

கடலில் ஒரே இடத்தில் ஏராளமான தீவுகள் சிதறி இருப்பதை ஆங்கிலத்தில் ஆர்ச்சிபெலகோ (ARCHIPELAGO) என்று அழைக்கிறார்கள். இப்படி இருக்கும் தீவுக் கூட்டங்களில், உலகின் மிகப் பெரிய தீவுக் கூட்டம் இந்தோனேஷியா ஆகும்.

இங்கு 5000 சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்குள் 13,600 தீவுகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் 6000 தீவுகளில்தான் மக்கள் வசிக்கிறார்கள். மற்றவை மிகச் சிறிய தீவுகளாகும்.

## கொள்ளைக்கார நண்டு



அந்தமான் நிக்கோபார் தீவுக் கூட்டத்தில் கொள்ளைக்கார நண்டுகள் வசிக்கின்றன. இவை தென்னை மரத்தில் ஏறி தேங்காயைப் பறித்து, நாரை உரித்து, அதிலுள்ள நீரைக்குடிக்கும். பின்னர் தேங்காயை உண்ணும்.

உலகத்தில் நிலத்தில் வாழும் நண்டுகளில் மிகவும் பெரியவை இவை தான். இவை சாதாரணமாக 28 கிலோ எடையைத் தூக்க வல்லன. 30 கிலோவிற்கு மேற்பட்ட எடையை இழுக்க வல்லன.

இதனுடைய விஞ்ஞானப் பெயர் 'பிர்கஸ் லேட்ரோ' என்பதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# டிசம்பர் பௌர்ணமி 26

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

நித்தியன் முகுந்தனை பயமாய் பார்த்தபடி கேட்டான்.

"முகுந்தன்! உன்னோட பேச்சும் சரி நடத்தையும் சரி எல்லாமே வித்தியாசமா இருக்கு-விசாலி எங்கே...? இது யாரோட பங்களா...? சாந்தாவை எதுக்காக இங்கே கொண்டு வந்து...?"

முகுந்தன் கையமர்த்தினான். "இப்படி ஒட்டு மொத்தமா கேள்விகளைக் கேட்டா... எப்படி பதில் சொல்ல முடியும் நித்தியன்? உன்னோட முதல் கேள்வி என்ன... விசாலி எங்கே? விசாலிக்கும் இப்போ நடந்துட்டிருக்கிற சம்பவங்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அவ இந் நேரம் அவளோட வீட்ல படுத்து நிம்மதியாய் தூங்கிட்டிருப்பா. ரெண்டாவது கேள்வி. இது யாரோட பங்களா?.

இது பிரபல தொழில் அதிபர் கமலசேகரோட பங்களா. அவர் எனக்கு தொழில் முறையில் நெருங்கின ஃப்ரண்ட் என்கிற விஷயம் உனக்குத் தெரியும். உன்னோட மூணாவது கேள்வி. சாந்தாவை எதுக்காக இங்கே கொண்டு வந்து இப்படி மயக்கமா படுக்கப் போட்டிருக்கு? இந்தக் கேள்விக்கு கொஞ்சம் நீளமா பதில் சொல்லணும். கேட்க உனக்கு பொறுமை இருக்கா நித்தியன்?"

நித்தியனின் மனதில் இப்போது புதிதாய் ஒரு பயம் முளைத்திருக்க, முகுந்தனையே விழிகள் விரியப் பார்த்தபடி நின்றிருந்தான். அவன் தொடர்ந்தான்.

"நித்தியன்! என்னோட தொழில் ரீதியான ஃப்ரண்ட் கமலசேகருக்கு எந்த ஓர் அழகான பெண்ணும் கண்ணுல பட்டுடக்கூடாது. பட்டுட்டா தொட்டுப் பார்க்கிறவரை அவர் விடமாட்டார். நல்லி சில்க்ஸுக்கு நாம் சாந்தாவுக்காக கல்யாண புடவை எடுக்கப்போனபோது அந்தப் பக்கமா கார்ல வந்த கமலசேகரோட பார்வையில் சாந்தா பட்டிருக்கா. அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே அவர்கிட்டமிருந்து எனக்கு அவசர அழைப்பு. போனேன். சாந்தாவைப் பத்தி விசாரிச்சார். நான் விபரம் சொன்னேன். அவர் அதையெல்லாம் காதிலேயே போட்டுக்கலை. சாந்தாவை தான் தொட்டுப் பார்க்கணும்னு சொன்னார்.

அது முடியாத காரியம் ஸார்ன்னு சொன்னேன்.



அந்த பெண்ணோட வாழ்க்கை பாழாயிடும்னு நினைச்சு பயப்படறியா.... உனக்கு அந்த பயமே வேண்டாம். சாந்தாவை நான் தொட்ட விஷயம் அவளுக்கே தெரியாதபடி செய்ய இந்த ஸெடட்டிவ் மாத்திரைகளால் முடியும். அவ உன்னோட வீட்டுக்கு வரும் போது இந்த மாத்திரையை ஏதாவது 'ட்ரிங்க்'ஸில் போட்டுக் கொடுத்துட்டு எனக்கு ஃபோன் பண்ணு. நான் வந்து சத்தம் இல்லாமே காரியத்தை முடிச்சுடறேன்னு சொன்னார். நான் அதுக்கு வேண்டாம் ஸார் இது பாவம்னு சொன்னேன். கமலசேகர் சிரிச்சார். அந்தப் பாவத்துக்கு ஏதாவது ரேட் போட்டுக்கலாமான்னு கேட்டார். நித்தியன் உனக்கு தெரியுமோ தெரியாதோ; கமலசேகர் என்னோட பிஸினஸுக்கு ரெண்டு லட்சம் ரூபாய் வரைக்கும் கடன் கொடுத்திருக்கார். அதுதவிர நான் மேனுபாக்ஸர் பண்ற டெக்ஸ்டைல்ஸ் ஸ்பேர் பார்ட்ஸீக்கு லட்சக் கணக்கில் ஆர்டர் தர்றதும் அவர்தான். சாந்தாவைத் தொடறதுக்காக நான் அவரை அனுமதிச்சா கடன் ரெண்டு லட்ச ரூபாய் தள்ளுபடி செய்யப்படுமென்று சொன்னார். அது மட்டுமில்லை.....

அவர் மில்ஸ் சம்பந்தப்பட்ட எல்லா ஆர்டர்களையும் எனக்கே தர்றதா ப்ராமிஸ் பண்ணினார். நித்தியன்! நீ ஒரு நிமிஷம் நினைச்சுப்பாரு... ரெண்டு லட்சரூபாய் கடன் தள்ளுபடி, மாசத்துக்கு பத்து லட்ச ரூபாய் ஆர்டர். இந்த வாய்ப்பை இழக்க எனக்கு மனசு வருமா? இந்த மாபெரும் பம்பர் பரிசுக்கு நான் பண்ண வேண்டிய ஒரே ஒரு காரியம்-சாந்தாவை ஒரு ரெண்டு மணி நேரத்துக்கு அவளுக்கே தெரியாம அவ உடம்பை வாடகைக்கு விட ணும். இந்த சுலபமான வேலைக்கு சரின்னு தலையாட்டி வெச்சேன். என்னோட அதிர்ஷ்டம் சாந்தா போலிஸுக்குப் பயந்து என்னோட வீட்டிலேயே தங்கும் படியாச்சு. ஸெடட்டிவ் மாத்திரைகளை கூலிட்ரிங்க்ஸ்ல கலந்து குடுத்து சாந்தாவை குடிக்க வெச்சு மயக்கத்துக்குப் போனதும் கமலசேகருக்கு ஃபோன் பண்ணி வரவழைச்சேன். அவரும் வந்தார். மயக்கத்துல கிடந்த சாந்தாவை தொட்டார்.

தொட்டதுமே ஒரு பிரளயம் நடந்தது. கூல்ட்ரிங்க்ஸில் கலந்து கொடுத்த மயக்க மருந்து மாத்திரைகள் சரியாய் வேலை செய்யாததால் சுயநினைவோடு இருந்த சாந்தா கமலசேகரை எதிர்த்துப் போராட ஆரம்பிச்சுட்டா. போராட்டத்தோட விளைவு சாந்தா தன் கைக்கு கிடைச்ச பித்தளை ஃப்ளவர் வாஷினாலே கமலசேகரின் பின்னந் தலையில் ஒரு போடு போட ரத்த சேதம் அதிகமாகி ஆள் இப்போ தலையில் பாண்டேஜ் கட்டோடு வீட்ல ரெஸ்டில் இருக்கார். கொஞ்சம் உடம்பு தேறினதும் சாந்தாவை தொட்டுப் பார்க்கிறதுக்காக இங்கே வந்துடுவார்."

"அடப்பாவி" நித்தியன் பெரிய குரலெடுத்து கத்த முகுந்தன் கையமர்த்தி புன்னகைத்தான்.

"சாந்தா இதே மாதிரித்தான் என்னைத் திட்ட ஆரம்பிச்சா. அவளை வெளியே விட்டா... எல்லா உண்மைகளும் வெளியே வந்து நாங்க போலிஸ் லாக்கப்புக்குள்ளே போகவேண்டி வரும்ங்கிறதுக்காகத்தான் சாந்தாவை இங்கே கொண்டு வந்து வெச்சிருக்கோம். கமலசேகர் உடம்பு தேறி அவளை ஆசைதீர தொட்டுப் பார்த்ததும் சாந்தா இந்த உலகத்துல உயிரோட இருக்கமாட்டா. இப்படி எல்லாம் திட்டம் போட்டுப் பண்ணினாலும் போலிஸை நினைக்கும்போது கொஞ்சம் 'பக்'ன்னு தான் இருக்கு. போலிஸ் என்னை மோப்பம் பிடிச்சுடக் கூடாதேங்கிறதுக்காக ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் ஒரு புது நடவடிக்கையைத் திட்டத்துல சேர்த்தேன். சாந்தாவைப்பத்தி கவலைப்படற-மிக மிக அதிகமா கவலைப்படற ஜீவன் நீதான். நீ உயிரோடு இருந்தா தினசரி போலிஸ் ஸ்டேஷனுக்குப் போய் 'சாந்தா என்ன ஆனா'ன்னு நச்சரிச்சுகிட்டே இருப்பே. போலிஸும் உன்னோட நச்சரிப்பைத் தாங்கிக்க முடியாமே சாந்தாவோட கேஸை தீவிரமான விசாரணைக்கு உட்படுத்து வாங்க. அதனால சாந்தாவோடு சேர்த்து உன்னையும் இல்லாமே பண்ணிட்டா விவகாரம் வேறு திசைக்குத் திரும்பிடும். நீயும் சாந்தாவும் ஊரைவிட்டே ஓடிப்போய் விட்டதாகக்கூட என்னால கதை கட்டி பேச முடியும். அது உண்மைதான்னு எல்லாரையும் நம்பவைக்க முடியும்."

முகுந்தன் சொல்லிக் கொண்டே நித்தியனை நோக்கி பிஸ்டலை உயர்த்தினான்.

நித்தியன் பயம் உறைந்து போன விழிகளோடு பின்வாங்கி பின்பக்க சுவருக்கு முட்டிக் கொண்டு நின்றான்.

"ஸாரி நித்தியன். உயிர் காப்பான் தோழன்னு பொதுவா சொல்லுவாங்க. நம்ம விஷயத்துல உயிர் எடுப்பான் தோழன்னு ஆயிடுச்சு. எனக்கு வேற வழியில்லை நித்தியன்! போலிஸ்கிட்டயிருந்து நான் தப்பிக்கணும்னா உன்னையும் சாந்தாவையும் இந்த உலகத்தைவிட்டே துரத்தியாகணும். உன்னை இன்னிக்கு அனுப்பி வெச்சுடறேன். ரெண்டு நாள் கழிச்சு கமலசேகர் சாந்தாவை தொட்டு முடிச்சதும் அவளையும் உன்னோட இடத்துக்கே அனுப்பி வைக்கிறேன். உங்க ரெண்டு பேர் உடம்பையும் கச்சிதமா டிஸ்போஸ் பண்ணி சாம்பலாக்க கமலசேகரோட உரக் கம்பெனி ரெடியா கவே இருக்கு! மறுபடியும் ஸாரி நித்தியன்... உன்னை இப்போ சுடப் போறேன். பயமாயிருந்தா கண்ணை மூடிக்க."

முகுந்தன் பிஸ்டலை உயர்த்தி நித்தியனை குறி பார்த்த விநாடி மணிக்கட்டில் பலமாய் ஒரு அடி விழ பிஸ்டல் தெறித்து பக்கத்து சோபாவில் விழுந்தது. முகுந்தன் அதிர்ச்சியோடு திரும்பிப் பார்க்க அந்த ரெண்டு பேர் தெரிந்தார்கள். சம்மர் கிராப்பில் உயரமாய் சிவப்பாய் தாட்டியாய் இருந்தார்கள். இளைஞர்கள். ஒருவரின் கையில் ஸ்டீல்ராடும் இன்னொருவனின் கையில் ரிவால்வரும் தெரிந்தது.

ரிவால்வர் பேர்வழி முகுந்தனைக் கோழிக்குஞ்சாய் அழுத்திக் கொள்ள ஸ்டீல் ராட் பேர்வழி நித்தியனை நோக்கிப்போனான். ஒரு புன்னகையோடு தோளில் கையை வைத்தான். நல்ல ஆங்கிலத்தில் பேசினான்.

"மிஸ்டர் நித்தியன்! நானும் என்னோடு வந்த அந்த நபரும் போலிஸ் டிபார்ட்மெண்ட் ஆசாமிகள். இன்னும் குறிப்பாய் சொல்லப்போனால் போதை மருந்து ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள். போதை மருந்து விவகாரத்தில் ஏர்போர்ட்டில் கைது செய்யப்பட்ட நீங்கள் கோர்ட்டில் தண்டனை பெற்று ஒரு வருஷம் பம்பாய்ச் சிறையில் இருந்துவிட்டு சில நாட்களுக்கு முன் விடுதலையாகி சென்னை வந்தீர்கள். எங்கள் டிபார்ட்மெண்ட் சட்டதிட்டப்படி போதை மருந்து கேஸில் தண்டனையடைந்து விடுதலையாகும் எந்த ஒரு நபரையும் ஒரு ஆறு மாத காலத்துக்கு 'க்ளோஸ் ஃபாலோஅப் செய்து அந்த நபர்களை கண்காணிப்பது வழக்கம். பம்பாய்ச் சிறையிலிருந்து விடுதலையான உங்களையும் கடந்த சில தினங்களாக நானும் இவரும் மாறி மாறி இருபத்திநாலு மணி நேரமும் கண்காணித்து வந்தோம். இன்றைக்கு நள்ளிரவில் நீங்கள் கார் எடுத்துக் கொண்டு வேகமாய் கிளம்பியதும் நாங்களும் உங்களைப் பின் தொடர்ந்தோம். இந்த பங்களாவுக்கு வந்தோம். தமிழ் மொழி எங்களுக்கு புரியா விட்டாலும் நீங்கள் ஏதோ ஒரு ஆபத்தில் மாட்டியிருப்பது புரிந்தது. அதனால்தான் உங்களைச் சுட முயன்ற உங்கள் நண்பரை மடக்கினோம்."

நித்தியன் கண்களில் நன்றி பளபளத்தது. "தேங்க்யூ வெரிமச் ஸார். இந்த இக்கட்டான நிலைமையில் வந்து காப்பாற்றிய உங்களுக்கு என்னுடைய நன்றி. உங்களிடம் எல்லா விஷயத்தையும் சொல்வதற்கு முன்பாக இன்ஸ்பெக்டர் குமரனுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்."

"இதோ செல்ஃபோன். நீங்களே தகவல் கொடுத்து விடுங்கள்."

அந்த அதிகாரி செல்ஃபோனை நீட்ட நித்தியன் வாங்கி டயலில் எண்களைத் தட்ட ஆரம்பித்தான்.

கனமான ரோஜா மாலைகளில் நிரம்பியிருந்தார்கள் நித்தியனும் சாந்தாவும். காலையில் கோயிலில் எளிமையாக கல்யாணத்தை முடித்துக் கொண்டபின் ஹோட்டல் ரெஸிடென்ஸி ரூஃப் கார்டனில் ரிசப்ஷன்.

ஆர்க்கெஸ்ட்ரா மூலையில் வாசித்துக் கொண்டிருக்க... நண்பர்களும் உறவினர்களுமாய் சுமார் நூறு பேர் சந்தோஷ முகங்களோடு வளைய வளைய வந்தார்கள். ருத்ரமூர்த்தி வாசலில் நின்று ரிசப்ஷனுக்கு வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். விசாலி வாய்கொள்ளாச் சிரிப்போடு வந்து ஒரு பெரிய பொக்கேயை இரண்டு பேர் கைகளிலும் திணித்து விட்டு சொன்னாள்.

"நித்தியன்... ஒரு சின்ன கோரிக்கை."

"என்ன?"

"இது டிசம்பர் மாசம். பௌர்ணமிநாள். அடுத்த வருஷம் டிசம்பர் மாசம் பௌர்ணமி நாள் அன்னிக்கு உங்களைப் பார்க்கும் போது கையில் ஒரு ஜூனியர் நித்தியனோ ஜூனியர் சாந்தாவோ இருக்கணும்"

நித்தியன் புன்னகைத்தான்.

"கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு இன்று இரவு முதலே நடைமுறைக்கு வரும்."

சாந்தா வெட்கத்தோடு நித்தியனின் விலாவில் குத்திவிட்டு "என்னங்க நீங்க?" என்று சிணுங்க, விசாலி வாய்விட்டு சிரித்தாள். விசாலியின் அந்த சிரிப்பில் ஒரு மெல்லிய சோகம் புதைந்து இருந்தது என்பது அங்கிருந்த யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை; நித்தியன் உட்பட.

[முற்றும்]

பி.கு:- அன்பு வாசகர்களுக்கு!

வணக்கம். இந்த டிசம்பர் பௌர்ணமி தொடரை ஒரு உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதினேன். உண்மை சம்பவத்தின் முடிவு சோக மயமானது. ஆனால் கதையை சோகமாய் முடிக்க என் இளகிய மனம் இடம் தரவில்லை. தொடரை சுபமாக்கி நித்தியன், சாந்தாவுக்கு கல்யாணத்தை நடத்திவிட்டேன். அவர்களை வாழ்த்துங்கள் வாசகர்களே!

-ராஜேஸ்குமார்-

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

## என் கதை 04

அன்னிக்கு நான் கர்ப்பமானபோது, பொறுப்புள்ள கணவன் மாதிரி, டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போனீங்க. அவங்க எழுதிக் கொடுத்த மாத்திரையெல்லாம் வாங்கிக் கொடுத்தீங்க. அதுக்கப்புறம் அன்னிக்கு சாயங்காலமே உட்லண்ட்ஸ் கூட்டிட்டுப்போய், 'இந்தக் குழந்தை வேணாம்; அழிச்சிடு!'ன்னு சொன்னீங்க. இன்னிக்கு யாரோ ஒருத்தர் வந்து 'அங்கிளுக்கு அந்தக் குழந்தை பிடிக்குது... நீதத்து எடுத்துக்கோயேன்'னு சொல்றதையெல்லாம் நான் கேட்டுட்டு இருக்கணுமா? உங்களை நம்பி வந்ததுக்கு, எனக்கு இதுதான் மிச்சம்!" என்று பொரிந்து தள்ளினேன்.

நான் நடைமுறை புரியாதவள் அல்ல. எந்த ஒரு கணவனுக்கும் ஒரு காலகட்டத்தில் தன் மனைவியைவிட இன்னொரு பெண் அழகாகத் தெரிவாள். அவள் மீது ஆசைப்படுவது இயற்கைதான். ஏன்? நான் வெளியே போகும் போதுகூட ஆண்கள் ஒருமாதிரியாக என்னைப் பார்ப்பார்கள். 'இந்தப் புடவை உங்களுக்கு நல்லாயிருக்கு! நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க'ன்னுல்லாம் சொல்லு வாங்க. அப்ப எனக்கு கோபம் வரும். ஒரு ஹீரோ ஒரு ஷூட்டிங்போது 'இந்த மஞ்சப்புடவை உங்களுக்கு ரொம்ப அழகா இருக்கு', என்றார். நான் அவரைக் கண்டபடி திட்டி விட்டேன். 'உங்க வேலையைப் பார்த்துட்டுப் போங்க. உங்களை நான் கேட்டேனா உங்க காமெண்ட்டை யாரு கேட்டா?' என்றேன். அவரே பிறகு என்னிடம் வந்து, 'உங்க குடும்பத்திலே ஏதாவது ப்ராப்ளமா? முதல்ல அத சரிபண்ணிக்குங்க!' என்றார். எனக்கு கோபம் வந்ததுக்கு காரணம், நம்ம புருஷன் நம்மளப்பத்தி ஒண்ணும் பாஸிடிவ்வா சொல்றதில்ல... ஆனா மற்றவங்களெல்லாம் காமெண்ட் அடிக் கிறாங்களேன்னு தான்.

### எப்படி பொறுப்பது?

இதைப் போல ஒவ்வொரு விஷயத்திலும் நான் விலகி, விலகிப் போய்க் கொண்டிருந்தேன். நான் கொண்டு வந்து குடுக்கணும். இவர் மட்டும் ரெண்டு வருஷம் இன்னொருத்தியோட கே.கே. நகரில் குடித்தனம் நடத்துவாரு. இதை நான் எப்படிப் பொறுத்துக்க முடியும்?



இதில் இன்னொரு வேடிக்கையும் நடந்தது. அவர் முதல் முதல்ல கே.கே. நகர்ல வீடு தேடிப் போனதே என் மாமா பையனிடம்தான். விசாரித்த போது, அவன்கூட 'என்ன

ஸ்ரீவித்யா

அங்கிள் நீங்களும் வித்யா ஆண்ட்டியும் வரப் போறீங்களா?' என்று கேட்டிருக்கிறான். 'இல்லை ஒரு நண்பருக்கு' என்று சொல்லிச் சமாளித்திருக்கிறார். எனக்கு அதற்குப் பிறகு தான் இவர் தினமும் காரில் அங்கே போவதும், அந்தப் பெண்ணை பிறகு ஸ்கூட்டரில் அவள் வேலை பார்க்கும் தாஜ் ஹோட்டலில் கொண்டு போய் விடுவதுமாக இருந்திருக்கிறார் என்கிற விஷயமெல்லாம் தெரியவந்தது.

என் பணத்தில் அவர் வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்துவதற்கு நான் எதற்குத் துணை போகவேண்டும்? அதனால்தான் வெளிப்படையாகவே கேட்டேன். "நான் வேணுமா? அந்தப் பொண்ணு வேணுமான்னு நீங்களே முடிவு பண்ணிக்குங்க. பணத்துக்காக ஒரு பொண்டாட்டி, சுகத்துக்காக இன்னொருத்தியா? நான் அந்த மாதிரி சொன்னா, நீங்க ஒத்துக்குவீங்களா? அதுவும் நான் இருக்கிற இண்டஸ்ட்ரி எப்படிப்பட்டதுன்னு தெரியும். அதுல எல்லோரும் ஒருத்தருக்கொருத்தர் அன்பா பழகுறவங்கதான். அப்படி இருக்கும் போதே நாங்க எவ்வளவோ கண்ட்ரோலா இருக்கோம். அப்படி நான் ஏதாவது தவறு செஞ்சேன்னா அதுக்கு காரணமாவும் நீங்களாத்தான் இருப்பீங்க. அதனால் நாம ஒரு முடிவு எடுத்தாகணும்!" என்று கண்டிப்பாகச் சொன்னேன்.

### அவரது மறுப்பு

அவர் அடியோடு மறுத்தார். "தப்பான எந்த உறவும் எனக்குக் கிடையாது. ஒன்ன மாதிரி எனக்கு ஒரு மனைவி கெடைக்கவே மாட்டா" என்றெல்லாம் புகழ்ந்தார்.

"நம் இரண்டு பேர் தரப்புலயும் உறவுக்காரர்களை அழைப்போம். சர்ச்-ல் வைத்து விவாகரத்து செய்துகொள்வோம். இல்லேன்னா, உங்களுக்கும், அந்தப் பொண்ணுக்கும் இருக்கிற உறவை ஒத்துக்குங்க. நம்ம மூணு பேருமே ஒரே வீட்டில் வாழ்வோம். அதற்கு நான் தயார்..." என்றேன்.

ஆனால் அவர் ஒரேயடியாக மறுத்தார். தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றார்.

இதில் இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லியாக வேண்டும். வெளியே எனக்காக பெரிய ரசிகர் கூட்டம். என் அழகை வெளிப்படையாகப் பாராட்டுகிற ஆண்கள் இருக்கிறார்கள். திருமணமாகி வெகு குறுகிய காலத்தில் கணவருக்கு என்மீது ஆசை குறையக் காரணம் என்ன?

நடிகை என்பதால் நான் தவறு செய்திருக்கலாமோ என்கிற எண்ணம் படிப்பவர்களுக்கு வரக்கூடும். வருவதும் நியாயம் தான்.

அவர் என்னைத் திருமணம் செய்து கொண்டதே ஒரு நாடகம்தான். அவரைப் பொறுத்தவரையில் நான் பொன்முட்டை இடுகிற வாத்து. ஆனால் நான் கருவுற்று, குழந்தை பெற்றுவிடக்கூடாது. அப்பொழுதுதான் நான் பொன்னாகக் கொட்டிக் கொண்டிருப்பேன். அந்த வசதி வாழ்க்கைக்காகத்தான் அவர் என்னைத் திருமணமே செய்து கொண்டிருந்தார் என்பது போகப் போக உங்களுக்கும் புரியும். திருமணம் என்பதையே ஒரு வியாபாரத் தந்திர மாகத்தான் அவர் கையாண்டிருக்கிறார்.

மேலும், நாங்கள் ஒன்றாக வாழ்ந்த இந்தக் குறுகிய காலத் தில் எங்களுக்குள் தாம்பத் திய உறவு இயல்பாக இருந்ததே மிகக் குறைவான நாட்கள்தான். பிறகு, அது ஒரு கடமையாயிற்று.

பல சமயங்களில் நான் மாதத்தில் இருபது, இருபத்தைந்து நாட்கள் வெளிப் புறப் படப்பிடிப்பில் இருப்பேன். அதுவும் அவருக்கு வசதியாகப் போயிற்று. அது மாதிரி சமயங்களில் படப்பிடிப்பு நடக்கிற இடத்துக்கு ஒரு நாள் மட்டும் வருவார். அதுவும் திருமண நாள் என்றால் கேட்கவே வேண்டாம். மனைவியிடம் அன்பாக இருப்பதைக் காட்டிக் கொள்ள எல்லார் முன்னிலையிலும் ஏதாவது பரிசு கொடுப்பார். அதற்குப் பிறகு அறைக்குள் வந்து குடித்துவிட்டு, படுத்துக் கொள்வார். நான் மட்டும் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பேன்.

அடுத்த நாள் காலையில் நண்பர்கள் வழியனுப்பிவைக்க, சந்தோஷமாகக் கிளம்பிவிடுவார். அது போன்ற சந்தர்ப்பங்களில் எல்லாரிடமும் "என் பொண்டாட்டி தெய்வம் மாதிரி; அவ, கெணத்துல விழச் சொன்னா விழுந்துருவேன்..." என்றெல்லாம் சொல்லிவிட்டுக் கிளம்புவார். இவை எல்லாமே வெளியில்தான். அறைக்குள்வந்தால் என்னைப் பார்த்து எப்போதுமே ஒரு ஏளனப் புன்னகைதான்.

### புதுவீடு

எங்களுக்குள் நேரடி மோதல் ஏற்பட்டதும் மீனாவுடன் இருந்த தொடர்பை அவர் மறுத்ததைச் சொன்னேன் அல்லவா? அதற்குப் பிறகு சில மாதங்கள் கழிந்தன. நாங்கள் பக்கத்தில் கட்டிக் கொண்டிருந்த புது வீடு தயாரானது. அந்த வீட்டில் குடி புகுந்தோம். இந்தப் புதுமனை புகுவதற்கு முன், என் கைவசம் இருந்த படங்களும் ஓரளவு முடிந்துவிட்டன.

அப்போதுகூட, "புதுவீடு போனவுடன் நாம் குழந்தை பெற்றுக் கொள்ளலாம். நமக்குள் எந்தப் பிரச்சினையும் இருக்காது," என்றெல்லாம் வாக்குறுதி அளித்தார்.

ஆனால் நடந்ததோ அதற்குமாறானது. அதையும் சொல்கிறேன்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

## இரண்டு வாரத் தொடர்

# நல்லவளா, கெட்டவளா?

## பட்டுக்கோட்டை பிரபாகர்

டாக்டர் செல்வகுமாரின் அறைக்கு வெளியில் காத்திருந்த நேரத்தில் அவன் அங்கிருந்த புத்தகங்களைப் புரட்டினான். பிடிக்காமல் போய் செயற்கைத் தொட்டிச் செடிகளைப் பார்த்தான். சுவற்றில் மாட்டியிருந்து ஆங்கில வாசகங்களைப் படித்தான்.

'வாழ்க்கை உன் வசமில்லை. ஆனால் மகிழ்ச்சி உன் வசமிருக்கிறது.'

'அமிழ்ந்து போவது ஆபத்தானது. மிதப்பதே சுகம்.'

'மனதில் பலமிருந்தால் சிகரங்கள் உன் காலடியில்.'

வெறுப்பாகச் சிரித்துக் கொண்டான். கண்ணாடியை மடக்கி பாக்கெட்டில் செருகிக்கொண்டான். அவன் தோளில் கை வைத்த ஆசாமி, "நீங்கதானே சந்திரன்?" என்றதும் "அதுக்கென்ன?" என்றான்.

"எத்தனை தடவை கூப்பிடறது? உள்ளே போங்க சார்."

"எத்தனை தடவை கூப்பிட்டீங்க?"

"மூணு தடவை."

"ஸாரி. கவனிக்கலை" என்று எழுந்து நடக்க...

"சார், உங்க கர்சீப்...." பேண்டுக்கு அடியில் போட்டிருந்த கர்சீப்பை எடுத்துக் கொடுக்க... "தேங்க்ஸ்" என்று அறைக்குள் வந்து நாற்காலி மேல் விரித்துப் போட்டு அமர்ந்து, டாக்டரைப் பார்த்தான் சந்திரன்.

டாக்டர் செல்வகுமார் புன்னகைத்தபடியே பிறந்திருப்பார்போல. ஸ்ட்ரைப்ஸ் முழுக்கைச் சட்டை. பிளெய்ன் டை. அகலமான நெற்றி. கண்களும் சிரிக்குமா? தலைக்குப் பின்னால் இங்கேயும் ஒரு வாசகம்.

'என் மிச்ச வாழ்க்கையில் இன்றைக்கு முதல் நாள்.'

"சொல்லுங்க, மிஸ்டர்."

"டாக்டர் ஐம் சந்திரன்!" என்று கை நீட்டினான்.

"கிளாட் டு மீட் யூ" என்று கை குலுக்கினார்.

"டாக்டர், சிடியிலேயே நீங்க பெரிய சைக்யாட்ரிஸ்ட். நீங்கதான் எனக்கு உதவி செய்யணும். தயவு செஞ்சி கை விட்டுடாதீங்க சும்மா மருந்து மாத்திரை எழுதிக் கொடுத்துத் துரத்திடாதீங்க-" அவன் விரல்கள் நடுங்கின.

"ரிலாக்ஸ்டா இருங்க சந்திரன். நான் டாக்டர் இல்லை. உங்க நண்பன். ஓ.கே. ஏதாச்சும் சாப்பிடறீங்களா?"

"தண்ணி வேணும்."

மூடி போட்டு தனக்காக வைத்திருந்த தண்ணீர் கிளாஸை அவன் பக்கமாக நகர்த்தினார்.



சந்திரன் அவசரமாகச் சட்டையை நனைத்துக்கொண்டு முடித்தான்.

"டாக்டர், நான் சரியாத் தூங்கி ரொம்ப நாளாச்சு...."

"தெரியுது... உங்க பிரச்சனை என்னன்னு அப்புறம் பேசிக்கலாம். முதல்ல உங்களைப் பத்திச் சொல்லுங்க சந்திரன்."

"எம். காம். படிச்சிருக்கேன் டாக்டர். ஒரு தனியார் நிறுவனத்தில நல்ல வேலை. ஏழாயிரம் சம்பளம். வயசு முப்பத்திநாலு. கல்யாணமாயிடுச்சி. நர்மதாவும் நானும் லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். உமேஷ்னு ஒரே ஒரு பையன். செயின்ட் பேட்ரிக்ஸ்ல நாலாவது படிக்கிறான். பெஸண்ட் நகர்ல சொந்த பிளாட்ஸ்ல இருக்கேன். டு வீலர் வெச்சிருக்கேன். கார் வாங்க லோன் போட்டிருக்கேன். சண்டே முழுக்க குடும்பத்தோட ஜாலியா ஊர் சுத்துவேன். டி.வி. பிடிக்காது. இங்கிலீஷ் படம் மட்டும்தான் போவோம். நிறைய படிப்பேன். வீட்ல ஒரு குட்டி லைப்ரரி வெச்சிருக்கேன். என்பையனுக்காக செகண்ட் ஹாண்ட்ல ஒரு பர்சனல் கம்ப்யூட்டர் வாங்கிக் கொடுத்திருக்கேன். அவனை பெரிய கம்ப்யூட்டர் எஞ்ஜினியராக்கணும்னு எங்களுக்கு ஆசை. என் பர்சனல் மேட்டர் சொல்லி போரடிக்கிறேனா டாக்டர்?"

"நோ, நோ, சொல்லுங்க."

"இப்ப கொஞ்ச நாளா எனக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கு டாக்டர். பேங்க்ல பேனா ஓசி வாங்கி எழுதிட்டு என் பாக்கெட்ல செருகிட்டு வந்துடறேன். இதுவரைக்கும் நாலு ஹெல் மட்டைத் தொலைச்சுட்டேன். சொன்னாக் கேவலம். ஒருநாள் பைக்ல ஆபீஸ் போய்ட்டு பஸ் பிடிச்சி வீட்டுக்கு வந்தேன். ஆபீஸ்ல தப்பான லெட்ஜர்ல எழுதிடறேன். என் வீட்டு ஃபோன் நம்பரே ஒரு தடவை எவ்வளவு முயற்சி செஞ்சும் நினைவுக்கு வராம டைரி எடுத்துப் பார்க்க வேண்டியதாப்போச்சு."

"சமீபத்தில் உடம்பு சரியில்லாம இருந்து ஏதாச்சும் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டீங்களா சந்திரன்?"

"இல்லை சார்."

"சின்னதா ஏதாச்சும் ஆக்சிடெண்ட்?"

"எதுவுமில்லை."

"பெரிசா ஏதாச்சும் துக்கம்?"

"துக்கம்னு சொல்ல முடியாது டாக்டர். குழப்பம்னு சொல்லலாம். எனக்கு இப்ப இந்த ஞாபக மறதி கூடப் பெரிய பிரச்சனை இல்லை. என்னோட இந்தக் குழப்பத்துக்கு விடை தெரிஞ்சாப் போதும்."

"என்ன குழப்பம்?"

"என் பொண்டாட்டி நல்லவளா? இல்லை கெட்டவளா? இதான் டாக்டர் என் குழப்பம். இந்த சந்தேகம் என் மனசுல வந்ததிலேர்ந்து என்னால எதுலயும் கான்சன்ட்ரேட் செய்ய முடியலை டாக்டர். தூக்கம் வரல்லை. டென்ஷனா இருக்கு."

"எதனால திடீர்னு உங்க மனைவியைச் சந்தேகப்படறீங்க?"

"திடீர்னு இல்லை டாக்டர். அன்னிக்கு ஒருநாள் தலைவலிக்குதுன்னு லீவு போட்டுட்டு ஆபீஸ்லேர்ந்து சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பினேன். வீடு பூட்டியிருந்திச்சி. ரொம்ப லேட்டா வந்தாள். 'எங்க போனேன்னு' கேட்டேன். 'நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோயிலுக்குப்போகப் போறேன்னு காலையே உங்ககிட்டே சொன்னேனே, மறந்துட்டீங்களா?'ன்னு கேட்டா."

"சரி."

"என்ன சரி? அவ அப்படிச் சொன்னதா எனக்கு ஞாபகமே இல்லை."

"உங்களுக்குத்தான் கொஞ்ச நாளா..."

"கரெக்ட். எனக்கு ஞாபக மறதி இருக்கிறதால அவ சொல்லி நான்தான் மறந்திருப்பேன்னு என்னையே சமாதானப் படுத்திக்கிட்டேன்... அப்புறம் ஒருநாள் அயர்னிங்காக கொடுக்க சில்லறை இல்லைன்னு அவ ஹேண்ட் பேக்கில தேடினேன். அப்போ ரெண்டு சினிமா டிக்கெட் கிடைச்சது டாக்டர். என்னன்னு கேட்டதுக்கு போன வாரம் சிங்கப்பூர்லேர்ந்து வந்து நாலு நாள் தங்கிட்டுப்போன அவ தம்பியோட கிஷ்கிந்தா, ஷாப்பிங்னு சுத்தினப்போ டைட்டானிக் போனதா சொன்னா. தம்பியோட சினிமாவுக்குப் போனதை என்கிட்ட அன்னிக்கே சொன்னாளாம். நான்தான் மறந்திட்டேனாம்."

"அந்தத் தம்பியைக் கேட்டீங்களா?"

"அவன் திரும்ப சிங்கப்பூர் போயிட்டான். மெனக்கெட்டு ஃபோன் செஞ்சு சினிமாவுக்குப் போனீங்களான்னு விசாரிக்க சங்கடமா இருந்துச்சு. வழக்கம்போல நான்தான் மறந்திருப்பேன்னு சமாதானப்படுத்திக்கிட்டேன்."

"இதோ பாருங்க சந்திரன், இந்த சந்தேகம் நாமா வளர்த்துக்கற ஒரு வியாதி. இது மனசுல வந்துட்டா நாம சந்தேகப்படற நபர். சாதாரணமா சிரிச்சாக்கூட மனசு வேற ஒரு அர்த்தம் கற்பிச்சுக்கும்."

"கொஞ்சம் இருங்க டாக்டர். நான் இன்னும் சொல்லி முடிக்கலை. பத்து நாளைக்கு முன்னாடி பீரோல என் கூலிங் கிளாஸைத் தேடினேன். அப்போ அவ புடவை அடுக்குக்கு அடியில ஒரு பாக்கெட் கிடைச்சது."

"என்ன பாக்கெட்?"

"காண்டம் பாக்கெட். அஞ்சி கொண்ட பாக்கெட்ல நாலு மட்டும் இருந்தது."

"மை காட்!"

"எனக்கு எவ்வளவு அதிர்ச்சியா இருந்திருக்கும். கேட்டுட்டேன். என்ன சொன்னா தெரியுமா? 'என்னங்க இவ்வளவு மறதியா உங்களுக்கு? ரெண்டு வருஷம் முன்னாடி சும்மா உபயோகிச்சுப் பார்க்கலாமேன்னு நீங்கதானே வாங்கிட்டு வந்தீங்க? ஒண்ணே ஒண்ணு உபயோகிச்சுட்டு பிடிக்கலைன்னு நீங்கதானே வெச்சீங்க'ன்னா."

"அப்படி எதுவும் உங்களுக்கு ஞாபகம் இல்லையா?"

"ஞாபகம் உண்டு டாக்டர். எனக்கு என்ன எல்லாமே மறந்துபோகுது. அவ சொன்னது உண்மைதான். நான் வாங்கிட்டு வந்ததும், எனக்கு பிடிக்காமல் போனதும் உண்மைதான்."

"அப்புறம் என்ன?"

"ஆனா மறுநாளே நான் அதை குப்பைத் தொட்டில வீசிட்டதா ஞாபகம் டாக்டர்!"

"மறுநாள் குப்பைத் தொட்டில வீசணும்னு நினைச்சி, ஒளிச்சி வெச்சிருப்பீங்க. அப்புறம் மறந்திருக்கலாம். இப்ப உங்க மனசுல சந்தேகம் இருக்கிறதால நீங்க குப்பைத் தொட்டில வீசிட்டதா உங்க மனசு ப்ளே பண்ண வாய்ப்பிருக்கு சந்திரன்."

"அப்படித்தான் நானும் சமாதானப் படுத்திக்க நினைச்சேன் டாக்டர். ஆபீஸ்ல இதைப் பத்தியே யோசிச்சிட்டிருந்தப்போ ஒரு ஐடியா! இப்ப கிடைச்ச பாக்கெட்ல தயாரிப்பு தேதி என்ன போட்டிருக்காங்கன்னு பார்த்தா உண்மை தெரிஞ்சிடுமே. அவ சொன்னது உண்மைன்னா ரெண்டு வருஷத்துக்கு முந்தைய வருஷம்தானே பாக்கெட்ல போட்டிருக்கும்!"

"உங்க பிரெய்ன் பிரிலியண்டா இருக்கு." என்று கூறிய டாக்டரை சந்திரன் அடுத்ததாக கூறிய வார்த்தைகள் தூக்கிவாரிப் போட்டன.

**(அடுத்த வாரமும் வரும்)**


○ உடைந்த இரவு ○ முள் நிலவு
○ டிசம்பர் பௌர்ணமி.....

**ராஜேஸ்குமாரின்**

*மூன்று தொடர்களும் அமோக வரவேற்பைப் பெற்ற முத்தான தொடர்கள்*

**அடுத்த முத்து...?**

**கையில் சிக்கிய மின்னல்**

துப்பறியும் தொடர்

*அடுத்த வாரம் அமோக ஆரம்பம்*

*பிரதிக்கு முந்துங்கள்!*


**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**08**

# அரங்கம் அந்தரங்கம்



**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

## கவியரசு கண்ணதாசன்

சந்திர சூரியனுக்காக அவர்கள் தங்கள் கொள்கையை விட முடியுமா?

ஆகவே, அவர்களுக்காக இவர் தனது பக்தியைக் கைவிட்டார்

கையில் இருந்து ஜெபமாலை நழுவிற்று; புரிகிறதோ இல்லையோ கார்ல் மார்க்ஸின் புத்தகம் குடியேறிற்று.

தானும் அரசியல்வாதிதான் என்று மேடையேறினார்; பேச ஆரம்பித்தார்.

அவர் எப்போது பேச ஆரம்பித்தாலும், "மனிதன் ஏன் பிறக்கிறான்?" என்றுதான் ஆரம்பிப்பார்.

பெரிய விஷயங்களைச் சொல்லப் போகிறார் என்று ஜனங்கள் எதிர்பார்க்கும் போது, "உலகத்திலேயே நான் தான் யோக்கியன்" என்று முடிப்பார்.

படத்திலே அவர் வில்லன் வேஷம் போட்டாலும், நல்லவனாகத்தான் நடிப்பார்: அரசியலிலே நல்லவனாகத் தோற்றமளித்தாலும், வில்லனாகத்தான் இருப்பார்.

அரசியல் மூலம் சினிமாவுக்குக் கூட்டம் சேர்ப்பது; சினிமா மூலம் அரசியல் இலாபம் தேடுவது இரண்டிலும் அவர் வல்லவர்.

ஒரு சமயம் அவர் கட்சிக்காரர்கள் நம்படத்தைப் பார்ப்பதைவிட, கட்சிக்குள்ளேயே நமக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கினால் - என்ன என்று யோசித்தார்.

ஆட்களைப் பிடித்தார்; போஸ்டர்கள் எழுதுவதற்கு ஆர்டர் கொடுத்தார்; தன் பெயரில் வீரபராக் கிரமசங்கங்கள் பலவற்றை ஆரம்பித்துவிட்டார்.

வெட்டாத கத்தியும், தடுக்காத கேடயமுமே அந்தச் சங்கங்களின் சின்னம்.

ஒவ்வொரு படமும் வெளிவரும்போது, தானே டிக்கட்டுகளை ரிசர்வ் செய்து சங்கத்தின் உறுப்பினர்களுக்குக் கொடுத்து விடுவார்.

மற்ற நடிகர்களின் படமாக இருந்தால், அதைக் கேலி செய்வதற்கும், வெளியே வரும்போது, 'படம், மட்டம்' என்று சொல்வதற்கும், தானே டிக்கட் வாங்கிக் கொடுத்து விடுவார்.

தன் படமாக இருந்தால் கைதட்டி விசில் அடிப்பதற்கும், "படம் பிரமாதம்" என்று சொல்வதற்கும் ஆள் அனுப்புவார்.

அவரது சேனை வீரர்கள் அதிகமாகக் கையாளும் ஆயுதம், சாணம்!

எதிரிகளின் போஸ்டர்களில் குறி பார்த்துச் சாணியடிப்பதில் அவர்களுக்கு ஈடு இணை கிடையாது.

அவரது கட்சியின் தலைவர்கள் என்னதான் மேதைகளாக இருந்தாலும், திட்டம் போடுவதில் அவரை வெல்ல முடியவில்லை.

ஆகவே கட்சித் தலைவரே தன்னை நம்பி வாழ வேண்டிய நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டார்.

இந்திய ஜனநாயகத்தில் எந்தத் தகுதியும் இல்லாமல், யாரும், எந்தப் பதவியையும் அடைய முடியும்!

ஜனநாயகம் கொடுத்த அந்தச் சலுகையை யோக்கியர்கள் பயன்படுத்திக் கொண்டதை விட, அயோக்கியர்கள் பயன்படுத்திக் கொள்வதே அதிகம்.

நடிகர் சந்திரசூரியன் அயோக்கியரல்ல.

கிடைக்கின்ற சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் ராஜ தந்திரத்தில் வல்லவர்.

சொல்லப்போனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது மட்டுமல்லாது, சில நேரங்களில் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வதிலும் அவர் கெட்டிக்காரர்.

பத்து வருஷம் ஜெயிலுக்குப் போன தியாகிகளை ஏறி மிதித்துக் கொண்டு, மக்கள் சந்திரசூரியனைத் தொட்டுப் பார்க்க விரும்புவார்கள் என்றால், அது ஒன்றும் சாதாரணத் திறமை இல்லையே!

'மக்கள் முட்டாள்கள்' என்று ஒரு வரியில் சொல்லிவிடுவது சுலபம். ஆனால் பல லட்சம் மக்களை முட்டாள்கள் ஆக்குகிற சக்தி ஒருவனுக்கு இருக்கிறது என்றால், அதை வியப்போடு பார்த்துப் பாராட்ட வேண்டியது முக்கியமல்லவா!

ஆயிரம் ரூபாய் சம்பாதித்தால் ஐம்பது ரூபாயாவது அவர் தர்மம் செய்வார்.

ஆனால் அந்த ஐம்பது ரூபாய் தர்மத்திற்கு, ஐயாயிரம் ரூபாய் விளம்பரம் கிடைக்கிறதா என்று பார்த்துத்தான் செய்வார்.

அவரது குணாதிசயங்கள் விசித்திரமானவை.

தன்னை விட்டு விலகி நிற்பவனைக் கட்டியணைத்துப் பக்கத்தில் கொண்டு வந்து விடுவார்.

அவன் பக்கத்தில் வந்ததும் எட்டி உதைத்து அவமானப்படுத்தி விடுவார்.

"அவரது இளமையின ரகசியம் என்ன?" என்று பல முறை நிருபர்கள் அவரைக் கேட்டதுண்டு.

அதற்கு அவர் சொன்ன இரகசியம் வேறு; உண்மை இரகசியம் வேறு.

அந்த மாபெரும் தலைவரை நோக்கித் தலைவர் தங்கசாமி வந்தபோது, அந்த ரகசியம் தான் அரங்கேறிக் கொண்டிருந்தது.

ரோமாபுரி மன்னன் சாய்ந்திருப்பது போல் அவர் தனது மஞ்சத்தில் சாய்ந்திருந்தார்.

சுற்றிலும் பதினாறு முதல் இருபது வரை வயதுடைய இளம் பெண்கள் அமர்ந்திருந்தார்கள்.

காலை ஒருத்தி அமுக்க, கையை ஒருத்தி பிடிக்க, சேலையை திருத்தி திரட்டி விட்டபடி அவரது குறும்பை ரசிக்க- உல்லாசக் களியாட்டத்தில் உன்னதத் தலைவர் ஈடுபட்டிருந்தார்.

அவர் இருந்த அறைகள் யாரும் நுழைய முடியாது.

யாரும் வருகிறார்கள் என்றால் கீழே இருந்து ஒரு அறிவிப்பு வரும்.

அவரது தலைமாட்டிலுள்ள ரகசிய டெலிபோன், அவருக்கு மட்டும் கேட்கும்படி மணியடிக்கும்.

உடனே அவர் முன்பக்கத்து அறைக்கு வந்துவிடுவார்.

முன்பு அவர் இருந்த அறை, ரோமாபுரி அரண்மனை. இப்போது வந்திருக்கும் அறை வெள்ளை மாளிகை.

விவரம் தெரிந்த தலைவர் தங்கசாமி- வெள்ளை மாளிகையிலே உட்கார்ந்திருந்தார்.

அரண்மனைக்குள் உட்கார்ந்திருக்கும் பெண்களில், சிலர் அவருக்கும் அறிமுகமானவர்கள் தான்.

ஆனால் அவர் அதைக் காட்டிக் கொள்ள மாட்டார்.

**(அந்தரங்கம் வரும்)**



படிப்பகம்

www.padippakam.com

# காணாமல் போனவர்கள்

'கடவுளே...! இண்டைக்காவது சிவாவ வைச்சிருக்கிற இடம் தெரியுமா...?' காயத்திரி மனதுக்குள் நல்லூர் முருகனை நினைத்துக்கொண்டே அந்தக் கட்சி அலுவலகத்துக்குள் நுழைகிறாள். அவளைப்போலவே அங்கு பலர் நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்.

இருக்கைகள் நிறைந்துகொண்டதால் காயத்திரி ஒரு மூலையில் போய் நின்றுகொண்டாள். கையிலிருந்த பிரியா வேறு அழுதுகொண்டிருந்தாள்.

'அவள்தான் என்ன செய்வாள்...? பாவம். காலையில இருந்தே நித்திரையும் இல்லை. வெறும் பாலோடதான் கிடக்கிறாள். கடவுளே...! ஏன் எங்களுக்கு இப்பிடி ஒரு சோதனை...? 'நிலமை நல்லா இருக்கு, பாதுகாப்பா இருக்கலாம் எண்டுதானே யாழ்ப்பாணம் வந்தனாங்கள்... இங்கு வந்ததாலதானே சிவாவ பிடிச்சுக்கொண்டு போய்ட்டாங்க. எங்க வைச்சிருக்கிறாங்களோ தெரியாது...' சிவாவை நினைக்க காயத்திரிக்கு அழுகை அழுகையாக வந்தது.

'அண்டைக்கு சிவாவ பிடிச்சுக்கொண்டு போகைக்க நானும் கூடப்போயிருக்க வேணும். "விசாரிச்சுப்போட்டு உடன் கொண்டு வந்து விடுறம்," எண்டுதானே சொன்னவங்கள். இண்டைக்கு மூண்டு மாசமாச்சுது. இன்னும் ஒரு தகவலும் இல்லை...' சிவாவின் நினைவில் கண்கள் கலங்க கையிலிருந்த பிரியாவைப் பார்க்கிறாள் காயத்திரி. பிரியா தூங்கிப்போய் நீண்ட நேரமாகிவிட்டிருந்தது.

"பிள்ளை ஏன் நிக்கிறீர்...? இதில இருமன்...!" யாரோ ஒரு அம்மாவின் குரல் கேட்டு நிமிர்ந்தாள் காயத்திரி. அந்த வயசான அம்மாவை அப்பொழுதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது. இந்தக்கட்சி அலுவலகத்தில்தான் அடிக்கடி பார்த்திருக்கிறாள். அருகில் போய் அமர்ந்து கொள்கிறாள்.

"என்னம்மா உங்கிட பிள்ளையப்பற்றி ஏதாவது தகவல் கிடைச்சுதா.....?" பல மாதங்களுக்கு முன் காணாமல் போன தன் மகனைப்பற்றி அந்த அம்மா கூறியிருந்த ஞாபகத்தில் காயத்திரி கேட்டாள்.

"அத ஏன் பிள்ளை கேக்கிறாய்...? என்ர பிள்ளைய பிடிச்சுக்கொண்டு போய் ஆறு மாசமாச்சுது. நானும் தேடாத இடமில்லை. ஒரு தகவலும் இல்லை. இண்டைக்கு இந்த ஐயா எங்கட கடிதத்தை கொண்டு போய் ஜனாதிபதியோட நேர கதைக்கப்போறாராம். அதுதான் பிள்ளை ஒரு கடிதம் குடுப்பம் எண்டு காலையில இருந்து காத்திருக்கிறன்..." கண்கள் கலங்க அந்த அம்மா சொன்னபோது, 'கடவுளே...! என்னைப்போல- இந்த அம்மாவைப்போல இன்னும் எத்தனை பேர் காத்திருக்கிறார்கள் இங்கே....?' காயத்திரி வேதனையோடு மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

"அது சரி பிள்ளை உன்ர புருசனப்பற்றி ஏதாவது தெரிஞ்சுதா...?" கண்களைத் துடைத்தபடி அந்த அம்மா கேட்டாள். "இல்லை அம்மா அதுதான் நானும் ஒரு கடிதம் குடுக்கலாம் எண்டு வந்தனான்..." தூக்கத்தில் இருக்கிற பிரியா முழித்துவிடாதபடி மெதுவாகச் சொன்னாள் காயத்திரி. "பிள்ளை அடுத்தது நான்தான்... அப்ப நான் போய் குடுத்து கதைச்சிட்டு வாறன் பிள்ளை.." அந்த அம்மா சொல்லிக் கொண்டே அவசரமாக எழுந்து உள்ளே போகிறாள்.

காயத்திரி தனது நிலமையை நினைத்து கண்கள் கலங்க குழந்தை பிரியாவைப்பார்க்கிறாள். பிரியா நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். காயத்திரி ஏதோ நினைத்தவளாக கையிலிருந்த கடிதத்தை ஒரு முறை வாசித்துப்பார்க்கிறாள். 'அவவும் ஒரு பொம்பிள தானே... இந்தக்கடிதத்தை பாத்தாவது என்ர நிலமைய புரிஞ்சுகொள்ளுவாதானே...' என்று தனக்குள் நினைத்துக் கொண்டே கடிதத்தை உள்ளே வைக்கிறாள். நேரமாகிக்கொண்டிருக்கிறது. உள்ளே போன அம்மாவைக்காணவில்லை. சிலர் அசதியால் அலுத்துக்கொள்கிறார்கள், சிலர் தமக்குள்ளே புறுபுறுத்துக் கொள்கிறார்கள்.

உள்ளே போன அம்மா வருகிறாள். முகத்திலே ஒரு மாற்றம். "பிள்ளை, ஐயா ஜனாதிபதியோடயும் ஆமிக்கொமாண்டரோடயும் கதைச்சு எப்பிடியும் என்ர பிள்ளையக் கண்டுபிடிச்சு தாறதா சொல்லியிருக்கிறார். நீயும் பயப்பிடாம கதை பிள்ளை. ஐயா எப்பிடியும் உன்ர புருசன கண்டு பிடிச்சுத்தருவார். சரி பிள்ளை... அப்ப நான் வாறன்!" என்றபடியே அந்த அம்மா காயத்திரியின் பதிலுக்குக்காத்திராமல் அங்கிருந்து போகிறாள்.

காயத்திரி மெதுவாக உள்ளே போக ஏ.சீ குளிர் சில்லென்று அவள்மீது பரவியது. தடுமாற்றத்துடன் 'எட்டிப்பார்க்கிறாள். உள்ளே ஐயா யாருடனோ ஃபோனில் கதைத்துக்கொண்டிருக்கிறார். கதைவைத் தட்டாமல் வந்துவிட்டோமோ, என்று நினைத்து தயங்கியபடியே வாசலில் நிற்கிறாள்.

காயத்திரியைக்கண்டவர் ஃபோனில் கதைத்தபடியே அவளை உள்ளே வந்து இருக்கும்படி கையால் காட்டுகிறார். காயத்திரி மெதுவாக வந்து இருக்கையில் அமர்கிறாள். இனம் புரியாத பயம் உடம்பெல்லாம் பரவ அந்த அறையை நோட்டமிடுகிறாள். மறைந்த தலைவர்கள் அங்கே சுவர்களில் மாலையுடன் தொங்கிக்கொண்டிருந்தார்கள்.

"சரி பிள்ளை சொல்லுங்கோ.." திடீரென அவரது குரல் கேட்டு திடுக்கிட்டுப்போன காயத்திரி, "அது வந்து ஐயா... என்ர புருசன மூண்டுமாசத்துக்கு முதல் ஆமி பிடிச்சுக்கொண்டு போய்ட்டுது. அதுதான் நீங்க ஜனாதிபதியோட கதைக்கைக்க இந்தக் கடிதத்தையும் காட்டிக் கதைச்சு என்ர அவர கண்டுபிடிச்சுத் தரவேணும்....!" கண்களைத் துடைத்தபடியே கடிதத்தை அவரிடம் கொடுக்கிறாள்.

மௌனமாக கடிதத்தைப் பார்த்துவிட்டு "ஓ... நீர் சிவா மாஸ்ரற்ர வைபா...? பிள்ளை நீர் ஒண்டுக்கும் கவலைப்படாதையும். ஒரு மாஸ்ரருக்கே இந்த நிலமை எண்டா பிள்ளைகளுக்கு எப்பிடிப்பாதுகாப்பு...? இத நான் ஜனாதிபதியோடயும், இந்தப் பகுதி ஆமிக்கொமாண்டரோடயும் கதைக்கிறன். எப்பிடியும் சிவா மாஸ்ரர வைச்சிருக்கிற இடத்தக்கண்டு பிடிச்சிடுவன். நீர் கவலைப் படாம போய்ட்டு வாரும் பிள்ளை..." அவர் சொன்ன வார்த்தைகள் காயத்திரிக்கு ஆறுதலாக இருந்தன.

"ஐயா என்ர சிவாவ கண்டுபிடிச்சுக் குடுத்திட்டீங்க எண்டா, இந்த உதவிய நான் எண்டைக்கும் மறக்க மாட்டன்..." காயத்திரி கண்ணீருடன் சொன்னாள்.

"பிள்ளை இதுக்கெல்லாம் எதுக்கு நன்றி. இது எங்கிட கடமைதானே. நீர் பயப்பிடாமப் போய்ட்டு வாரும் பிள்ளை..." அவர் ஃபோனைக் கையில் எடுத்தவாறே சொல்ல காயத்திரி 'சரி ஐயா அப்ப நான் போய்ட்டு வாறன்...." என்றபடியே அங்கிருந்து வெளியே வருகிறாள்.

காயத்திரி வெளியே வந்த சில நிமிடங்களில் அந்த அமைச்சர் தன் சகாவிடம்; 'சீ.... இதையெல்லாம் கொண்டுபோய் அந்த அம்மாவோட கதைச்சா என்ர அமைச்சர் பதவியையும் பறிச்சுப்போடுவா.. அவவோட கதைக்க சந்தர்ப்பம் கிடைக்கிறதே கஸ்ரம். கிடைச்ச சந்தர்ப்பத்தில இதக்கதைச்சா அவ அப்செட் ஆமிடுவா... முதல்ல பிளைற் ஓடுறதப்பற்றியும், சினிமாத்தியேட்டர் திறக்கிறதப்பற்றியும் கதைப்பம்... இதப்பிறகு பாப்பம்...' என்று தனக்குள் நினைத்தபடியே காயத்திரியின் கடிதத்தை காணாமல் போனவர்களின் கடிதங்களுடன் மேசைக்கு அடியில் எறிகிறார். அங்கே காயத்திரி அமைச்சர் தனது கணவனை எப்படியும் மீட்டுத்தருவார் என்ற நம்பிக்கையில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள். கையிலிருந்த பிரியா மீண்டும் அழ ஆரம்பிக்கிறாள்.



நெடுந்தீவு குகன்-கனடா.

# சாபம்



அவன் வலியினால் துடித்துக் கொண்டிருந்தான். வெயில் வேறு அதை இன்னும் அதிகரித்துக் கொண்டிருந்ததில் பயங்கர எரிச்சல் கிளம்பியது.

"என்ன தம்பி சாதாரண ஸேப்டி பின் கிழித்த காயமா இப்பிடி மாறியிருக்கிறதென்கிறாய், நன்றாக நினைவுபடுத்திப்பாரு தம்பி வேறேதாவதாக இருக்கப்போய் நிலமை மாறிவிடலாம்!" டாக்டர் இப்படி கூறியதும் அவனுள் அவள் நிழலாடினாள்.

"தெய்வம் பார்த்துக் கொண்டிருக்கு. உன்னைச் சும்மா விடாது!" என்ற அவளது வார்த்தை தெளிவாக இப்பவும் அவனுக்கு கேட்டது.

அவள் அழகான-கவர்ச்சியான பெண்.

ஜெ.சூரியன்

அவன் சுற்றி சுற்றி வந்தான். அவள் சுழலவேயில்லை. கேட்டான்- செவியில் விழுத்தவேயில்லை. அந்தப் பாராமுகம், எடுத்தெறிந்து பேசும் வீராப்பு. அவனை அவள் மேல் இன்னும், இன்னும் அதிகமாக ஈர்ப்பதாயிற்று. கோயிலுக்குப் போய்வரும் நாட்களைக் குறித்துவைத்துக் கொண்டான். நேரத்தைக் கணித்தான். ஒதுக்குப்புறமான கோயில். ஒரு நாள் சந்தர்ப்பம் அமைந்தது. அவளையறியாமல் எப்போதும் போல் தொடர்ந்துவந்தான். மறைவாக இருந்தான். இருந்த இரண்டொருவரும் போய் விட்டனர். அவள் மட்டும் தனியாக ஏதோ தேவாரத்தை உச்சரித்தவளாக கண் மூடி நின்றிருந்தாள். பின்னால் வந்து நின்றான்.

ஒரு கணத்தாமதம்தான், அப்படியே இரு கைகளாலும் பின்புறமாக இழுத்து தன் நெஞ்சோடு சாய்த்தபோது, திகைத்து விழிகளைத் திறந்து பார்த்தாள். பயத்தில் கூச்சல் போடவும் முடியாமல் மூச்சுத் திணறினாள்.

"விடு,விடு என்னை ஒண்ணும் செய்யாதே" என்றவளை இன்னும் இறுக்கியதில் தாவணி சரிந்தது. அவள் கெஞ்சி முடியாது போக அழுகையூடே கத்தினாள். "பாவீ! தெய்வம் பார்த்துக்கொண்டிருக்கு, உன்னை சும்மா விடாது!" என்று,

"அது கல்லு, பார்த்துக் கொண்டே தானிருக்கும்-வராது. அதுதான் தெய்வம்!" என அட்டகாசமாக சிரித்தவண்ணம் அவளை தன்னை நோக்கி வேகமாக திருப்பினான். அந்த வேகத்தில் அவளது சட்டையில் கழன்று குத்திட்டு நின்ற சட்டைப்பின் அவன் விரலை பதம் பார்த்துவிட்டது.

"ஆ" என்ற அலறலுடன் சாந்தன் தனது பிடியை இழக்கினான். உதறிவிட்டு பாய்ந்தோடினாள் அவள். அந்த கீறலால் அப்போது வடிந்துவிட்ட இரத்தத்தைப் பார்த்து அவன் பயந்தே போனான். சாதாரணமாகத்தான் அவன் நினைத்திருந்தான். ஆனால் இப்படி யாகுமென்று யார் கண்டது?

"என்ன தம்பி யோசிக்கிறதைப்பார்த்தால்... "என வார்த்தையை முடிக்காமல் இழுத்து நின்ற டாக்டரிடம் "இல்லை. இல்லை டாக்டர். இது சாதாரண ஸேப்டி பின் காயம்தான். எனக்கு நன்கு நினைவிருக்கு" என்று அவசரமாக கூறினான்.

"எதுவானாலும் இதுக்கு மேலை இதை வைச்சிருந்தால், அது சிலவேளை முழுக்கையையுமே இழக்க வேண்டிவரலாம். ஆகவே விரலை எடுப்பதுதான் நல்லது!"

"டாக்டர்! என்ன... என்ன சொல்றீங்கள்?" என்றான் சாந்தன் அதிர்ந்து போனவனாக.

"சாந்தன், இது என் வாழ்நாளின் அநுபவத்தில் புதுமையான கேஸ். என்னவென்று சொல்ல முடியவில்லை. நாடி நரம்புகளில் விஷக்கிருமிகள் பரவிக் கொண்டிருக்கின்றன. சாதாரண பின்னென்கிறபோது உதைக்கத்தான் செய்கிறது, ஆனாலும் மருத்துவ ரீதியாக பாதிப்பு பலமாக இருக்கிறது. முளையிலேயே கிள்ளிவிடணும், இல்லை முழுக்கையையுமே பாதித்து விடலாம்." என்றார் முடிவாக.

சாதாரண டாக்டரல்ல. அறுவைச் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றவரது திறமையில் நம்பிக்கையிழக்க எந்த வாய்ப்புமேயில்லை. அவனது நிலமை, வேதனை, தாளமுடியாத வலியின் இழுப்பு அதைத்தான் ஊர்ஜிதப்படுத்தியது. அதற்கும் மேலாய்- அந்த கல்லான தெய்வம் பார்த்துக் கொண்டிருந்தது ஞாபகத்தில் உறைத்தது.

வேறு வழியில்லாத நிலையில் சாந்தன் விரலை எடுக்க ஒப்புக்கொண்டான். "தெய்வம் பார்த்துக்கொண்டிருக்கிறது. சும்மா விடாது. எப்படியும் தண்டிக்கும். அது இப்பவும் நடக்கலாம். எப்பவும் நடக்கலாம். ஆனால் எப்பவோ நடத்தியே தீரும்!" என அவனது வாய் அவனையுமறியாமல் மெல்ல முணு முணுத்தது.

# எது அழகு

புறோக்கர் மணியண்ணை கொண்டுவந்த அந்தச் செய்தியை கேட்டது முதல் அங்குள்ள ஒருவருக்குமே இருப்புக் கொள்ளவில்லை. குறிப்பாக வினிதாவின் நெஞ்சுக்குள் ஒரு நெருடல். இன்று மாலை வினிதாவை பெண் பார்க்க வருவதாக ஏற்பாடாகி இருந்தது. அதற்காக அவளுடைய அப்பா பலவித ஏற்பாடுகளைச் செய்து இருந்தார். நல்ல தின்பண்டங்களை நேற்றே அம்மா தயாரித்து வைத்திருந்தாள். அவளுக்கு வேண்டிய புடவை அலங்காரப்பொருட்கள்கூட தயாராக இருந்தது. தன் ஒரே பெண்ணுக்கு நல்ல இடமாய் அமைய வேண்டும் என்று அம்மா வேண்டாத தெய்வம் இல்லை.

இப்போது திடீரென்று "இன்று பெண் பார்க்க வரமாட்டார்களாம். ஏற்கெனவே காலையிலே மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்து விட்டாராம்." என்று மணியண்ணை கூறியபோது எல்லோருக்குமே அதிர்ச்சியாக இருந்தது. இன்று அதிகாலை நேரத்துடனே நித்திரையால் எழுந்த வினிதா விளக்குமாறை எடுத்துக்கொண்டு முற்றத்துக்கு வந்தாள்.

முற்றத்திலே ஒரே மாஞ்சருகாக இருந்தது. அதைப் பெருக்கிக் கொண்டு இருந்த போது, யாரோ ஒருவாட்டசாட்டமான இளைஞன் வாசலில் வந்து நின்றான். அவளுடைய தகப்பனை கேட்டு விசாரித்தான்.

"அப்பா காலையிலேயே வெளியிலை போய் விட்டார்!" என்று அவள் பதில் கூறியபோது, பின்பு அவரைச் சந்திப்பதாக கூறிவிட்டு போய்விட்டான். இப்போது தான் அவளுக்கு உண்மை புரிந்தது.

காலையிலே நித்திரையால் எழுந்த கோலத்துடனேயே அவனைச் சந்திக்க நேர்ந்ததை நினைக்கும்போது அவளுடைய மனசுக்கு சங்கடமாக இருந்தது.



"பட்டுப்புடவை அலங்காரங்களோடை ஒரு பொண்ணைப் பார்த்தே ஆயிரம் குறை கண்டு பிடிக்கிறவர்கள். மத்தியிலை... சரிசரி இனி என்ன- வேறை மாப்பிள்ளை பார்க்க வேண்டியதுதான்!" என்று அப்பா அலுத்துக் கொண்டார்.

இரு தினங்களின்பின் ஒரு கடிதம்வந்தது. அதைப் பிரித்தபோது, "அன்புள்ள மாமா மாமிக்கு, பெண் பார்க்க வராததை இட்டு முதலில் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்கள் பெண்ணை நான் வாழ்க்கை பூராவும் பட்டுப் புடவையிலும், தங்கநகையிலுமா பார்த்துக் கொண்டு இருக்கப் போகின்றேன்? சாதாரண கோலத்திலேயே உங்கள் பெண்ணை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இனி திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யலாம்!" சுருக்கமாக எழுதி இருந்தது. எல்லோர் முகங்களிலும் சந்தோசம்.

எஸ்.உத்திரன்

"பார்த்தியா வினி? உன்னை ஓர் அலங்கார பெண்ணாக பார்க்கிறவனைவிட, உன்ரை இயல்பான உண்மையான அழகைப் பார்த்து நேசிக்கிறவன் கிடைத்து இருக்கிறான். இதைவிட ஒரு பெண்ணுக்கு என்ன வேணும்? உண்மையிலே நீ அதிஷ்டசாலிதான்!" அவளுடைய தோழி தாரணி கூறியபோது அவள் பூரித்துப் போனாள்.

# சபலம்

கடந்த இரண்டு மாதங்களில் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்று ஆறேழு கல்யாணங்களுக்குப் போய் வந்தாச்சு.

அப்போதெல்லாம் கூட 'ட்ரிம்'மாய் இருக்கணும் என்று நினைக்காதவர், இன்றைக்கு ஊரிலிருந்து என் தங்கை வரப்போறாளென்று தெரிஞ்சவுடனே, அவசர அவசரமாய் லோஷன் தடவி கன்னத்துப் பச்சை தெரியும்படி பளிச்சென்று ஷேவ் பண்ணிக்கொண்டார்.

சபுலத்தைப் பார்த்தீங்களா?

இந்த இலட்சணத்தில...

வண்டி வருகிற நேரத்துக்கு ரயிலடியில் இருக்கணுமே என்று இவர் இடைகழியில் பாதணிகளைக் காலில் திணித்த சமயம்-

சம்மன் இல்லாமல் எட்டிப் பார்த்த சங்கரன்- பக்கத்து வீட்டுப் பையன்-இவருக்கு ரொம்ப வேண்டியவன், பளிச்சென்று கேட்டான்:

"என்ன மாமா, ஏதும் விசேஷமா? ஷேவ் கீவ் எல்லாம் பண்ணிக்கிட்டு ரொம்பத் தடபுடலா இருக்கீங்களே?"

பந்தடித்தாற்போல இவர் பதிலுக்கு:

"ஆமாண்டா சங்கரா... இவ தங்கை ஊரிலிருந்து வருகிறாளாம். இந்த நேரம் பார்த்து, நாம தாடியும் மீசையுமா இருந்தா, குடும்பத்திலேதான் ஏதோ சொல்ல முடியாத சங்கடம் போலிருக்குதென்று ஊகித்துக் கொண்டு வந்த மறுநாளே பறந்து கட்டிக்கிட்டுப் போயிடுவாள்.

அப்புறம் இவள் 'நாலு நாளைக்குச் சந்தோஷமா என் தங்கை தங்கிட்டு போகலாம் என்று வந்தா, உங்க பரதேசிக் கோலத்தைப் பார்த்து கால்ல கஞ்சியை ஊத்திகிட்டவ போல பதறியடிச்சுக்கொண்டு புறப்பட்டு போயிட்டா'ன்னு என்னைப் பிலு பிலுன்னு பிடிச்சுக்கக்கூடாதில்லையா? அதனாலதான் சஞ்சலமோ சங்கடமோ நம்ம மனசோடயே இருக்கட்டுமே என்று பளிச்சின்னு மழிச்சுக்கிட்டேன்!"

காது கொடுத்துக் கேட்டபோது வாழ்க்கையே குறுகி சின்னதாப் போச்சு எனக்கு!



வி.சுஜாதா


படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம் — யார் இவள்?



**அ**வன்
கவிஞன் இல்லை!
ஆனால்
கவிதை எழுதுகிறான்!
அதுதான்
எப்படி முடியும்?
அவன் காதலிக்கிறான்
அதனால் கவிஞனாகினான்!
காதல்
ஒவ்வொன்றையும்
கவித்துவமாக
நோக்க வைக்கிறது!
காதல்
ஒவ்வொருவரையும்
கவிஞராக்குகிறது!
அவன் தன்
முதல் கவிதையை
இப்படித்தான்
ஆரம்பித்தான்!
"அடி பெண்ணே!
நீ வலை விரிக்காமலேயே
வந்து விழுந்தவன் நான்!
நீ அம்பு எய்யாமலே
உன் முன்னால்
விழுந்து போனவன் நான்!"
எழுதிவிட்டு
பார்த்தபோது
அவனுக்குள்ளேயே
ஆச்சரிய மின்னல்!
அவளே ஒரு
கவிதை!
அதனால்-அவளை
நினைத்து
எதை எழுதினாலும்
கவிதைதான்!
"ஆகவே-என்
கவிதைகள்
கவிதை பற்றிய
கவிதைகள்!"
என்றெழுதினான்!
அவளின்
கவிதைகள்
விழிகளால் வடியும்!
அவளின்
கவிதைகள்
இதழ்களில் மலரும்!
அவளின்
கவிதைகள்
விரல்களில் தெறிக்கும்!
அவளின்
கவிதைகள்
விஷமமும் செய்யும்!

அவளின்
கவிதைகள்
விதியையும் மாற்றும்!
அவளின்
கவிதைகள்
மதியையும் மயக்கும்!
அவனும் மயங்கித்தான்
போயிருந்தான்!
"உன் முன்னால்
வருவதற்கு
நான் துணியாத
நாட்களில்
நிழல் போலத்தான்
தொடர்ந்திருக்கிறேன்!"
அப்போதெல்லாம்
உன் கூந்தலில்தான்
என் மனம்
கூடுகட்டியிருந்தது!
உன் கூந்தல்
அசைந்த போதெல்லாம்
என் மனதும்
இசைந்து ஆடியது!
நீ எனக்குள்
போதை ஊற்றினாய்
உனக்குத் தெரியாமலே!

நீ எனக்குள்
தீ மூட்டினாய்
உனக்குத் தெரியாமலே!
நீ எனக்குள்
சங்கமமானாய்
உனக்குத் தெரியாமலே!
இதனை
திருட்டு என்பதா?
இன்பத்தின்
திரட்டு என்பதா?
உன்னிடம் நான்
பேச விரும்பியதெல்லாம்
இதுதான்:
என்னை முள்ளாக
நினைத்தாலும்
முறித்துப் போடாதே!
ஒரு ஓரமாய்
வீசிவிட்டுப்போ!
உன்னை
பார்த்துக் கொண்டாவது
ஒதுங்கி இருக்கிறேன்!
என்னை
பூவாக நினைத்தால்,
எடுத்துக் கோர்த்து
மனதுக்கு மாலையாக
அணிந்து கொள்!
ஆமாம் கண்மணி
உன்னிடம் பேசாதபோது
பேச நினைத்ததெல்லாம்
இதுதான்!
உன்னைக் கண்டு
பேசியபின்னர்
பேச மறந்ததும்கூட

அதுதான்!
எழுதிய கவிதையை
எடுத்துச் சென்று
அவளது
விழி வெளிச்சத்தில்
விரித்துப் போட்டான்!
மோகன இதழ்களில்
முத்துப் புன்னகை!
நளின விழிகளில்
குளிர்ந்த பார்வை!
தரைநிலா அவனை
தாவி அணைத்தது!
'இத்தனை ஆசையா
யப்பா! யப்பா!'
தன்னை மறந்து
இறுக்கித் தழுவினாள்!

## ரசிகன் தருவது

"சொர்க்கம் நழுவி
என்மேல் சரிந்ததா?"
வியப்பு அவனுக்குள்
மின்னலாய் உதித்தது!
கவிதைக்கு
பொற்கிழி
பரிசாக கிடைப்பதுண்டு!
கவிதைக்கு
பொற் காசுகளும்
பரிசாக கிடைப்பதுண்டு!
இங்கே-அவனது
கவிதைக்கு
கவிதையே
பரிசாக கிடைத்தது!
கவிதையை
கவிதையால்
கொய்து விட்டான்!
இறுக்கி அவள்
தழுவியதில்
தேக எழில் யாவும்
அவன்-

தேகம் தனில் மோத
அவனுக்கு
தாகம் எடுத்தது!
கேட்காமல்
குறிப்பறிந்து
பரிமாறுவது கலை!
அவளுக்கு-அக்
கலை கை வந்தது!
தாகம் தணிக்க
மேகமாய்
இதழ் தந்தாள்!
மோகம் முற்றியதால்
அங்கொரு
மோக யுத்தம்
மூண்டு விட்டது!
கேட்டதெல்லாம்
கொடுத்தாள்!
அவனும்-அவள்
கேட்காமலேயே
கொடுத்தான்!
'இப்படியொரு
அதிசயமா
பெண்ணுக்குள்?'
அவன்
ஆச்சரியத்தில் மிதந்தான்!

இவள்
வானத்தில் இருந்து
பூமிக்கு
நழுவிய தேவதையோ?
மானோ, மயிலோ
மனிதப் பெண்ணோ?
வானத்து வரவான
வண்ண தேவதையோ?
யார் இவள்?"
என்று
மனம் வியக்க,
பார் புகழ் அழகியை
மார்புறத் தழுவினான்!
காதலில் விழ்ந்த
நெஞ்சம்
காமத்தில் மயங்கும்போது
செப்படி வித்தையாய்
மேற்படி வினா
மேலெழும்தான்!

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**
**மாதர் கொல் மாலும் என் நெஞ்சு"**
அதிகாரம்: 109. குறள்: 1081

## சிந்தியா பதில்கள்

✍ **மாகாண சபைத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் வழங்கிய தீர்ப்பு நெத்தியடி தானே?**
கு. யோகராஜன், கொழும்பு-05.
தமிழ்க் கட்சிகளுக்கும் சேர்த்தே விழுந்திருக்கிறது நெத்தியடி! சிலரை பலகாலம் ஏமாற்றலாம், பலரை சிலகாலம்தான் ஏமாற்றலாம்! முடியும்? அடிக்கடி கொள்கைகளையும் கூட்டுக்களையும் மாற்றிக்கொள்ளும் இந்திய அரசியல் கட்சிகளைவிட மோசமாகி விட்டன பல தமிழ்க் கட்சிகள்.

○●

★ **சமீபத்தில் நீங்கள் படித்து இரசித்த தமாஷ் கதை ஒன்றை தூக்கிப் போடுங்கள்?**
திருமதி எம். ஜெயராணி, யாழ்ப்பாணம்.
இந்தாருங்கள் பிடியுங்கள்!


கதாநாயகிகள்

ஒரு மிருக வைத்தியரிடம் ஒருவன் குதிரையோடு வந்து, "டாக்டர் என்னுடைய குதிரை சில சமயம் நல்லா நடக்கிறது. சில சமயம் நொண்டுகிறது. என்ன செய்வது?" என்று கேட்டான்.
அதற்கு டாக்டர் கூறினார்: "நல்லா நடக்கும் நேரமாகப் பார்த்து விற்றுவிடு!"

○●

✍ **பாரதிய ஜனதா அரசை செல்வி ஜெயலலிதா புரட்டி விட்டாரே?**
சி. குமரன், கொழும்பு.
அன்று 13 நாள் மட்டும் பிரதமராக இருந்த வாஜ்பேய், இப்போது 13 மாதங்கள் பிரதமராக நீடித்திருக்கிறார். 13ற்கும் அவருக்கும் அப்படியொரு பொருத்தம்! ஜெயலலிதாவின் நிபந்தனைகளுக்கு பணியாதது மூலம் வாஜ்பேய் தனது நேர்மையை நிரூபித்து விட்டார்! ஜெயாவுடன் கைகோர்த்தது மூலம் சோனியா தானும் ஒரு வழக்கமான அரசியல் வாதிதான் என்பதை எடுத்துக்காட்டி விட்டார்.

○●

✍ **இந்தியாவும், பாகிஸ்தானும் ஏட்டிக்குப் போட்டியாக ஏவுகணைப் பரிசோதனை நடத்தியுள்ளனவே?**
எம். முபாரக், மன்னார்.
இந்தியப் பிரதமர் பாகிஸ்தானுக்கு பேரூந்தில் சென்றதும் நட்பு மலர்ந்தது, உறவு வலுத்தது என்றெல்லாம் சில விமர்சகர்கள் எழுதுவதை இனிமேலும் நம்பாதீர்கள். பிராந்திய நிலவரம், அமெரிக்காவின் பாத்திரம், இரு நாடுகளது நலன்கள் பற்றிய உண்மையான சேதிகளை அறியாமல், காண்பதே காட்சி என்று நம்பிவிடுவதா? இந்தியா, பாகிஸ்தான் இடையே உண்மை நட்பு மலர தற்போதைக்கு வாய்ப்பே இல்லை. இந்தப் பிராந்தியத்தில் இரு நாடுகளும் கைகோர்ப்பதை அமெரிக்கா விரும்பவே விரும்பாது!

○●

✍ **சிந்தியா! இந்தியாவின் அக்னி ஏவுகணையா? பாகிஸ்தான் ஏவுகணையா? எது ஆபத்தானது?**
எஸ். துஷ்யந்தன், திருமலை.
எல்லாவற்றையும் விட ஆபத்தானது ஜெயலலிதாவின் கோப அக்னி. வாஜ்பேய் அரசு, அக்னியை வான் நோக்கித்தான் ஏவியது. ஜெயலலிதா, வாஜ்பேய் அரசின் கூரை மீதே தன் கோப அக்னியை ஏவிவிட்டார்!

○●

✍ **கொசோவோ இன சுத்திகரிப்பை இலங்கை அரசு கண்டித்திருப்பது எப்படி இருக்கிறது?**
ஜெ. ராஜாராமன், இரத்தினபுரி.
அறிக்கை எப்படி என்று தமிழ் பேசும் மக்களைப் பார்த்து விஷமமாக கண்ணடிப்பது மாதிரியிருக்கிறது!

○●


கவிழ்த்துவிட்டார்களே

✍ **யோவ் சிந்தியா! நிம்மதியாக இருக்க ஒரு வழி கூறுங்களேன்?**
எம். மைதிலி, கண்டி.
எது நமக்கு தேவை என்பதைத் தெரிந்து கொள்ளாமலே, அதை அடைவதற்காக படாதபாடுபடும்போது தான் மன நிம்மதி கெடுகிறது. இதனை நான் சொல்லவில்லை. டான்ஹோல்ட் என்னும் அறிஞர் கூறியிருக்கிறார்.

○●

✍ **சிந்தியா! 'படையப்பா'வில் ரஜினி ஸ்ரைல் எப்படி, எப்படி?**
கே. இஸ்மாயில், ஹெந்தளை.
ஸ்ரைல் தூள்தான்! ஆனால் ஜெயலலிதாவை மட்டம் தட்டுவதாக நினைத்தபடி பெண்களுக்கு உபதேசிக்கும் வசனங்கள் வடிகட்டிய பிற்போக்குத்தனம்! அதிகமாக ஆசைப்படும் ஆணும், அதிகமாக கோபப்படும் பெண்ணும் கூடாதவர்களாம். அப்படியானால் ஆண் மட்டும்தான் கோபப்படலாமா? ஆணுக்கு கோபத்தையும், பெண்ணுக்கு ஆசையையும் நற்குணங்களாக குத்தகை எழுதிக் கொடுக்கிறார் படையப்பா வசனகர்த்தா. இதைவிட மேலும் பல உபதேசங்கள். ரஜினியும் அவலை நினைத்து உரலை இடித்த கதையாக, ஜெயலலிதாவை மனதில் வைத்துக்கொண்டு அந்த வசனங்களை பேசித் தள்ளியிருக்கிறார்.
தமிழ் நாட்டில் பெண்கள் அமைப்புக்கள் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன.


அடேயப்பா

○●

✍ **வலிகாமம் காணி சுவீகரிப்பு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக நிற்காது என்று நீர் கூறியது உண்மையாகி விட்டதே?**
கே. சர்வானந்தா, யாழ்ப்பாணம்.
நாம் என்ன தமிழ்க் கட்சிகள்மீது குரோதத்துடனோ கூறுகிறோம்? அவர்கள் குணமறிந்து தானே கூறுகிறோம்!

○●

✍ **'படையப்பா' ரஜினியின் முந்தைய பட வசூல்களை முறியடிக்குமா?**
எச்.எம். நிலாம்தீன், கொழும்பு-06.
'படையப்பா' ரஜினியின் முன்னைய பட சாதனைகளை உடையப்பா என்றளவுக்கு இருப்பதாக தமிழக முதல்வர் கலைஞர் கூறியிருக்கிறார்.

○●

✍ **சிந்தியா! நீங்கள் இதுவரை கூறிய பதில்களில் சிறந்த பதில் யாது?**
யோ. பாலேந்திரன், கம்பளை.
ஒரு சிற்பியிடம் "நீங்கள் இதுவரை படைத்த சிற்பங்களில் சிறந்தது எது?" என்று கேட்டார்கள்.
அதற்கு அவர்: "அடுத்து நான் செதுக்கப்போகும் சிற்பம்தான்!" என்று கூறினாராம்.

○●

✍ **தமிழ்க் கட்சிகளை திருத்தவே முடியாதா?**
கே. ஷெரீப், மட்டுநகர்.
அவர்கள் திருந்துவதே இல்லை என்று திட்டவட்டமாக முடிவு செய்த பின்னர், எப்படித் திருத்த

✍ **என் குழந்தை எதற்கெடுத்தாலும் பிடிவாதம் பிடிக்கிறான். எப்படித் திருத்துவது?**
மா. விக்னேஸ்வரமலர், திருமலை.
குழந்தைகளிடம் உள்ள சுவாரசியங்களில் ஒன்று பிடிவாதம்தானே! விட்டுப் பிடியுங்கள். அதிகமாகிவிடவும் கூடாது.
பாடசாலையில் ஒரு பையன் தரையில் கிடந்து உருண்டு புரண்டு, வாள் வாள் என்று கத்திக்கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து அந்தப் பையனுடைய அப்பா அங்கே வந்தார்.
"ஏன் பையன் கத்துகிறான்?" என்று கேட்டார்.
"பையன்களுக்கிடையே சண்டை. அதில் ஒரு பக்கத்து காதை கடித்துவிட்டான். அது தான் கத்துகிறான்..!" என்றார் ஆசிரியர்.
"அய்யய்யோ... அப்படியானால் என் பையனை உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக வேண்டுமே!" என்று பதறினார் அப்பா.
"பதறாதீர்கள்! கடிபட்டவன் ஆஸ்பத்திரிக்கு போய்விட்டான். இவன்தான் கடித்தவன். கத்துகிறான்!" என்றார் ஆசிரியர்.
"ஏன்?" என்று கேட்டார் அப்பா.
"இன்னொரு பக்கத்துக் காதும் வேணும் கடிப்பதற்கு, என்று அடம்பிடிக்கிறான்!" என்றார் ஆசிரியர் தன்னுடைய காதை தடவிப் பார்த்துக்கொண்டு.

ஸ்போர்ட்ஸ்

# அணியைக் காப்பாற்றியவர்கள்



**ஒ**ருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கடைசிப் பந்தில் பவுண்டரியோ அல்லது சிக்ஸரோ அணியை வெற்றி பெறச் செய்வதென்பது மிகவும் அபூர்வமாக நடப்பதுண்டு.

இத்தகைய சாதனையை இதுவரை ஆறுபேர் மட்டுமே செய்துள்ளனர். இதில் கடைசியாகத் தனது பெயரை இணைத்துக் கொண்டவர் தென்னாபிரிக்க அணியின் சகல துறை ஆட்டக்காரர் லான்ஸ் குளூஸ்னர்.

நியூஸிலாந்துக்கு அண்மையில் விஜயம் செய்த தென்னாபிரிக்க அணி, நேப்பியர் நகரில் நியூஸிலாந்து அணிக்கெதிராக ஒரு நாள் போட்டியில் விளையாடியது. இப் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றிபெற 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால் ஒரே ஒரு பந்து மட்டும் வீசப்படவிருந்தது. கடைசிப்பந்தை நியூஸிலாந்தின் டியன் நாஷ் வீச, குளூஸ்னர் அதை சிக்ஸருக்கு அடித்து தனது அணியை வெற்றி பெறச் செய்தார்.

இதே போல் 1986ல் ஷார்ஜாவில் நடந்த போட்டியில் பாகிஸ்தானின் ஜாவெட் மியாண்டாட், இந்தியாவின் சேட்டன் சர்மாவின் இறுதிப்பந்தை சிக்ஸருக்கு அடித்து தனது அணியை வெற்றி பெறச் செய்தார்.

இந்த இரு வீரர்கள் மட்டுமே இறுதிப்பந்தில் சிக்ஸர் அடித்துத் தமது அணியை வெற்றி பெற வைத்தனர்.

கடைசிப் பந்தில் பவுண்டரி அடித்து தமது அணியை வெற்றிபெறச் செய்தவர்கள் நால்வர். இங்கிலாந்தின் இயன் பொத்தம், மேற்கிந்தியத் தீவுகளின் இயன் பிஷப், அவுஸ்திரேலியாவின் மைக்கல் பெவன், நியூஸிலாந்தின் கிறிஸ் ஹாரீஸ் ஆகியோரே அந்த நால்வரும்.

## ஓட்டம் குவிப்பு

**இ**துவரை ஆறு தடவைகள் (1975, 1979, 1983, 1987, 1992, 1996) உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இந்த உலகக் கோப்பைப் போட்டிகளின் ஒரு தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார் இந்திய இளம்புயல் சச்சின் டெண்டுல்கர்.

இவர் 1996ல் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டித் தொடரில் 7 போட்டிகளில் 532 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்தில் இருக்கிறார். இவரது சராசரி ஓட்டங்கள் 87.16.

உலகக் கோப்பைப் போட்டிகளில் ஒரே தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்த முதல் 10 வீரர்களின் விபரம் இதோ:

| வீரர் | வருடம் | போட்டிகள் | ஓட்டங்கள் | சராசரி |
|---|---|---|---|---|
| 1. சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) | 1996 | 7 | 523 | 87.16 |
| 2. மார்க் வோவ் (அவுஸ்திரேலியா) | 1996 | 7 | 484 | 80.66 |
| 3. கிரஹாம் கூச் (இங்கிலாந்து) | 1987 | 8 | 471 | 58.87 |
| 4. மார்ட்டின் குரோ (நியூஸிலாந்து) | 1992 | 9 | 456 | 114.00 |
| 5. அரவிந்த டி சில்வா (இலங்கை) | 1996 | 6 | 448 | 89.60 |
| 6. டேவிட் பூன் (அவுஸ்திரேலியா) | 1987 | 8 | 447 | 55.87 |
| 7. ஜாவெட் மியாண்டாட்(பாகிஸ்தான்) | 1992 | 9 | 437 | 62.42 |
| 8. ஜெஃப் மார்ஷ் (அவுஸ்திரேலியா) | 1987 | 8 | 428 | 62.42 |
| 9. பீட்டர் கேர்ஸ்டன் (தென்னாபிரிக்கா) | 1992 | 8 | 410 | 68.33 |
| 10. விவியன் றிச்சர்ட்ஸ் (மே.இந்தியத்தீவுகள்) | 1987 | 6 | 391 | 65.16 |

## இவர்தான் அவர்


சிவகுமார்



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 58

ஆண்டவர், தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சமுதாயம் விடுத்த கோரிக்கையை நிறைவேற்றத் திருவுளம் கொண்டார். சதிகாரர்களுக்கு உரிய தண்டனை வழங்கவும் ஆண்டவர் திடசித்தம் கொண்டார். ஆண்டவருடைய தூண்டுதலினாலேயே அப்போது மன்னர் அர்த்தக்சஸ்தா, வரலாற்றுப் பதிவேடுகளைப் படிக்க வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

தனது உயிரைச் சதிகாரர்களிடமிருந்து பாதுகாத்தவரான மொர்தக்காய் அதுவரை சிறந்த முறையில் கௌரவிக்கப்படவில்லை என்பதனையும், அதே வேளையில்தான் மன்னர் உணர்ந்தார். அவரை அழைத்து சிறப்பளிக்க வேண்டும் என்று மன்னர் கருதிய அதே கணத்தில், ஆமான் அரசரைப் பார்க்க வந்திருந்தமைக்கான தகவலும் மன்னருக்கு வந்து சேர்ந்தது. உடனடியாக ஆமானை உள்ளே அனுப்புமாறு கூறினார்.

ஆமான் அரசரிடம் வந்தது, மொர்தக்காயை கொல்வதற்கான உத்தரவைப் பெறுவதற்காகவாகும். ஆனால் ஆண்டவரின் எண்ணம் அதற்கு முற்றிலும் மாறாக அமைந்திருந்தது.

ஆமான் வந்ததும், அவனிடமே மன்னர் ஒரு வினாவை விடுத்தார். "ஆமான் அரண்மனையில் அரசரும் ஏனையோரும் மெச்சும் அளவுக்கு அரும்பணி புரிந்த ஒருவருக்கு எந்த வகையில் பாராட்டு அளிக்கலாம்?" என்று கேட்டார்.

ஆமான், மன்னர் தன்னையே பாராட்ட எண்ணுகிறார் என்று கருதினான். ஆகவே அரசரால் அளிக்கப்படும் உயர் விருது எவ்வாறிருக்க வேண்டும் என்பதைத் தானாகவே வகுத்து, மன்னரிடம் கூறலானான்.

"அரசே! தாங்கள் மதிப்பளித்து கௌரவிக்க விரும்பும் ஒருவருக்கு, தாங்களே அணியும் அணிமணிகளையும் பட்டாடைகளையும் தரலாம். அவர் அத்தகைய ஆடை அணிகளை அணிந்ததும், அரசருக்குரிய குதிரையில் அமர்த்தி, அவரை நகரவீதிகளில் பவனி வரவைத்து, மக்கள் அனைவரும் அவருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று பணிக்கலாம்!"

இதனைக் கேட்ட மன்னர், "அப்படியானால் அத்தகைய கைங்கரியத்தை, மொர்தக்காய்க்கு நீரே செய்துவிடும். அவருக்கு உம்கையாலேயே ஆடை அணிகளை அணிவித்து, வீதிகளில் பவனி வர உடன் ஏற்பாடு செய்யும்! மன்னருக்குத் தீங்குகள் எதுவும் ஏற்படாமல் காத்து-பெருமைப்படுத்தும்அனைவருக்கும் இத்தகைய அரச மரியாதையே இனிமேல் வழக்கப்படும்!" என்றார்.

## ஆமானின் தடுமாற்றம்

மன்னர் கூறியவற்றைக் கேட்ட ஆமான் என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றான். தனது கையாலேயே தூக்கிலிட்டு, கொன்றொழிப்பதற்குத் திட்டமிட்ட ஒருவரை, தன் கையாலேயே அரசருக்குரிய ஆடை அணிகளை அணிவித்து நகரத் தெருக்களில் பவனியாக அழைத்துச் செல்ல நேர்ந்தால் எப்படியிருக்கும்? தனது மனவேதனையையும் அவமானத்தையும் எவ்வாறு அடக்குவது என்று அறியாமல் தவித்தான். மன்னரிட்ட ஆணைக்கு மறுப்புத் தெரிவிக்கவும் அவனால் முடியவில்லை.

அர்த்தக்சஸ்தா அரசரிடம் தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாகவும் தான் கூறுவது எதுவானாலும் அதனைத் தட்டாமல் மன்னர் ஏற்றுக் கொள்வார் என்றும் ஆமான் அன்றுவரை பெருமையுடன் இருந்தான். தனது மனைவி கோசராவிடமும் குடும்பத்தாரிடமும் நண்பர்களிடமும் அவ்வாறே கூறிவந்தான். அரசரின் பட்டத்தரசியான எஸ்தர்- அவர் மன்னருக்குக் கொடுத்த விருந்தில் மன்னருடன் தான் மட்டுமே பங்கு கொண்டிருந்ததைப்பற்றியும் ஆமான் தன்னைச் சார்ந்தவர்களிடம் பெருமையாகக்கூறி மகிழ்ந்தான். மொர்தக்காயைத் தூக்கிலிடுவதற்கும் மன்னர் எத்தகைய மறுப்பும் கூறமாட்டார் என்றும் இறுமாப்புடன் இருந்தான் ஆமான்.

ஆண்டவரின் சித்தம் ஆமானுடைய எண்ணங்களுக்கு முற்றும் மாறாக அமைந்துவிட்டது. தானாகவே மொர்தக்காயைத் தேடிச் சென்றான். அரண்மனையில் ஒரு புறத்தில் அவரை இருத்தி ஏவலாளர்களைக் கொண்டு வாசனைத் திரவியங்களைத் தடவி, ஆடைகளை அணிவித்து, அணிகளைப் பூட்டி, அரசருக்குரிய குதிரையில் அமர வைத்து நகர வீதிகளில் பவனி வரச்செய்தான்.

அடுத்த நாள் இரவும் அரசி எஸ்தர் அளிக்கும் விருந்துக்கும் மன்னருடன் ஆமான் போக வேண்டியிருந்தது. உரிய நேரம் வந்ததும் அரைமனதுடன் விருந்துக்குப் புறப்பட்டுச் சென்றான். முதல் நாள் கொடுக்கப்பட்ட உணவு வகைகளைவிட இன்று கொடுக்கப்பட்ட விருந்தில் புதிய பல்சுவை உண்டிகள் பரிமாறப்பட்டன.

திராட்சை மது மிகவும் உருசியாக இருந்தது. மன்னர் சுவைத்துப் பருகினார். மிக்க மகிழ்ச்சியடைந்தவராக, எஸ்தரை தன்னிடம் அழைத்தார். "எஸ்தர்....! என் அன்பே....! என்னை மகிழ்வித்தாய்! உனக்கு எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்! இந்த இராச்சியத்தில் பாதி வேண்டுமானாலும் தருகிறேன்! உனக்கு என்ன வேண்டும்.... சொல்!" என்றார்.

# சதிகாரனுக்கு நேர்ந்த கதி!



ஒரு குற்றவாளி-சதிகாரன் என்பதை அவனுடைய மருண்ட பார்வையே மன்னருக்கு உணர்த்திவிட்டது.

## எஸ்தர் உரைத்த உண்மைகள்

எஸ்தர், மன்னருடைய தாள் பணிந்து தொடர்ந்து பேசலானார்:

"மாமன்னவரே! என்னுடைய உயிரையும் என்னைச் சார்ந்தவர்களுடைய உயிரையும் பறிப்பதற்கு ஆமான் திட்டமிட்டிருந்தான். நானும் ஒரு யூத இனத்தைச் சேர்ந்தவள். என் இனமான யூதர்கள், தங்கள் ஆட்சிக்குட்பட்ட நூற்றிருபத்தேழு மாநிலங்களிலும் செறிந்து வாழ்கிறார்கள். இவர்கள் அனைவரையும், இந்த ஆண்டு பன்னிரண்டாம் மாதமாகிய அதார் மாதத்தில் கொன்றொழித்துவிட வேண்டும் என்று தாங்கள் ஆணை பிறப்பித்திருப்பதாக-தங்கள் கணையாளியைப் பதித்து சகல மாநில ஆளுநர்களுக்கும் ஆமான் ஓலை அனுப்பி வைத்துள்ளான்.

யூதர்களில் மொர்தக்காய் போன்ற அரச விசுவாசிகள் அநேகம்பேர் உள்ளனர். அவர்கள் அரச நிர்வாகத்தில் மன்னருக்கு மிகுந்த ஒத்தாசை புரிந்து வருகிறார்கள். மொர்தக்காய் போன்றவர்கள் தங்களுடன் இருந்தால், தங்களைக் கொல்லவோ, ஆட்சியைக் கைப்பற்றவோ தனக்கு முடியாமற் போய்விடும் என்று ஆமான் கருதுகிறான். மேலும் தங்களை கொலை செய்வதற்கு ஆமான் போட்டிருந்த திட்டத்தை மொர்தக்காய் முறியடித்து விட்டமையினால் அவர் மீதும் அவர் சார்ந்த இனத்தின் மீதும் பழி தீர்த்துக் கொள்ளவே ஆமான் ஆசைப்பட்டான். தாங்கள்தான் என் இனத்தையும் என்னையும் காப்பாற்றியாக வேண்டும்!"

இவ்வாறு எஸ்தர் கூறியவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மன்னரால் உடனடியாக எதனையும் செய்யவோ சொல்லவோ முடியவில்லை. 'ஒரு நச்சுப்பாம்பினை என்மடியில் இதுவரை கட்டிவைத்திருந்தோமே!' என்று திகைப்படைந்தார். இருக்கையிலிருந்து எழுந்து அரசி எஸ்தரின் அந்தப்புரத்துடன் இருந்த பூங்காவிற்குள் சென்று சிந்தித்தவாறு உலாவினார். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக மன்னர் அரசி எஸ்தரின் அந்தப்புரத்துள் காலடி எடுத்து வைத்தார். அங்கு அவர் கண்ட காட்சி அவருடைய கோபத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

## ஆண்டவரின் தீர்ப்பு

அரசி எஸ்தர் தனது படுக்கையில் சாய்ந்திருந்தார். அதே படுக்கையில் அரசியின் கால்மாட்டில் ஆமான் ஏறி, அரசியின் கால்களைக் கட்டிப்பிடித்தபடி இருந்தான்.

உண்மையில்- தான் செய்த தவறுக்காக மன்னிக்குமாறும் அரசரிடம் உயிர்ப்பிச்சை அளிக்குமாறும் வேண்டியும்தான் ஆமான் அரசி எஸ்தரிடம் மன்றாடினான். ஆனால் பட்டத்தரசியின் படுக்கைமீது ஆமான் ஏறியிருந்ததைக் கண்ட மன்னர் எரிமலையானார். தனது வாளை உருவி ஒரேவெட்டில் ஆமானை வெட்டிவிட நினைத்தார். அரசியின் அந்தப்புரத்தைக் கொலைக்களமாக்கலாகாது என்று கருதியமையினால் உருவிய தனது வாளை உறையிலிட்டார்.

# இராஜகுமாரன்

"மாமன்னவரே! இன்று பல உண்மைகளைத் தங்களிடம் கூறவேண்டியவளாக இருக்கிறேன். தங்கள் உயிரைப் பறிக்கத் திட்டமிட்டவன் தங்களுடனேயே இருக்கிறான். தங்களைக் கொலை செய்வது எவ்வாறு, என்று திட்டமிட்ட இருவரையும் எனது வளர்ப்புத் தந்தையான மொர்தக்காய்ப் பிடித்துத் தந்தார். ஆனால் அவர்களிருவரையும் விசாரணை செய்யாமல் கொன்று விட்டீர்கள். ஆனால் அவ்விருவரும் உண்மையில் வெறும் அம்புகளே! அவர்களை, தங்களைக் கொன்றுவிடுமாறு ஏவியவன் இதோ இந்த ஆமான்தான்!"

எஸ்தர் அரசி இவ்வாறு கூறியதும் மன்னர் சினங்கொண்டு எழுந்தார். இத்தனை காலமும் அரண்மனையில் தனது விசுவாசியாக நடந்தவன்; அரசரின் முத்திரை மோதிரத்தையே அணிந்து, அரசருக்குப் பதிலாக ஆவணங்களில் மோதிர அடையாளத்தைப் பதிப்பிக்கும் உரிமை பெற்றவன்; 'இவனா என்னைக் கொலை செய்ய எத்தனித்தான்?'

சந்தேகப் பார்வையுடன் ஆமான் பக்கம் மன்னர் திரும்பினார். ஆமான் உடலெல்லாம் நடுங்க, வியர்த்துத் தள்ளாடினான். அவன்

மொர்தக்காயைத் தூக்கிலிடுவதற்காக ஆமான் தன்னுடைய வீட்டிலேயே 50 முழத் தூக்கு மரம் தயார் செய்திருப்பதை அமைச்சர் ஒருவர் கூறியிருந்தார். அதே தூக்கு மரத்தில் ஆமானைத் தூக்கிலிடுமாறு ஆணை பிறப்பித்தார். ஆமானுடைய சொத்துக்களனைத்தையும் பறிமுதல் செய்து மொர்தக்காயிடம் வழங்குமாறு கட்டளையிட்டார். ஆமானிடமிருந்த அரசரின் முத்திரை மோதிரத்தையும் கழற்றி மொர்தக்காயின் கையில் அணிவித்தார்.

அரசர் அர்த்தக்சஸ்தாவின் ஆணைக்குட்பட்டிருந்த சகல மாநில ஆளுநர்களுக்கும்- ஆமானால்- யூதர்களைக் கொலை செய்யுமாறு அனுப்பிவைக்கப்பட்ட அரசாணையை உடனடியாகத் திரும்பப்பெறுமாறும் பணிப்புரை வழங்கினார்.

ஆண்டவர் தமது வேண்டுகோளுக்கு உரிய நல்விடை அருளியமைக்காக அரசி எஸ்தரும், மொர்தக்காயும் நன்றி செலுத்தியதுடன் பிரார்த்தித்தனர். எங்கும் பரந்து கிடந்த யூதமக்களும் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 55 விடை** ☛ ஆபகூக்கு என்ற இறைவாக்கினர்.

**பரிசு பெறுவோர்:**

1. வி.வினோதினி, 93, தேசிகர்வீதி, காரைதீவு-10.
2. கே.நித்தியா, களுவன்கேணி-01, செங்கலடி.
3. சி.கணேஷ், புதையல்பிட்டி, நெளுக்குளம், வவுனியா.
4. மா.சேகர், 113, 7ம் வீதி, மஸ்கெலியா.
5. எ.எம்.பி.ராணி, 3,மஹாகும்பர வீதி, நாவலப்பிட்டி.

**திருமறை 58** வினா:- மொர்தக்காயைத் தூக்கிலிட ஆமான் தயாரித்த தூக்கு மரம் எங்கே இருந்தது?

மே. 01க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 58–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : தமிழ்க்கட்சிகளது கூட்டு |
| தொழில் | : அறிக்கைவிடுவது மகஜர் அனுப்புவது. |
| பொழுதுபோக்கு | : வெந்ததை தின்று, வாயில் வந்ததைப் பேசுவது. |
| சாதனை | : பொதிக்கு கொடுத்த யோசனையை குப்பைக் கூடையில் போட்ட பின்னரும் பொறுமை காப்பது. |
| சோதனை | : கூட்டணி |
| வேதனை | : கொடுக்கும் அறிக்கைகளை எவரும் கணக்கெடுக்காதது. |
| எதிரிகள் | : அடிக்கடி மாறுபடும். |
| நண்பர்கள் | : அவ்வப்போது நலனுக்கு ஏற்றவர்கள்! |
| இலட்சியம் | : தொடர்ந்து தனிக்கட்சிகளாக உயிர்வாழ்வது. |

# இது யாரால் யாருக்கு?

இக்கடிதம் யாரால் யாருக்கு எழுதப்படக்கூடியது என்பதை கண்டு பிடிக்கும் பொறுப்பு வாசகர்களுடையது.

**புதிர்பொன்ராசா**

மாண்புமிகு....

வணக்கம். நாம் கூட்டாக செயற்படுவதையிட்டு உங்களுக்கு குபீர் சிரிப்பு வந்திருக்கக்கூடும்.

தனியாக சந்திக்கும்போது நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொருவர் பற்றி உங்களிடம் கோள் மூட்டுவதை நீங்கள் மட்டும்தானே அறிவீர்கள்.

கூட்டாக நாம் தயாரித்த அறிக்கையில் உள்ள வசனங்கள் பத்திரிகைகளுக்கு கொடுப்பதற்காக தயாரிக்கப்பட்டவை.



எங்கள் உண்மையான கோரிக்கைகள் என்னவென்பதை நாம் தனியாக சந்திக்கும்போது ஏற்கனவே கூறியிருக்கின்றோம்.

நாங்கள் கொடுத்த பட்டியலில் உள்ளோருக்கு இன்னும் வேலை வாய்ப்பு தரப்படவில்லை. கோட்டாக்கள் தரப்படவில்லை. மீன்பிடி ஆலோசகர் பதவி போன்று, கார்பிடி ஆலோசகர், மான்பிடி ஆலோசகர் போன்ற பதவிகள் காலியாக இருப்பதாக அறிந்தோம்.

அப்பதவிகளை தருவீர்களேயானால் கட்சிக்குள் எமக்கு விசுவாசமான சிலரையாவது உருவாக்க உதவியாக இருக்கும்.

எங்கள் அறிக்கை பற்றி நீங்கள் கோபப்பட மாட்டீர்கள் என்று நம்புகிறோம். மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னரே எமது அறிக்கையை வெளியிட்டோம் என்பதை அதிலுள்ள திகதியைப் பார்த்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

எக்கட்டத்திலும் தங்களுக்கு இடையூறு செய்யும் விதமாக எமது நடவடிக்கைகள் அறிக்கைகள் அமையவில்லை என்பதை தயவு கூர்ந்து தாங்கள் மறந்துவிடக்கூடாது.

பத்திரிகைகளில் செய்திகள் பெரிதாக வெளியாகி, மக்களும் அந்தப் பிரச்சனைகளில் ஆர்வம் காட்டும்போது நாம் அவற்றைப் பற்றி பேசியாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நாமாக எதனையும் பேசவில்லை.

உதாரணமாக, மடுவில் நமது படையினர் நின்றமையைப் பற்றி நாமாக எதுவும் பேசவில்லை. ஆனால் அது பாரதூரமான பிரச்சனையாக எம்மையும் மீறி உருவாகிவிட்டதே. நாம் என்ன செய்வது?

ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும். பாடுற மாட்டை பாடிக்கறக்கணும் என்பார்கள்.

மடுப் பிரச்சனை பெரிதாகிவிட்டதால் அதனைப் பற்றி நாமும் பேசிப் பேசியே அதனை அமுக்குவதைத் தவிரவேறு வழியில்லை. நாம் பேசாமல் இருந்தால் மக்கள் எம்மை ஏசுவார்கள்.

ஏசுவதால் எமக்கென்ன? ஆனால் அடுத்த தேர்தலில் நாம் மறுபடி வெற்றி பெற்றால்தானே மீண்டும் உங்களுக்கு இன்று போல் ஆதரவு தரலாம். எனவே உங்களுக்கு நாம் உதவ எங்களுக்கு மக்களிடையே ஒரு தளம் வேண்டாமா?

அதனால்தான் அவ்வப்போது இப்படியான அறிக்கைகளை விடவேண்டிய கசப்பான கட்டாயம் ஏற்படுகிறது.

மடுவில் புலிகளும் நடமாடக்கூடாது என்று நாங்கள் அறிக்கையில் கூறியுள்ளோம். அதிலிருந்தே எங்கள் புலி எதிர்ப்பை தாங்கள் இனம் கண்டு கொள்ளலாம். புலிகளை அங்கு நடமாடவிடாது தடுப்பதுதான் எமது தலையாய நோக்கம்.

புலிகள் எம்மைக் கொன்றால் அதனை சகோதரப் படுகொலையாக கூறுவோமே தவிர, புலிகளை நாம் அந்நியராகவே கருதுகிறோம். அதனால்தான் மடுவில் ஆயுதம் இன்றிக்கூட புலிகள் நடமாடக்கூடாது என்பதை வலியுறுத்தி இருக்கிறோம்.

புலிகளை நாம் சகோதரர்கள் என்று கூறுவதாக நினைத்து எம்மீது ஏற்கனவே உள்ள சந்தேகப்பார்வையை அதிகப்படுத்தி விடாதீர்கள்.

மக்களிடம் அனுதாபம் தேடுவதற்கே 'சகோதரப் படுகொலை' என்ற வார்த்தைகளை நாம் பிரயோகிக்கிறோமே தவிர படையினரையே எமது சகோதரர்களாக கருதுகிறோம். அதனால்தான் அவர்களை மனம் நோகக்கூடியவாறு நாம் கண்டித்ததே இல்லை என்பதை நீங்கள் நம்பித்தானாக வேண்டும்.

எமது அறிக்கைகளை நாம் உயிர் வாழ்வதற்கான முயற்சிகளாக மட்டும் கருதிக்கொண்டு, தயவு கூர்ந்து காலியான பதவிகளை நிரப்பும்போது எம்மைப் பற்றியும் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தாழ்மை அதிகமுள்ள,

..............................

# செம்மணியில் கல் ஆராய்ச்சி

செம்மணிப் புதைகுழிப் பகுதியில் மண் ஆராய்ச்சி, தாவர ஆராய்ச்சி போன்றவை முடிவடைய மேலும் ஆறுமாதங்கள் தேவைப்படும்

அதன் பின்னர் முக்கியமான ஒரு ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும். செம்மணிப் பகுதியில் உள்ள கற்கள் பத்திரமாக சேகரிக்கப்பட்டு விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டுவரப்படும்

இக்கற்கள் எக்காலத்தைச் சேர்ந்தவை என்று கண்டுபிடித்து முடித்துவிட்டே புதைகுழிகள் தோண்டப்படும்!

கற்களை ஆராயும்போது முட்கள் தென்பட்டால் அவையும் பின்னர் ஆராயப்படும்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

Regi[illegible] a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)
www.padippakam.com




பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO-11
செட்டியார் தெரு. கொழும்பு
436331


## அதிசய மலர்



[illegible] படத்தில் காணப்படும் இந்நாவல் நிறமலர்கள் வசந்த காலத்தில் மட்டுமே மலர்கின்றன. இவை சூழலில் காணப்படும் தட்ப வெப்பநிலைக்கேற்ப மலர்ந்தும் மூடியும் விடுகின்றன.

இவை 'குரோக்கியுசஸ்' எனப்படும் வர்க்கத்தைச் சேர்ந்தவை. 16ம் நூற்றாண்டில் [illegible] ரோமர்கள் இம்மலர்களை ஏராளமாகப் பயிரிட்டனர். இந்த மலரின் [illegible] பாதெனில், குளிர் காலத்தில் [illegible] இதன் செடிகள் வெளியே [illegible] வெளிக்காட்டினாலும், இவற்[illegible] விருத்திக்கான விதைகளை [illegible] க்குக் கீழேயே உற்பத்தி செய்[illegible]. வெளியே நிலவும் கடும் குளிரி[illegible] து விதைகளைக் காத்துக் கொள்[illegible] இத்தகைய முன்னேற்பாடு.

[illegible]ந்தச் செயற்பாடு காரணமாக [illegible] உலக சாதனை மலராக கின்ன[illegible] பதிவு செய்துள்ளனர்.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## புயல்

பார்த்தாலே பயமுட்டும் பேயாட்டம் இதுதானோ என்று எண்ணி விடாதீர்கள்! இதுவும் ஒரு நடனம் தான்! உலக சாதனையை நிலைநாட்டிய நடனங்களில் ஒருவிதம் இது.

பிரிட்டனின் பிரசித்தி பெற்ற 'புரோடிகி' என்ற நடனக் குழுவினர் தங்கள் நடனங்கள் அடங்கிய 'விடியோ ஆல்பத்தை' அண்மையில் வெளியிட்டனர். வெளியிடப்பட்ட ஒரே வாரத்தில் இந்த ஆல்பம் 3 இலட்சத்து 17 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத்தது.

அமெரிக்காவிலும் முதல் வாரத்தில் இரண்டு இலட்சம் பிரதிகள் விற்கப்பட்டுள்ளன. இவை தவிர கனடா, அவுஸ்திரேலியா, ஜெர்மனி, ஒஸ்ட்ரியா மற்றும் நோர்வே போன்ற நாடுகளிலும் விற்பனையில் சாதனை புரிந்து வருகிறது இந்த ஒலி-ஒளி நாடா. படத்தில் பயங்கரமாகக் காணப்படுபவர் கீத் ஃபிலின்ற் என்ற நடனக் கலைஞர். இந்நடனத்துக்காக தனது தலை முடியை விசித்திரமாகக் கத்தரித்து, ஆடை அணிகளையும் அதற்கேற்றாற்போல் அணிந்து நடமிடுகிறார்.



புயல்

## சாதனை ரோபோ

'குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு' என்பார்கள். ஓர் இனத்தை அழிப்பதற்கு அதே இனத்தைச் சார்ந்தவர்களையே பயன்படுத்துவதும் மேற்படி கூற்றுக்குச் சமமானதுதான்.

ஏதாவது ஓரினப் பூச்சிகளைப் பூண்டோடு அழிக்க வேண்டுமானால், அதற்கு ஏதாவது ஒரு பூச்சி நாசினியைப் பயன்படுத்தியாக வேண்டும். இத்தகைய நடைமுறையில் ஏனைய சில பூச்சிகளும் அழிந்து போகும். இதனைத் தவிர்க்க புதிய ஆய்வுகள் ஜப்பான் தலைநகரமான டோக்கியோவிலுள்ள இரு பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டன.

அந்தப்பூச்சி வடிவத்தில் ஒரு செயற்கை ரோபோவைத் தயாரித்தனர். இதற்கு ஆண் பூச்சியின் இயல்பான மணம் போன்றவற்றையும் ஊட்டினர். பெண் அந்தப் பூச்சிகள் காணப்படும் இடத்தில் இந்தச் செயற்கை ஆண் பூச்சியை நடமாடவிட்டனர். இதன் நடவடிக்கைகளை அறிய- இதற்கு சமிக்ஞைகளை வெளியிடும் உணர் கொம்புகளும் செயற்கை மூளையும் பொருத்தப் பட்டிருந்தன.

பெண் அந்தப் பூச்சிகள், இந்தச் செயற்கைப் பூச்சியைக் கண்டு-பாலியல் கவர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு வகை சுரப்பினை சுரக்க ஆரம்பித்தன. செயற்கை ஆண் பூச்சியின் செயற்கை மூளையில், பெண்பூச்சி சுரந்த பதார்த்தத்தின் மணம் பட்டதும், செயற்கைப் பூச்சி மிகவேகமாக அம்மணம் வந்த திசையினை நாடி ஓடியது.



இவ்வாய்வினைத் தொடர்ந்து சாதாரண கரப்பான் பூச்சியின் உடலின்மீது நுண்ணிய மின் அழுத்தம் கொண்ட பொதியை வைத்து ஆய்வுகளை விஞ்ஞானிகள் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய ஆராய்ச்சிகளில் ஜப்பான் விஞ்ஞானிகள் முன்னணி வகிக்கின்றனர். கரப்பான் பூச்சி ஆராய்ச்சி- டோக்கியோ பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் 1997 ஜனவரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

இத்தகைய புதிய உத்திகளைப் பயன்படுத்தி பயிர்களை அழிக்கும் பூச்சிகளை சுலபமாக அழித்து விடலாம்.

## திறமை

உலக சாதனை ஒன்றை நிலை நாட்ட வேண்டும் என்று சங்கற்பம் பூணுபவர்கள், அதற்காகத் தங்கள் அரிய உயிரையும் பணயம் வைக்கத் தயங்க மாட்டார்கள்.

அத்லாந்திக் பெருங்கடலை ஒரு சாதாரண இயந்திரப் படகில் 'மிகக்குறுகிய காலத்தில் கடந்தவர்' என்ற உலகசாதனையை ரொம் ஜென்ட்றி (விருதினைக் கையிலேந்தி நடுவில் நிற்பவர்) என்பவர் 1989ல் நிலைநாட்டினார். இதற்காக இவர் எடுத்துக் கொண்டகாலம் 2 நாட்கள் 14 மணி 7 நிமிடங்கள்.



திறமை

கடலோடியான கிறிஸ்தபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த 500வது ஆண்டைக் குறிக்குமுகமாக, அத்லாந்திக் கடலைக் கடக்கும் போட்டி ஒன்று 1992ல் நடைபெற்றது.

அப்போட்டியில் ரொம் ஜென்ட்றி நிலைநாட்டிய சாதனையை [illegible] பிரித்தானிய நாட்டைச் சேர்ந்த ஒருவர் தனது 'டெண்ட்றியோ' என்ற படகின் மூலம்-59 மணி 34 நிமிடங்களில் அத்லாந்திக் கடலைக் கடந்து முறியடித்து விட்டார்.

ரொம் ஜென்ட்றிக் 1994ல் மீண்டும் கடல் கடக்கும் சாதனையை நிலை நாட்டத் தீர்மானித்து அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. பயிற்சியின்போது ஏற்பட்ட ஒரு விபத்தில் சிக்கி கோமா நிலையை அடைந்துவிட்டார். 1998ல் அவர் கோமா நிலையிலிருந்து மீளாமலே மரணமானார். சாதிக்கும் மனதோடு சந்தித்த மரணம்!

## ஆட்ட நாயகன்

இந்திய அணியின் சிங்கக்குட்டிக்கு அடுத்தடுத்து சோதனைகள். முதுகுவலியால் அவதிப்பட்டு இலண்டனில் சிகிச்சை பெற்றுத் திரும்பினார்.

அடுத்ததாக சமீபத்தில் விபத்து ஒன்றில் சிக்கி உயிர் தப்பியதாக இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

இச் செய்திகள் எல்லாமே இந்திய அணியின் இரசிகர்களின் இதயத்துடிப்பை அதிகமாக்கும் செய்திகள்தான்.

உண்மையில் கார் விபத்தில் பெரிதாக ஒன்றுமில்லை. சிறு உரசல்தான். டெண்டுல்கர் [illegible] என்பதால் பத்திரிகைகள் பரபரப்பு கருதி செய்தியை பெரிதாக்கி வெளியிட்டுவிட்டன.





அந்தளவுக்கு இரசிகர்களிடையே அமோக செல்வாக்குப் பெற்ற இளம் சிங்கம் டெண்டுல்கர். சமீபத்தில் சார்ஜாவிலும் இறுதிப் போட்டியில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோற்றுவிட்டது. இந்நிலையில் டெண்டுல்கர் மீதே இந்திய அணியின் இரசிகர்களது எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் குவிந்துள்ளது. கடந்த உலகக் கோப்பைப் போட்டிகளில் இந்திய அணி பிரமாதமாக எதனையும் சாதிக்கவில்லை. ஆயினும் அந்த உலகக் கோப்பை போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர் என்ற பெருமை டெண்டுல்கரைச் சேர்ந்தது.

இம்முறை உலகக் கோப்பைப் போட்டியில் ஆட்டநாயகன் டெண்டுல்கர்தான் என்பது பலரது கணிப்பு. ஆட்டநாயகன் விருது பெறுவதிலும் உலக சாதனை படைத்துள்ளார் டெண்டுல்கர். 32 தடவைகள் இதுவரை ஆட்டநாயகனாகத் தெரிவாகியுள்ளார். இதற்கு முன்னர் விவியன் ரிச்சர்ட்ஸ் 31 தடவை ஆட்டநாயகன் விருது பெற்றிருந்தார்.

1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ம் திகதி இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில்தான் முதன் முதலில் ஆட்டநாயகன் விருதைப் பெற்றிருந்தார். இந்த ஆட்டநாயகன் இந்திய அணி ஆட்டம் காணாமல் தடுத்து நிறுத்துவாரா?

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் முகேஸ்

09.04.1999



காங்கேசன்துறையைச் சேர்ந்த முரளிதரன்-வசந்தி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் முகேஸ் தனது முதலாவது பிறந்ததினத்தை 09.04.99 அன்று கனடா மொன்றியலில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா பெரியம்மா, மாமா, அத்தைமார், அண்ணா, அக்கா, மச்சான், மச்சாள் மார், சின்ன அம்மப்பா, சின்ன அம்மம்மா, மாமா, சித்திமார் மலேசியாவில் இருக்கும் மாமா, அத்தை, மச்சாள்மார், சுவிற்ஸர்லாந்தில் இருக்கும் சித்தப்பாமார், சித்தி, பிரான்சில் இருக்கும் மாமா இலங்கையில் இருக்கும் குட்டிச்சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, சித்திமார், மாமா மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் முகேஸை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:-
பொ.கணேசபிள்ளை, கல்கிசை



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் [illegible] நாவலயில் உள்ள சமனல அச்சகத்தில் ஏப்ரல் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
படிப்பகம்